பக்கங்கள்: இருபத்துநான்கு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 புரட்டாதி 19 செவ்வாய்க்கிழமை (05.10.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 313

# கிழக்கில் அரச காணிகளில் அத்துமீறிக் குடியேற்றத் தடை


## மாகாண அதிகாரிகளுக்கு மஹிந்த கடுமையான உத்தரவு

கொழும்பு, ஒக்ரோபர் 05

**கிழக்கு மாகாணத்தில் உள்ள அரச காணிகளில் அத்துமீறிய குடியேற்றத்தைத் தடுத்து நிறுத்துமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மாகாண அரச அதிகாரிகளுக்கு நேற்றுக் கடுமை யான உத்தரவைப் பிறப்பித்தார்.**

கிழக்கு மாகாண அபிவிருத்திக் குழுக் கூட்டம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் திருகோணமலை கடற்படைத் தலைமை யகத்தில் நேற்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கிழக்கு மாகாண ஆளுநர், முதலமைச்சர் சிவநேச துரை சந்திரகாந்தன், அமைச்சர்களான ஏ.எல்.எம்.அதாவுல்லா, பி.தயாரட்ன, பிரதி அமைச்சர்களான விநாயகமூர்த்தி முரளிதரன், எம்.கே.டி.எஸ்.குணவர்தன, முஸ்லிம் காங்கிரஸ் பொதுச் செயலர் ஹசன்அலி, நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.பி.பஷீர் சேகுதாவுத் மற்றும் சமீபத்தில் அரசு பக்கம் தாவிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரான பொடியப்பு பியசேன, முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர்களான அமீர் அலி, நஜீப் ஏ. மஜீத், மாகாண அரச அதிபர்கள், பிரதேச செயலர்கள் (24 ஆம் பக்கம் பார்க்க)



கிழக்கு மாகாணத்துக்கான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று ஜனாதிபதி மஹிந்த தலைமையில் நடைபெற்ற போது கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் வணக்கம் வைக்கிறார்.

### உள்ளே

**ஆயிரம் பாடசாலை களில் மும்மொழிக் கல்வி அறிமுகம்**
வெகு விரைவில் அரசினால் மேற்கொள்ளப்படவிருக்கும் கல்வி மேம் பாட்டுத் திட்டங் களில் ஒன் றாக 1000 சிரேஷ்ட பாடசாலைக ளில் மும்மொழிக் கல்விமுறை அறிமுகப்படுத்தப் படவுள்ளதெனக் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித் துள்ளார். பக்கம் 5

**தமிழ் ஆசிரியர்கள் சம்பளம் கோரி போராட்டம்**
சம்பள அதிகரிப்பும், அதற்கான நிலுவை யும் பெற்றுக்கொள்வதற்காக விரைவில் ஜனநாயக ரீதியாகத் தொழிற்சங்கப் போராட்டத்தையும் நடத்த வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். பக்கம் 5

**11,788 ஹெக்ரேயர் மேலதிக காலபோக நெற்செய்கை**
யாழ். மாவட்டத்தில் இம் முறை 11 ஆயிரத்து 788ஹெக்ரேயர் நிலப்பிரப்பில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப் படும்என எதிர்பார்க்கப் படுகின்றது. பக்கம் 11

**அயோத்தி விவகாரத்துக்கு தீர்வுகாண முயற்சி**
அயோத்தி இராமஜென்ம பூமி வழக்கில் அலாகாபாத் உயர் நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியுள்ள நிலை யில், பிரச்சினைக்குச் சமரசத் தீர்வு காண இந்து, முஸ்லிம் அமைப் புகள் தீவிர முயற்சிகளை எடுக்கப்பட்டுள்ளன. பக்கம் 17

## அனைத்துலக நீதிமன்றில் தன்னை நிறுத்த முயற்சி என மஹிந்த குமுறல்

கொழும்பு,ஒக்.5

என்னை அனைத்துலக நீதிமன்றத்தில் நிறுத்துவதே பலரது நோக்கமாக இருக்கிறது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கவலை தெரிவித்துள்ளார்.

பொலன்னறுவையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பேசும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

''நாட்டை முழுமையாக மீட்டு ஐக்கியத்தைக் கட்டியெழுப்பி வரும் நிலையில், என்னை அனைத் துலக நீதிமன்றத் தின் முன் நிறுத்து வது பலரது நோக் கமாக இருக்கிறது. இலங்கையின் அர சியல் வரலாற்றில் ஒரு மாவட்டத்தில் ஒரே கட்சியின் உறுப் பினர்கள் மட்டுமே (24 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் பாண் விலை; இன்று கூடி முடிவு

யாழ்ப்பாணம், ஒக்.5

குடாநாட்டில் பாணின் புதிய விலை இன்று முடிவு செய்யப் படும் என்று யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் நேற் றிரவு தெரிவித்தார்.

கோதுமை மாவின் விலை 8ரூபா 50 சதத்தால் அதிகரிக்கப் பட்டுள்ளதாக பிறிமா நிறுவனம் தெரிவித்துள்ளது. அந்த விலை யேற்றத்துக்கு ஏற்ப விலைக் கட் டுப்பாட்டு அதிகாரிகளுடன் இன்று கலந்துரையாடி பாணின் புதிய விலை அறிவிக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

பாணின் விலை அறிவிக்கப் பட்ட பின்பே புதிய விலைக்கு பாண் விற்பனை செய்யப்பட வேண்டும் என்றும் அவர் மேலும் கூறினார். (மற்றொரு செய்தி 2 ஆம் பக்கத்தில்) (ஒ-ஜ)

### கல்விச் சுடர்

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட் சையின் கணிதம்I, II பாட மாதிரி வினாத்தாள் உள்ளே.

## முன்னாள் மேயருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடிவு

கொழும்பு, ஒக்.05

கொழும்பு மாநகரசபை மேய ரின் உத்தியோகபூர்வ வாசஸ் தலத்திலிருந்து வெளியேற மறுக் கும் முன்னாள் மேயர் உவைஸ் மொஹமட் இம்தியாஸ் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என கொழும்பு மாநகர விசேட ஆணை யாளர் ஓமர் காமில் தெரிவித்தார்.

கொழும்பு மாநகரசபை கடந்த ஜூன் மாதம் கலைக்கப்பட்ட பின்னர் முன்னாள் மேயர் இம்தி யாஸிடம் அவரது வாசஸ்த லத்தை மாநகர சபையிடம் ஒப் படைக்குமாறு தெரிவித்தோம்.

அவர் மூன்று மாத கால அவ காசம் கேட்டார். மூன்று மாதங் கள் கடந்த பின்னரும் அவர் வாசஸ்தலத்திலிருந்து வெளி யேறவில்லை. இதன் காரணமா கவே சட்ட நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்தோம் எனவும் ஓமர் காமில் தெரிவித்தார்.

இதேவேளை தமக்கு வீடு ஒன்றை வழங்கும்படி ஜனாதி பதியிடம் தாம் கோரிக்கை விடுத் தார் என்றும், ஜனாதிபதி வீட மைப்பு அமைச்சருக்கு இது தொடர் (24 ஆம் பக்கம் பார்க்க)

## சிறைக்குள்ளும் வெளியிலும் பொன்சேகாவுக்கு விசேட பாதுகாப்பு வழங்க நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, ஒக். 05

நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகாவிற்கு சிறைச்சாலைக் குள்ளும் நீதிமன்ற விசாரணைகளுக்காக அழைத்துச் செல்லப்படும் போதும் விசேட பாதுகாப்பு வழங் கப்படவேண்டும் என்று கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று உத்தர விட்டது.

(24 ஆம் பக்கம் பார்க்க)



பொன்சேகாவுக்கு ஆதாரவாக வெலிக்கடை சிறை முன்பாக நடந்த ஆர்ப்பாட்டத்தில் தேங்காய் உடைக்கும் அனோமா.

## பொன்சேகாவை விடுவிக்கக்கோரி 9ஆம் திகதி லண்டனில் ஆர்ப்பாட்டம்

### பெரிய அளவில் நடத்துவதற்கு ஏற்பாடு

லண்டன், ஒக்.05

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை விடுவிக் கும்படி கோரி லண்டனில் எதிர் வரும் 9ஆம் திகதி சனிக்கிழமை ஆர்ப்பாட்டமொன்று நடைபெற உள்ளது.

ஜனநாயக தேசியக் கூட்ட மைப்பு நாடாளுமன்ற உறுப்பின ரும் முன்னாள் கிரிக்கெட் வீரரு மான அர்ஜுன ரணதுங்க உட்பட எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப் பினர்கள் பலரும் இந்த ஆர்ப்பாட் டத்தில் பங்குகொள்வர்.

9ஆம் திகதி சனிக்கிழமை (24 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதிக்கு ரணில் கடிதம்

கொழும்பு, ஒக். 05

சரத் பொன்சேகாவை விடு தலை செய்யுமாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க இன்று ஜனாதிபதியிடம் எழுத்து மூலம் வேண்டுகோள் விடுக்க வுள்ளார் என்று ஐ.தே.கட்சி நாடா ளுமன்ற உறுப்பினர் கயந்த கரு ணாதிலக்க நேற்றுக் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலு வலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இதுதொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

18ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் நாட்டில் பல விடயங்கள் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் ஒன்று தான் சரத் பொன்சேகாவுக்கான சிறைத் தண்டனை.

உலகிலேயே மிகச் சிறந்த படைத் தளபதி சரத் பொன்சேகா (24 ஆம் பக்கம் பார்க்க)

### தமிழகத்தில் அமைந்துள்ள

## கூடங்குளம் அணு மின் நிலைய பாதுகாப்பு குறித்து இலங்கை கவலை

கொழும்பு,ஒக்.5

தமிழ்நாட்டில் அமைக்கப்பட் டுவரும் அணுமின் நிலையத் தின் பாதுகாப்புத் தொடர்பாக இலங்கை அரசு கவலை தெரி வித்துள்ளதுடன் அது குறித்துக் கேள்வி யும் எழுப்பியுள்ளது.

தமிழ்நாட்டு, கூடங்குளத்தில் அமைக்கப்பட்டு வரும் அணுமின் நிலையம் முழுமையான பாது காப்பு முன்னேற்பாடுகளைக் கொண்டது தானா என்பது தொடர் பாக இலங்கை அரசு இந்திய அர சுடன் பேச்சு நடத்தும் என சக்தி, மின்சக்தி அமைச்சர் சம்பிக்க ரண வக்க தெரிவித்தார்.

கூடங்குளம் அணுமின் நிலை யத்தின் பாதுகாப்பு தொடர்பாக இலங்கை கவலையடைந்துள்ள (24 ஆம் பக்கம் பார்க்க)




திருகோணமலையில் நேற்று இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி உரையாற்றுவதையும், அருகில் அதிகாரிகள் அமர்ந்திருப்பதையும் முதற்படத்திலும், கலந்துகொண்ட அதிகாரிகளை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

# ஐம்பதாயிரம் வீடுகள் அமைக்கும் பணிகள் இன்னும் ஆரம்பமாகவில்லை

## விவரங்கள் மட்டுமே இதுவரை சேகரிப்பு

கொழும்பு, ஒக். 05

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வீடுகளை இழந்தவர்களுக்கு 50 ஆயிரம் வீடுகளைக் கட்டிக் கொடுக்கும் இந்தியாவின் வீடமைப்புத் திட்ட வேலைகள் ஆரம்பிக்கப்படுவதற்கான அறிகுறி எதுவும் இதுவரை தென்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

50 ஆயிரம் வீடுகளை அமைக்கும் திட்டம் தொடர்பாக இந்திய அதிகாரிகள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களின் அரச அதிபர்களைச் சந்தித்துத் தேவையான விவரங்களைப் பெற்றுச் சென்றுள்ளனர் என அரச அதிபர்கள் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தனர்.

அந்தந்த மாவட்டங்களில் வீடுகளை நிர்மாணிப்பது குறித்து சாத்தியமான ஆய்வறிக்கைகளை இந்திய அதிகாரிகள் தயாரித்து வருகின்றனர் என்றும் வீடுகளை நிர்மாணிக்க மூலப்பொருள்களைப் பெற்றுக்கொள்வது குறித்து ஆராய்ந்து வருகின்றனர் என்றும் யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமார் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

அரசின் அறிவுறுத்தலின்படி இந்திய அதிகாரிகள் கேட்கும் விவரங்கள் அவர்களுக்கு வழங்கப்படுவதாகவும் அவர் சொன்னார்.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்தில் இந்திய அரசு 12,500 வீடுகளை நிர்மாணிக்கத் திட்டமிட்டுள்ளது என்றும் 2,000 வீடுகள் திருத்தப்படவுள்ளன என்றும் கிளிநொச்சி அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

இருந்தும் வீடுகளை நிர்மாணிக்கும் பணிகள் இவ்வருட இறுதிக்குள் ஆரம்பிக்கப்படலாம் என்றும் அவர் தெரிவித்தார். (ஒ-சி)

# உத்தியோகபூர்வ வாசஸ்தலத்திலிருந்து வெளியேற மறுக்கும் முன்னாள் மேயர்

## சட்ட நடவடிக்கைக்கு கொழும்பு மாநகர சபை ஆணையாளர் தீர்மானம்

கொழும்பு, ஒக்.05

கொழும்பு மாநகரசபை மேயரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்திலிருந்து வெளியேற மறுக்கும் முன்னாள் மேயர் உவைஸ் மொஹமட் இம்தியாஸ் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என கொழும்பு மாநகர விசேட ஆணையாளர் ஓமர் காமில் தெரிவித்தார்.

கொழும்பு மாநகரசபை கடந்த ஜூன் மாதம் கலைக்கப்பட்ட பின்னர் முன்னாள் மேயர் இம்தியாஸிடம் அவரது வாசஸ்தலத்தை மாநகர சபையிடம் ஒப்படைக்குமாறு தெரிவித்தோம். அவர் மூன்று மாத கால அவகாசம் கேட்டார். மூன்று மாதங்கள் கடந்த பின்னரும் அவர் வாசஸ்தலத்திலிருந்து வெளியேறவில்லை. இதன் காரணமாகவே சட்ட நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்தோம் எனவும் ஓமர் காமில் தெரிவித்தார்.

இதேவேளை தமக்கு வீடொன்றை வழங்கும்படி ஜனாதிபதியிடம் தாம் கோரிக்கை விடுத்தார் என்றும், ஜனாதிபதி வீடமைப்பு அமைச்சருக்கு இது தொடர்பாக பணிப்புரை வழங்கினார் என்றும் முன்னாள் மேயர் உவைஸ் மொஹமட் இம்தியாஸ் தெரிவிக்கின்றார். வீடு கிடைக்கும் வரை உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் தங்கியிருக்கப் போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-சி)

# இடியுடன் கூடிய மழையினால் 10 பேர் பலி, 30 வீடுகள் சேதம்

கொழும்பு, ஒக்.05

நாட்டில் பல பாகங்களிலும் பெய்துவரும் இடியுடன் கூடிய கடும் மழை காரணமாக இதுவரை 10 பேர் பலியாகியுள்ளனர். அதேவேளை, இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பலியானவர்கள் மொனராகலை, கம்பஹா, இரத்தினபுரி, பதுளை, நுவரெலியா மற்றும் குருநாகல் மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

நாட்டில் நிலவிவரும் சீரற்ற காலநிலை குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த 72 மணித்தியாலங்களில் காலி, கம்பஹா, நுவரெலியா, களுத்துறை மற்றும் மாத்தளை ஆகிய பிரதேசங்களில் கடும் மழை காரணமாக 30 வீடுகள் முற்றாகச் சேதமடைந்ததுடன், 85 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

மத்திய மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் தற்போது சீரற்ற காலநிலை குறைவடைந்து வருகின்றது.

குறிப்பாக நுவரெலியா மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களில்தான் மண் சரிவு அபாயம் உள்ளது.

கடந்த பத்து நாள்களுக்குள் பெய்த கடும் மழை மற்றும் வெள்ளப்பெருக்குக் காரணமாக இதுவரை 10 மரணங்கள் சம்பவித்துள்ளன. அதில் 6 மரணங்கள் இடி, மின்னல் தாக்கத்தினால் நிகழ்ந்தவை ஆகும்.

அதேவேளை, நுவரெலியா மாவட்டத்தில் மலைப்பாங்கான பிரதேசங்களில் நேற்றும் மண் சரிவு ஏற்பட்டதனால் போக்குவரத்து ஸ்தம்பிதமானதுடன் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது - என்றார்.

நுவரெலியா மாவட்டத்தில் மாலைநேரத்தில் பனி மூட்டம் நிலவுவதால் சாரதிகள் வாகனம் செலுத்துவதில் அவதானத்துடன் இருக்கவேண்டும் என்றும் மலைப்பாங்கான பிரதேசங்களில் வாகனங்களை நிறுத்தவேண்டாம் என்றும் சாரதிகளுக்கு அவர் அறிவுறுத்தல் விடுத்துள்ளார். (ஒ-சி)

# தொடர்ந்து பெய்த மழை காரணமாக குடாநாட்டு நெல்விதைப்புத் தாமதமாகிறது

## வயல்களில் வெள்ளம் தேங்கியுள்ளதால் விவசாயிகள் கவலை

தென்மராட்சி, ஒக். 5

யாழ்.குடாநாட்டில் பரவலாகப் பெய்த கடும் மழை காரணமாகப் பல இடங்களிலும் நெல் வயல்கள் மழை நீரினால் நிரம்பி வழிகின்றன. இதனால் விவசாயிகள் உடனடியாக விதைப்பை மேற்கொள்ள முடியாதுள்ளனர்.

அதே சமயம் ஏற்கனவே பெரும்போக நெல்விதைப்பை மேற்கொண்டவர்களின் வயல்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் அவர்கள் கடும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர். பெரும் பணத்தைச் செலவழித்த விவசாயிகள் செய்வதறியாது திணறுகின்றனர்.

தென்மராட்சி தெற்கு மறவன்புலோ, தனங்களப்பு போன்ற பகுதிகளிலுள்ள நெல் வயல்களில் வெள்ளம் தேங்கியுள்ளது. இதனால் இவ் வருடம் கால போக விதைப்பு செய்ய முடியாதள்ளதுஎன்று அப்பிரதேச நெல்செய்கையாளர்கள் கவலை தெரிவித்தனர்.

ஒரு வாரத்திற்கு முன்னர் மழையின் பின்னர் விதைப்புக்காக ஆயத்த வேலைகளை மேற்கொண்டிருந்த வேளையில் திடீரென தொடர்ந்து மூன்று தினங்களாக மழை பெய்து வயல்களில் வெள்ளம் தேங்கி நிற்பதால் நெல் விதைக்க முடியவில்லை என்று அவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை கடந்த வாரம் பெய்த மழையை அடுத்து வயல்கள் உழுவதற்கு உழவு இயந்திரங்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டதால் லாண்ட் மாஸ்டர் மூலம் உழும் பணிகள் இடம்பெற்றன.

இதனிடையே கடந்த வருட காலபோக நெற்செய்கையில் இப்பிரதேசத்தில் பெரும் விளைச்சல் ஏற்பட்டு நெல்விலை வீழ்ச்சி ஏற்பட்டதால் நெற்செய்கைப் பயனாளர்கள் பலரும் நெல்லை விற்க முடியாமல் வீடுகளில் வைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த வருடம் போன்று அவ் வருடமும் வயல்களில் அதிக நெல் விளைச்சல் ஏற்படும் பட்சத்தில் நெல் மூடை ஆயிரம் ரூபாவரை விலை வீழ்ச்சி ஏற்படும் என எதிர்பார்க்கும் நெல்செய்கையாளர்கள் இவ்வருட விதைப்புக்கும் தயாராக உள்ளனர். (ஒ-207-302-38)

# பாண் விலை மேலும் 3 ரூபாவால் அதிகரிப்பு

கொழும்பு, ஒக்.05

பாணின் விலை நேற்று நள்ளிரவு முதல் மேலும் 3 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் தலைவர் எம்.கே.ஜயவர்தன தெரிவித்தார்.

கோதுமை மாவின் விலை நேற்று முன்தினம் 8 ரூபா 33 சதத்தால் அதிகரித்துள்ளது. இதனையடுத்தே எமது சங்கம் பாணின் விலையை 3 ரூபாவால் அதிகரிக்கத் தீர்மானித்தது என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, ஏனைய பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலையும் விரைவில் அதிகரிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த மாதம் 10 ஆம் திகதி பாணின் விலை 3 ரூபாவால் அதிகரிக்கப்பட்டமை தெரிந்ததே. (ஒ-சி)

# தமிழினத்தின் இருப்பையும், அடையாளத்தையும் பேணுவதற்கு இலக்கிய விழா துணைபுரிந்துள்ளது

## இரண்டாம் நாள் நிகழ்வில் இளங்கோவன் உரை

கிளிநொச்சி,ஒக்.5

இலக்கிய சூழலில் நகர வேண்டிய நேரத்தில் நாம் இருக்கின்றோம் அதற்கு இலக்கிய விழா உதவ வேண்டும். அத்துடன் தமிழினத்தின் இருப்பையும், அடையாளத்தையும் பேணவும் இலக்கியவிழா துணைபுரிந்துள்ளது. என்று வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் தெரிவித்துள்ளார்.

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் கிளிநொச்சி இந்துக்கல்லூரியில் இடம்பெற்றுவரும் இலக்கிய விழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச் சியில் கலந்துகொண்டு தலைமை யுரை ஆற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தமை வருமாறு:

படைப்பாளிகள் எதிர்கால சந்ததியினரை நல்வழியில் உருவாக்கப் பாடுபடவேண்டும். இது போன்ற கலை விழாக்கள் எமது பண்பாட்டில் ஆழமாகக் கால் பதித்து எமது மொழியின் இருப்பையும் எமது இனத்தின் அடையாளத்தையும் உறுதிப்படுத்த வேண்டும். அதனூடாக நாம் மீட்சி அடையவேண்டும். எமது எதிர்காலச் சந்ததியினர் இன்றைய விஞ்ஞான உலகத்தில் போட்டி போடுபவர்களாக இருக்கவேண்டும். வடமாகாண இலக்கிய விழாவானது ஒதுக்கப்பட்ட நிதி திரும்பிப் போய்விடக்கூடாது; அதை செலவழிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் நடத்தப்பட்டது அல்ல. இது எமது மொழி யின் அடையாளத்தை உறுதிப் படுத்த நடக்கும் உண்மையான விழாவாகவே அமைகின்றது. அதனால் தான் இந்த விழாவை கிளிநொச்சியில் நடத்த தீர் மானித்தோம். பெரும் வளப் பற் றாக்குறையுடனே இந்த விழா நடைபெறுகின்றபோதும் சிறப் பாக எல்லோரும் வியக்கும்படி அமைந்திருப்பதை இங்கு சுட்டிக் காட்டியாக வேண்டும் -என்றார். (எ-319)

# டெங்கு ஒழிப்பு வாரத்தில் உடுவிலில் விழிப்புணர்வு

வலி.வடக்கு, ஒக்.5

வலி.தெற்கு பிரதேச செயலகத்தின் ஆதரவுடன் உடுவில் மல்வம் டொன் பொஸ்கோ இளைஞர் ஒன்றியத்தினால் டெங்கு ஒழிப்பு வாரம் அனுஷ் டிக்கப்பட்டு வருகின்றது.

இதன் ஒரு பகுதியாக அயல் கிராமங்களுக்கு இடையே டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு சம்பந்தமான நாடக விழா ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

இளைஞர் ஒன்றியத் தலைவர் ம.ரவிசங்கர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.தெற்கு பிரதேச செயலக நிர்வாக கிராம அலுவலர் நா.நவரத்தினராசாவும், சிறப்பு விருந்தினராக உடுவில் பங்குத் தந்தை வண.பிதா கஸ்ரின் அடிகளார், சுகாதாரப் பரிசோதகர் பரமேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நாடக விழாவில் மல்வம் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையின் 'டெங்கு ஒழிப்போம்', உடுவில் கண்ணகி கழகத்தினரின் 'ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு', மல்வம் டோன் பொஸ்கோ இளைஞர் கழகத்தினரின் 'நுளம்பு வலை', உடுவில் பாரதி கலைக் கழகத்தினரின் 'உயிர்த்த மனிதன்' என்னும் நாடகங்கள் அரங்கேறின. (எ-86)

# அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளை இலகுபடுத்துவதற்கு யாழ்ப்பாணத்திலும் ஜனாதிபதி விசேட செயலணிக் கிளை அவசியம்

## இணையம் அமைச்சர் டக்ளஸுக்கு மகஜர்

யாழ்ப்பாணம்,ஒக்.5

அரச சார்பற்ற நிறுவனங்களின் நடவடிக்கைகளைப் பன்முகப்படுத்தக்கூடியதாக, நிறுவனங்களின் செயற்பாட்டை இலகுபடுத்துவதற்காக யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி விசேட செயலணியின் (PTF) கிளையொன்றை அமைத்தல் பொருத்தமானதாக இருக்கும் என்று யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம், பாரம்பரிய கைத்தொழிலில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு கையளித்த மகஜரில் தெரிவித்துள்ளது.

அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்கள் வருமாறு:

* யாழ்ப்பாணத்தில் கடமையாற்றும் அனைத்து அரச சார்பற்ற நிறுவனங்களும் கொழும்பு தேசிய அரச சார்பற்ற நிறுவனங்களின் செயலகத்தில் பதிவுசெய்துள்ளன.

* பெரும்பாலான அரச சார்பற்ற நிறுவனங்கள் கடந்த 10 வருடங்களுக்கும் மேலாக பணியாற்றி வருகின்றன.

* அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட ஜனாதிபதி விசேட செயலணியின் அனுமதி இந்த அரச சார்பற்ற நிறுனங்களுக்குத் தேவை என்பது பற்றி உத்தியோக பூர்வ அறிவித்தல்கள் எதுவும் அவற்றுக்குக் கிடைக்கப்பெறவில்லை.

* இந்த நடைமுறைகளில் தெளிவற்ற நிலை காணப்படுவதனால் உள்நாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் தான் மிகுந்த பாதிப்புக்குள்ளாகின்றன.

* 23 அங்கத்துவ நிறுவனங்களில்; சர்வோதயம், சேவாலங்கா, லீட்ஸ், கரித்தாஸ் - கியூடெக் ஆகிய தேசிய அரச சார்பற்ற நிறுவனங்கள் மட்டுமே ஜனாதிபதி விசேட செயலணியின் அனுமதியைப் பெற்றுள்ளன. யாழ்ப்பாணத்தைத் தளமாகக்கொண்டு இயங்கும் ஏனைய உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் இப்போது தான் அனுமதியைப் பெற முயற்சிக்கின்றன. சமூக நன்மை கருதி உரியவாறு செயலாற்றக்கூடியதாக இவற்றிற்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

* சமூக சேவைகள் சட்டத்தின் கீழ் அனைத்து அரச சார்பற்ற நிறுவனங்களும் பதிவு செய்துள்ளமையால் திரும்பவும் ஒரு தடவை பதிவுசெய்ய வேண்டியதில்லை என்பதை சுட்டிக்காட்டுகின்றோம்.

* ஜனாதிபதி விசேட செயலணியின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளும் அரச சார்பற்ற நிறுனங்களும் தனித் தனி அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பது தேவையற்றது என்றும் கருதுகின்றோம்.

- இவ்வாறு அந்த மகஜரில் உள்ளது.

இந்த மகஜர், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ யாழ்.மாவட்டத்திற்கு வருகை தருவதற்கு இரண்டு தினங்களுக்கு முன்னர் இரண்டாவது தடவையாகவும் கையளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-15)

## காட்டு யானை தாக்கி வாகரையில் ஒருவர் பலி!

கொழும்பு, ஒக்.5

காட்டு யானை தாக்கி மூன்று பிள்ளைகளின் தந்தை பரிதாபகரமான முறையில் உயிரிழந்த சம்பவம் மட்டக்களப்பு, வாகரை பிரதேசத்தில் நேற்று காலை இடம்பெற்றது.

வாகரை மாவிலாற்றில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பகல் மீன்படித்துவிட்டு திரும்பிக் கொண்டிருந்த சிவசுப்பிரமணியம் உதயகுமார் (வயது 28) என்ற மீனவரே காட்டு யானையின் தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்தவராவார்.

காயமடைந்த அவர் உடனடியாக கதிரவெளி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர், மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அங்கு சிகிச்சை பலனளிக்ககாத நிலையில் அவர் நேற்றுக் காலை உயிரிழந்தார்.


யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து மீள்குடியேறிய பல பகுதிகளில் காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர். (உ)

## இடம்பெயர்ந்த மாணவர் நவ.13க்கு முன் விண்ணப்பிக்க வேண்டும்

யாழ்ப்பாணம்,ஒக்.5

முகாம்களில் அல்லது தற்காலிக பாடசாலைகளதில் இணைந்துள்ள மாணவர்களில் இதுவரை இந்தவருட ஜி.சி.ஈ.(சா/த) பரீட்சைக்கு விண்ணப்பிக்காதவர்கள் விசேட ஏற்பாட்டின் கீழ் விண்ணப்பிக்கும் இறுதித் தினம் எதிர்வரும் நவம்பர் 13 ஆம் திகதியாகும். இதன் பின்னர் எத்தகைய சூழலிலும் விண்ணப்பிக்க முடியாது.

யாழ்ப்பாணக் கல்வி அலுவலகப் பிரதேசத்தில் இத்தகைய விண்ணப்பதாரிகள் இருப்பார்களாயின் யாழ்.வலயக் கல்வி அலுவலகத் திட்டமிடல் பிரிவுடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுமாறு யாழ்.கல்வி வலயப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்துள்ளார். (ஒ-15)



சிறையில் அடைக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, வெள்ளைக் கொடிகளுடன் சரணடைந்த புலிகள் சுட்டுக்கொல்லப்பட்டது தொடர்பான வழக்கு விசாரணைக்காக நீதிமன்றத்துக்கு வருகை தருகிறார். கூடவே மனைவி அனோமா.

## பங்களாதேஷ் வாசிகள் 10 பேர் கண்டியில் கைது!

கண்டி, ஒக்.5

கண்டி மாவட்டத்தில் பேராதனையை அண்மித்த பிரதேசத்திலுள்ள வீடு ஒன்றில் தங்கியிருந்தனர் எனக் கூறப்படும் பங்களாதேஷ் பிரஜைகள் 10 பேரை கண்டி பொலிஸார் நேற்றுக் கைது செய்தனர்.

கண்டிப் பிரதேசத்தில் வீடு ஒன்றில் இவர்கள் தங்கியிருந்தனர் எனப் பொலிஸார் கூறுகின்றனர். கைது செய்யப்பட்ட 10 பங்களாதேஷ் பிரஜைகளும் வீசா முடிவடைந்த பின்னரும் இங்கு தங்கியிருந்துள்ளனர். அவர்கள் தங்கி இருந்ததற்கான காரணத்தை அறிந்துகொள்வதற்காக பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (உ)

**வெளிநாட்டில் கல்வி பயில ஏற்பாடு செய்வதாக**

## 3 பேரிடம் பணம் பெற்று ஏமாற்றிய மற்றொரு நபரும் கைதாகி பிணையில்

யாழ்ப்பாணம்,ஒக்.5

வெளிநாட்டில் கல்வி பயில ஏற்பாடுசெய்து தருவதாகக் கூறி பணம் பெற்று ஏமாற்றியதாக மூவர் யாழ்.பொலிஸில் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து மேலும் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பாக ஏற்கனவே கைதுசெய்யப்பட்டகுறிப்பிட்ட கல்வி நிலையத்தின் உரிமையாளர் பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில், வெள்ளவத்தையைச் சேர்ந்த ஒருவரும் கைது செய்யப்பட்டார்.

கடந்த 2ஆம் திகதி யாழ்.பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட பிரஸ்தாபநகர் நேற்று யாழ்.நீதிமன்றத்தில் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த யாழ்.நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராசா குறித்த சந்தேக நபரை 75 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள் பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டுள்ளார்.

கொழும்பு, வெள்ளவத்தையைச் சேர்ந்த க.அம்பிகைகுமார் என்பவரே மூன்று பேரிடம் 5 லட்சம் ரூபாவும், ஒருவரிடம் 3 லட்சம் ரூபாவும் ஏமாற்றி வாங்கினார் என்று பாதிக்கப்பட்டவர்கள் முறைப்பாடு செய்துள்ளனர். (ஒ-9)

## சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களை தெரிவுசெய்ய ஞாயிறன்று போட்டிப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஒக்.5

வடமாகாணத்தில் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களை தெரிவுசெய்வதற்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளதாக வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் யாழ்ப்பாணம், வலிகாமம், தென்மராட்சி, தீவகம் ஆகிய கல்வி வலயங்களைச் சேர்ந்த பரீட்சார்த்திகள் யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையிலும் -

கிளிநொச்சி மாவட்ட பரீட்சார்த்திகளுக்கு கிளிநொச்சி மகா வித்தியாலயத்திலும் -

வவுனியா தெற்கு, வவுனியா வடக்கு, முல்லைத்தீவு, துணுக்காய் ஆகிய கல்வி வலயங்களைச் சேர்ந்த பரீட்சார்த்திகளுக்கு வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்திலும் -

மன்னார், மடு ஆகிய கல்வி வலயங்களைச் சேர்ந்த பரீட்சார்த்திகளுக்கு மன்னார் புனித சவேரியார் பெண்கள் கல்லூரியிலும் இப்பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

கல்விக் கொள்கைகளும் சீர்திருத்தங்களும் பாட வினாத்தாள் காலை 9 மணிக்கும், பாடம் சார் வினாத்தாள் முற்பகல் 11.30 மணிக்கும் நடைபெறும் என்றும் இது தொடர்பான மேலதிக விவரங்களுக்கு 0263262084 எனும் தொலைபேசி இலக்கத்தின் மூலம் வடமாகாண உதவிக் கல்விப் பணிப்பாளருடன் தொடர்புகொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-16)

## குடாநாட்டில் இளவயதில் தாயாகும் சம்பவங்கள் கடந்த வருடம் அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.5

குடாநாட்டில் இளவயதில் தாயாகும் சம்பவங்கள் கடந்த ஓரிரு வருடங்களில் அதிகரித்துள்ளன.

யாழ்,மாவட்ட தாய், சேய் நல வைத்திய அதிகாரி திருமதி திருமகள் சிவசங்கர் இத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

இத்தகைய நிலையினால் 35 வயதுக்குப்பின் கர்ப்பைக்கழுத்து புற்றுநோய் ஏற்படும் அபாயம் அதிகரித்துள்ளதாகவும் அவர் எச்சரித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இளைய வயதில் கர்ப்பமாகும் பெண்களின் எண்ணிக்கை கடந்த ஓரிரு வருடங்களில் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இதன் பிரகாரம் கடந்த 2008ஆம் ஆண்டு442 பேரும் 2009ஆம் ஆண்டு 374 பேரும் இவ்வாண்டு கடந்த 6 மாதகாலப் பதிவுகளின் படி 234 பேரும் இளவயதிலேயே தாயாகியுள்ளனர்.

இத்தகைய இளவயதுத் பிரசவத்தினால் பிரசவநேர சிக்கல்கள், தாயின் குருதிச் சோகை காரணமாக அதிக இரத்தப்போக்கு ஏற்பட்டு மரணம் அடைதல், தாயின் உடலில் திணிவுச்சுட்டி 18.5 இற்கு குறைவாய் இருக்கும் பட்சத்தில் அதிகமான குழந்தைகள் 2.5 கிலோவுக்கும் குறைவானதாகப் பிறக்கும் சந்தர்ப்பங்கள் ஏற்படும். அத்துடன் பல்வேறு சமூகப் பிறழ்வுகள் ஏற்படும் வாய்ப்பும் உள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ஒ-9)

## நல்லூர் உற்சவத்தில் சங்கிலி அறுத்த பெண் அடையாளம் காணப்பட்டார்

யாழ்ப்பாணம்,ஒக்.5

நல்லூர் உற்சவகாலத்தில் இடம்பெற்ற தங்கச் சங்கிலி அறுப்புச் சம்பவத்தில் கைதான பெண்களில் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சிறுமி உட்பட நான்கு பெண்கள் அங்கு பணியில் இருந்த பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

இவர்கள் கடந்த வாரம் யாழ். நீதிமன்றத்தில் நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராஜா முன் அடையாள அணிவகுப்பில் நிறுத்தப்பட்டனர். பெண் ஒருவர் சாட்சிகளால் அடையாளம் காணப்பட்டிருந்தார்.

இந்த வழக்கு நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராஜா முன் நேற்று விசாரனைக்கு எடுக்கப்பட்டது.

அடையாளம் காட்டப்பட்ட முதலாவது சந்தேக நபரை தொடர்ந்து விளக்க மறியலில் வைக்குமாறும் 2வது, 3வது சந்தேக நபர்களை 10 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும், 50 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள் பிணையிலும் செல்லுமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இவர்களில் இருவர் நீர்கொழும்பைச் சேர்ந்தவர்கள். ஒருவர் இந்தியாவிலிருந்து வந்தவர் (ஒ-9)

## 25 ஏ.எஸ்.பீ. பதவி வெற்றிடங்களுக்கு 2,700 பட்டதாரிகள் விண்ணப்பம்

உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் (ஏ.எஸ்.பீ.) பதவிக்கான 25 பதவி வெற்றிடங்களுக்கு 2,700 பட்டதாரிகள் விண்ணப்பித்துள்ளனர் என்று பொலிஸ் தலைமையகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தப் பதவி வெற்றிடங்களுக்குத் தகுதியானவர்களைத் தேர்ந்தெடுக்கும் நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 9ஆம் திகதி மற்றும் 16 ஆம் திகதிகளில் பம்பலப்பிட்டியிலுள்ள பொலிஸ்துறை படையணிகளின் தலைமையகத்தில் இடம்பெறவுள்ளதாகவும் - பொலிஸ்துறை சார்ந்த மருத்துவ, பொறியியல் மற்றும் கணனிப் பிரிவுகளில் நிலவும் பதவி வெற்றிடங்கள் தொடர்பாக இவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர் எனவும் பொலிஸ் தலைமையக உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ஒ-22)

## கொக்குவில் இந்துவில் சமாதான யாத்திரா கலாசார நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், ஒக்.5

சப்பிரகமுவா மாகாணப் பணியாளரும், மாவனல்ல வலயப் பணிமனையும்,யாழ்.கல்வி வலயமும் இணைந்து நடத்தும் சமாதான யாத்திரா கலாசார நிகழ்ச்சி இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.கொக்குவில இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் யாழ். கல்வி வலயத்தைச் சேர்ந்த அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோரைக் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஒ-ற)

# பாகிஸ்தானில் இராணுவத் தளபதிகள் மூவர் ரூபா 2,500 கோடியைச் சுருட்டினர்!

## சொத்துக்களைப் பறிமுதல் செய்து ஏலம் விட உத்தரவு

இஸ்லாமாபாத், ஒக். 05

பாகிஸ்தான் ஜனாதிபதியாக முஷாரப் இருந்த காலத்தில், உளவுத்துறைத் தலைவராக இருந்தவர் உட்பட இராணுவத் தளபதிகள் மூவர் 9 ஆண்டுகளில் 2 ஆயிரத்து 500 கோடி ரூபாயை சுருட்டியமை தெரிய வந்துள்ளது.

இதுதொடர்பான விசாரணையில் சிக்கிய அவர்களின் பதில் திருப்தி அளிக்காததால், அவர்களது சொத்துக்களைக் கைப்பற்றி ஏலம் விட அரசு உத்தரவிட்டுள்ளது.

பாகிஸ்தானில் இப்போது சர்தாரி ஜனாதிபதியாக இருக்கிறார். அவர் இந்தப் பதவிக்கு வருவதற்கு முன்னர் ஜனாதிபதியாக இருந்தவர் முஷாரப். இவர் இராணுவத் தளபதியாக இருந்து இராணுவப் புரட்சி நடத்தி ஆட்சியை கைப்பற்றியதால், இவரின் ஆட்சிக்காலத்தில் இராணுவத் தளபதிகள் அதிக செல்வாக்குடன் இருந்தனர்.

இவர்கள் இராணுவம் தவிர்ந்த பிற துறைகளிலும் தலைமைப் பொறுப்புக்கு நியமிக்கப்பட்டனர். பாகிஸ்தான் ரயில்வேத்துறையும் இராணுவத் தளபதிகளின் பொறுப்பில் விடப்பட்டது.

ரெயில்வே இலாகா அமைச்சராக இருந்தவர் ஜாவேத் அஷரப் காஜி. இவர் இராணுவத்தில் உளவுப்பிரிவு (ஐ.எஸ்.ஐ.) தலைவராக இருந்தவர். ரயில்வேத்துறை செயலாளராகவும், தலைவராகவும் இருந்தவர் சயீது உஸ்ஜபார். ரயில்வே பொது முகாமையாளராக இருந்தவர் மேஜர் ஹமீத் ஹசான் பட்.


இந்த 3 பேரும் முஷரப்புக்கு நெருக்கமானவர்களாக இருந்தனர். இவர்கள் 3 பேரும் 2001ஆம் ஆண்டு முதல் ரயில்வே நிர்வாகத்தைக் கவனித்து வந்தனர். இவர்கள் காலத்தில் ரயில்வேக்குச் சொந்தமான நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலம் ஒரு தனியாருக்குக் குத்தகைக்குக் கொடுக்கப்பட்டது.

இந்தக் குத்தகை தொடர்பாக விசாரணை நடத்தும்படி 20 பேர் கொண்ட நாடாளுமன்றக் குழுவுக்குச் சபாநாயகர் பக்மிதா மீர்சா உத்தரவிட்டார். இந்த விசாரணையில் இந்த 3 தளபதிகளும் 9 ஆண்டு காலத்தில் கிட்டத்தட்ட 2 ஆயிரத்து 500 கோடி ரூபாய்க்கு மோசடி செய்தமை தெரியவந்தது.

இதைத்தொடர்ந்து இவர்களுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. இவர்கள் குழுவின் முன்னால் ஆஜராகி விளக்கம் அளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டனர். அதன்படி இவர்கள் விளக்கமளித்தனர். இந்த விளக்கம் குழுவினருக்குத் திருப்தி அளிக்கவில்லை.

இதனால் இந்த 3 தளபதிகள் மீதும் வழக்குப் பதிவு செய்யவும், இவர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்து அவற்றை ஏலம் விட்டு ரயில்வே இலாகாவுக்கு ஏற்பட்ட இழப்பை ஈடுகட்டவேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தனியாருக்கு அளிக்கப்பட்ட குத்தகையை இரத்து செய்யவேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்துள்ளது. (சி)



கிரேக்கம் வந்திருந்த சீனப் பிரதமர் வென்ஜியாபோவை (வலது) ஏதென்ஸ் நாடாளுமன்றத்தில் பிரதமர் ஜோர்ஜ் பாப்பான்டிரியோ கைகுலுக்கி வரவேற்கிறார்.

# அமெரிக்க வாழ் காஷ்மீர் பண்டிட்டுகள் இந்திய தூதரகத்தின் முன் ஆர்ப்பாட்டம்

வாஷிங்டன், ஒக். 05

அமெரிக்க வாழ் காஷ்மீர் பண்டிட்டுகள், இங்குள்ள இந்திய தூதரகத்தின் முன் ஆர்ப்பாட்டம் நடத்தினர். அமெரிக்க வாழ் காஷ்மீர் பண்டிட்டுகள், காஷ்மீரில், ஆயுதப் படைக்குச் சிறப்பு அதிகாரம் வழங்கும்சட்டத்தைதிரும்பப்பெறக் கூடாது என்று வலியுறுத்தி, இந்திய தூர்தரகத்தின் முன் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இந்த விவகாரத்தில் எத்தகைய நெருக்கடி வந்தாலும், இந்திய அரசு பணிந்துவிடக்கூடாது என்றும் அவர்கள் கூறினர். பின்னர் அவர்கள், அமெரிக்காவுக்கான இந்தியத் தூதர் மீரா சங்கரிடம் மனு அளித்தனர்.

அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள தாவது:-

காஷ்மீரில், ஆயுதப்படைக்குச் சிறப்பு அதிகாரம் வழங்கும் சட்டத்தைத் திரும்பப் பெறக் கூடாது. காஷ்மீர் இந்துக்கள் அகதிகளாக்கப்பட்டது குறித்து, பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் உயர்மட்டக் குழு அமைத்து, உரிய தீர்வு காண வேண்டும்.

உள்நாட்டிலேயே அகதிகளாக்கப்பட்ட காஷ்மீர் பண்டிட் சமுதாயத்தினர் தற்போது அமெரிக்காவில் நியூயோர்க், பாஸ்டன் உள்ளிட்ட நகரங்களில் வாழ்ந்து வருகின்றனர்.

மேலும், தீவிரவாதிகளால் பண்டிட் சமுதாயத்தினர் கொல்லப்பட்ட சம்பவங்கள் குறித்து நீதி விசாரணை நடத்தி, அவர்களின் குடும்பங்களுக்கு உரிய நிவாரணம் அளிக்க வேண்டும்.

இவ்வாறு அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு, பா.ஜவின் வெளிநாட்டு வாழ் நண்பர்கள் அமைப்பு, அமெரிக்கா வாழ் இந்திய காஷ்மீர் மன்றம் உள்ளிட்ட அமைப்புகள் ஏற்பாடு செய்திருந்தன. (சி)

# பிரேஸிலில் முதல் பெண் ஜனாதிபதி தெரிவுக்கான வாய்ப்பு அதிகம்

## கருத்துக்கணிப்புகள் தகவல்

ரியோ டி ஜெனிரோ,ஒக்.5

பிரேஸிலின் புதிய ஜனாதிபதியைத் தேர்வு செய்வதற்கான தேர்தல் ஞாயிற்றுக்கிழமை நடந்தது. இதில், ஆளும்கட்சிச்சார்பில் போட்டியிட்ட டில்மா ரஸ்சல் வெற்றிபெறுவதற்கு வாய்ப்புள்ளது என கருத்துக்கணிப்புகள் தெரிவித்துள்ளன.

இவர் வெற்றிபெற்றால், பிரேஸிலின் முதல் பெண் ஜனாதிபதி என்ற பெருமையைப் பெறுவார்.

பிரேஸிலின் தற்போதைய ஜனாதிபதி லூயிஸ் இனாசியோ லுலா டி சில்வா. இவர், தொழிலாளர் கட்சியைச் சேர்ந்தவர். இரண்டு தடவைகள் ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ளார்.

பிரேஸில் அரசமைப்புச் சட்டப்படி, ஒருவர் இரண்டு தடவைக்கு மேல், ஜனாதிபதியாகப் பதவி வகிக்க முடியாது. அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்துடன் இவரது பதவிக் காலம் முடிவுக்கு வருகிறது.

எனவே, புதிய ஜனாதிபதித் தேர்வு செய்வதற்கான தேர்தல் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதில், ஆளும் கட்சிச் சார்பில், லூயிஸ் லுலாவின் அமைச்சரவையில் பதவி வகித்த டில்மா ரஸ்சல் என்ற பெண் போட்டியிடுகிறார்.

எதிர்க்கட்சியான பிரேஸில் சோஷலிஸ்ட் ஜனநாயகக் கட்சி சார்பில், ஜோஸ் செர்ரா நிறுத்தப்பட்டுள்ளார்.

கருத்துக் கணிப்பில், செர்ராவை விட, டில்மாவுக்கு 20 சதவீத வாக்குகள் அதிகம் கிடைக்கும் என்றும், அவர் வெற்றி பெறுவார் என்றும் கூறப்பட்டுள்ளது. அவ்வாறு டில்மா வெற்றிபெற்றால், பிரேஸிலின் முதல் பெண் ஜனாதிபதி என்ற பெருமையைப் பெறுவார்.

62 வயதான டில்மா, அவரது ஆதரவாளர்களால் 'இரும்புப் பெண்' என அன்புடன் அழைக்கப்படுகிறார்.

தேர்தல் பிரசார கூட்டத்தில் சமீபத்தில் இவர் பேசுகையில், ''விழுந்து கிடந்த பிரேஸிலின் பொருளாதாரத்தை தூக்கி நிறுத்தியவர், தற்போதைய ஜனாதிபதி லூயிஸ் லுலா. உலகின் மிகப் பெரிய பொருளாதார நாடுகளில் பிரேஸில் எட்டாவது இடத்துக்கு வருவதற்கு காரணமாக இருந்தவர் இவர். எனவே, நான் வெற்றி பெற்றால், லூயிஸ் லுலா செயல்படுத்திய அதே பொருளாதார கொள்கைகளையே அமுல்படுத்துவேன்'' என்றார். (சி)



பிரேஸிலில் பொதுத்தேர்தல் நடைபெற்றது. தலைநகரான சாபோலோவிலுள்ள வாக்குச்சாவடியில் ஜனாதிபதி லூயிஸ் இனாசியோ லூலா டி-சில்வா தமது மனைவி மரீஸாலெட்டிகாவுடன் வாக்களிக்க வருகிறார்.

## உலக அரங்கில்

### தீவிரவாதிகள் தாக்கும் அபாயம்: அமெரிக்கர்களுக்கு எச்சரிக்கை

வாஷிங்டன், ஒக். 05

லண்டன், பாரீஸ் ஆகிய ஐரோப்பிய நகரங்களில் மும்பைத் தாக்குதல் பாணியில் தாக்குதல் நடத்த பாகிஸ்தான் தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளனர் என உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்நிலையில், ஐரோப்பாவில் வசித்துவரும் மற்றும் அங்கு பயணம் செய்யும் அமெரிக்கர்களுக்கு அமெரிக்க வெளியுறவுத்துறை, பயண எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதில், பஸ், ரயில் நிலையங்கள், சுற்றுலா இடங்கள் ஆகியவற்றை தீவிரவாதிகள் குறிவைக்கக் கூடும் என்றும், அமெரிக்கர்கள் தங்களைத் தற்காத்துக் கொள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் அமெரிக்க வெளியுறவுத்துறை கேட்டுக்கொண்டுள்ளது.

இந்த எச்சரிக்கை, அடுத்த ஆண்டு ஜனவரி மாதம்வரை நீடிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பிரதமருக்குத் தெரியாமல் ஜனாதிபதி இரகசிய அவசர சட்டம் பிரகடனம்

இஸ்லாமாபத், ஒக். 05

பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரிக்கும், பிரதமர் யூசுப் ரஸா கிலானிக்குமிடையில் நீறு பூத்த நெருப்பாக இருந்த மோதல் இப்போது வெடித்துள்ளது.

பிரதமர் கிலானிக்குத் தெரியாமல் ஜனாதிபதி சர்தாரி இரகசிய அவசர சட்டம் ஒன்றை கடந்த மாதம் 16ஆம் திகதி பிறப்பித்திருக்கிறார். இந்தப் பிரச்சினை நாடாளுமன்றத்தில் சமீபத்தில் வெடித்தது.

இதனால் தர்மசங்கடத்துக்குள்ளான பிரதமர் வாய்மூடி மௌனியாக இருந்தார். இதனால் ஆளும் கட்சிக்குள் பிளவு ஏற்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் ரஸா ரப்பானி வெளிநடப்புச் செய்தார். எதிர்க்கட்சி உறுப்பினர்களும் வெளிநடப்புச் செய்தனர். (சி)

# பாகிஸ்தானில் ஊழல் அமைச்சர்களை நீக்க இராணுவத் தளபதி வலியுறுத்தல்

பாகிஸ்தான் இராணுவத்தின் தலைமைத் தளபதியாக ஜெனரல் பர்வேஷ் கயானி பதவி வகிக்கிறார். சமீபத்தில் இவர் ஜனாதிபதி அஷிப் அலி சர்தாரியையும், பிரதமர் யூசுப் ரஸா கிலானியையும் சந்தித்துப் பேசினார்.

அப்போது அவரது அமைச்சரவையிலுள்ள ஊழல் அமைச்சர்களின் பட்டியலை ஜனாதிபதி சர்தாரியிடம் கொடுத்தார். மேலும், அவர்களை உடனடியாக நீக்கும்படி வலியுறுத்தினார்.

அவர் கொடுத்த பட்டியலில் ஜனாதிபதி சர்தாரிக்கு நெருக்கமானவர்களின் பெயர்கள் இருந்தன. இந்தத் தகவலை பிரிட்டனிலிருந்து வெளிவரும் ஒரு பத்திரிகை தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானில் அரசு நிர்வாகிகளுக்கும், இராணுவத் தலைவர்களுக்குமிடையே ஒரு பதற்றமான சூழ்நிலை நிலவுகிறது. ஏனெனில், அங்கு சமீபத்தில் வரலாறு காணாத வெள்ளம் ஏற்பட்டது. இதில் மீட்பு நடவடிக்கைகளும், நிவாரணப் பணிகளும் சிறப்பாக நடைபெறவில்லை என குற்றச்சாட்டு நிலவுகிறது.

வெள்ளத்தால் மக்கள் அவதிப்பட்டபோது ஜனாதிபதி சர்தாரி தனது குடும்பத்தினருடன் பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகளில் சுற்றுலாப் பயணம் சென்றிருந்தார் என்றும் அப்பத்திரிகையில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

# இராணுவச் சட்ட மீறல்; பிஜி முன்னாள் பிரதமர் கைது

சுவா,ஒக். 05

பிஜி அரசின் இராணுவச் சட்டத்தை மீறிய இந்திய வம்சாவழியைச் சேர்ந்த முன்னாள் பிரதமர் மகேந்திர சௌத்ரி கைது செய்யப்பட்டார்.

இது குறித்து பி.பி.ஸி. செய்தி நிறுவனம் குறிப்பிடுகையில், ''பிஜியின் முன்னாள் பிரதமராக இருந்தவர் மகேந்திர சௌத்ரி. இந்திய வம்சாவழியைச் சேர்ந்தவரான இவர் கடந்த 1999ஆம் ஆண்டு பிரதமராக இருந்தார். தொழிலாளர் கட்சியின் தலைவராகவும் தற்போது பிரதான எதிர்க்கட்சித் தலைவராகவும் உள்ளார்.

இந்நிலையில் தற்போது பிரதமராக உள்ள வொர்கியூ பைனிமராமா கடந்த 2006 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இராணுவப் புரட்சி மூலம் ஆட்சியைப் பிடித்தார். இவர் நாட்டில் திடீர் அரசமைப்பு நெருக்கடிச் சட்டத்தை கடந்த ஏப்ரல் மாதம் முதல் பிரகடனப்படுத்தினார். அதன் படி எதிர்க்கட்சித் தலைவர்களோ, அமைப்புகளோ பொதுக்கூட்டம் நடத்தக் கூடாது என உத்தரவிட்டிருந்தார்.

முன்னாள் பிரதமரான மகேந்திர சௌத்ரி அரசின் சட்டத்தை மீறி பொதுக்கூட்டம் நடத்தினார் எனக் கூறப்படுகிறது. இதனால் இவர் கைது செய்யப்பட்டுள்ளார். இவருடன் மேலும் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட மகேந்திர சௌத்ரி நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்படுவார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (சி)

# 14 பேர் சுட்டுப் படுகொலை; 20 பேர் கடத்தல் மெக்ஸிக்கோவில் போதைக்கும்பல் அட்டூழியம்

மெக்சிகன்சிட்டி, ஒக்.5

மெக்ஸிக்கோவில் போதைப் பொருள் கடத்தல் கும்பலின் அட்டூழியம் தொடர்ந்து நீடித்து வருகிறது. அவர்கள் பொதுமக்களை கடத்திச்சென்று பணய கைதிகளாக்கி தங்களது காரியத்தை சாதித்து வருகின்றனர்.

இந்நிலையில், மெக்ஸிக்கோவின் பசுபிக் கடல் பகுதியிலுள்ள அகா புல்கோ நகருக்கு 20 பேர் பயணம் செய்தனர். அப்போது போதைப் பொருள் கடத்தல் கும்பல் துப்பாக்கி முனையில் அவர்களைக் கடத்திச்சென்றது.

மேலும், டுராங்கோ மாகாணத்தில் 14 பேரைப் போதைப் பொருள் கும்பல் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றது. இந்தத் தகவலை குவாரோ மாகாண பொலிஸ் துறை இயக்குநர் பெர்னாண்டோ மான்ரியல் தெரிவித் துள்ளார்.

கடத்தல்காரர்கள் 17 முதல் 47 வயது வரை இருந்தனர் என கடத் தலை நேரில் பார்த்த நபர் தெரிவித்தார். மேலும் 4 கார்களில் பொதுமக்கள் கடத்திச் செல்லப்பட்டனர் என் றும் அவர் கூறினார்.

இதற்கிடையே கைவிடப்பட்ட கடத்தல்காரர்களின் கார்களைப் பொலிஸார் கைப்பற்றினர்.

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## ஒடுக்குமுறைக்கான சேமக்கலம்?

நாடளாவிய ரீதியில் இராணுவத்தின் நிலையியல் கட்டமைப்பில் மாற்றங்கள் வரவுள்ளன. சகல மாவட்டங்களிலும் ஆகக்குறைந்தது நிலையான பெரிய இராணுவ முகாம் ஒன்று நிறுவப்படும். அதே போன்று ஒவ்வொரு மாவட்டத்திலும் விசேட அதிரடிப் படை முகாம் ஒவ்வொன்றும் நிறுவப்பட உள்ளது. வடக்கில், கிழக்கில் மாத்திரமன்றி, தென்னிலங்கையிலும் இராணுவத்தின் பிரசன்னத்தை அதிகரிக்க அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

இந்தத் தகவலை இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஜகத் ஜயசூரிய வெளியிட்டு இருக்கிறார். அநுராதபுரத்தில் நடைபெற்ற இராணுவ நிகழ்வு ஒன்றில் வைத்து இராணுவத் தளபதி இது குறித்து விவரித்திருக்கிறார்.

அரச மற்றும் தனியார் கட்டடங்களில் அமைந்துள்ள இராணுவ முகாம்கள் இன்னும் மூன்று மாதங்களுக்குள் அகற்றப்பட்டு, இதற்கெனக் கட்டப்படும் புதிய கட்டடங்களில் அவை இயங்கத் தொடங்கும்-

சீன அரசாங்கத்தினால் நிர்மாணிக்கப்பட்ட கட்டடங்களுக்கு அவை மாற்றப்படும் -

கிழக்கு மாகாணத்தில் பணியாற்றும் அதிரடிப் படையினர் அங்கிருந்து அகற்றப்பட்டு முற்று முழுதாக இராணுவத்தினரே பாதுகாப்புப் பொறுப்பைக் கையேற்பர் -

இந்தத் தகவல்களையும் இராணுவத் தளபதியே வெளியிட்டுள்ளார்.

வடக்கில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் இராணுவ முகாம்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதோடு மட்டுமன்றி பிரமாண்டமான இராணுவத் தளங்களையும், கடற்படைத் தளங்களையும் அரசாங்கம் நிறுவி வருவது பழைய சங்கதி.

போர் முடிவுற்றாலும் வடக்கு கிழக்கில் இனிமேலும் ஆயுதக் குழுக்கள் முளைவிடாது தடுப்பதற்கு இந்தப் பிரதேசங்கள் இராணுவ மயப்படுத்தப்பட வேண்டும் என்பது அரசாங்கத்தின், பாதுகாப்பு அமைச்சின் தந்திரோபாயங்களில் முதன்மை இடம் வகிக்கின்றது.

தமிழ் மக்களிடையே இருந்து இனிமேலும் ஆயுதக் கிளர்ச்சியோ, ஆயுதப் போராட்டமோ தலையெடுக்கத் துளி அளவும் இடம் வழங்கக் கூடாது என்பதில் அரசாங்கம் மிக அக்கறையாக உள்ளது. அதற்கான தந்திரோபாயங்களை வகுத்துச் செயற்படுத்தி வருகிறது.

தமிழ் மக்களுக்குரிய உரிமைகளை, அரை வேக்காடு இல்லாத உகந்த அரசியல் தீர்வு ஒன்றின் மூலம் வழங்காது, தமது தரப்பில் ஓர் அரை குறைத் தீர்வை திணிப்பதற்கு தமிழ்ப் பிரதேசங்களை இராணுவப் பிரதேசங்கள் ஆக்க வேண்டும் என்பது அரசாங்கத்தின் திட்டம்.

அதனாலேயே, வடக்கு, கிழக்கின் நிலப்பரப்பில் மட்டுமன்றி அவற்றை அண்டிய கடற்பிரதேசங்களையும், கரையோரப் பிரதேசங்களையும் இராணுவ மயப்படுத்தத் திட்டமிட்டு, அதற்கான செயற்பாடுகளை அரசு முடுக்கிவிட்டிருக்கிறது. இப்போது கிழக்கில் இருந்து அதிரடிப் படையினரை முழுமையாக நீக்கி இராணுவப் பாதுகாப்பு வழங்க முடிவு செய்திருக்கிறது.

இராணுவத் தரப்பு - அரசாங்கம் - ஆகப் பிந்தி வகுத்துள்ள திட்டத்தின் பிரகாரம், தமிழர் பிரதேசங்களை மட்டுமன்றி சிங்களப் பிராந்தியங்களையும் அதுஇராணுவப் பரம்பல் கொண்டதாக மாற்றத் திட்டமிட்டு வருகின்றது.

அதற்குக் காரணகாரியம் இல்லாதிருக்காது. நாட்டின் அரசாட்சி முறையில் பல புதிய மாற்றங்களுக்கு அடிகோலப்பட்டு வருகிறது. அரசமைப்புச் சட்டத்திற்கான 18ஆவது சட்டத்திருத்தம் அதற்கான முன்னோட்டம்.

அதன் பின்னால், ஜனநாயகத்துக்கு ஊறு விளைவிக்கும் பல புதிய ''வேலைத்திட்டங்கள்'' வகுக்கப்படும் சாத்தியம் உண்டு. அவை ஒவ்வொன்றாகக் கட்டவிழ்ந்து சிங்கள மக்களின் ஜனநாயக உரிமைகளையும் ஏப்பம் விடும் கட்டங்கள் மூச்சுடன் முகிழ்க்கும் போது, அந்தப் பிராந்தியங்களிலும் மக்கள் போராட்டங்கள் வெடிக்கக் கூடும். அத்தகைய ஒரு நிலையில், சந்தர்ப்பத்தில் தென்னிலங்கையிலும் ஆட்சிக்குப் பாதுகாவலர்களாக இராணுவத்தினரே பணியாற்ற நேரிடும். சிங்கள மக்களிடம் இருந்து எழக்கூடிய ஜனநாயக ரீதியான போராட்டங்களாயினும் சரி, ஆயுதப் போராட்டங்களாயினும் சரி அவற்றை முளையிலேயே கிள்ளிவிடுவதற்கான திட்டமே இப்போது வெளிப்படுத்தப்பட்டு வருகின்றது.

புதிய பாதுகாப்புக் கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட உள்ளது.தேசியப் பாதுகாப்பு ஒழுங்கு முறைகள் வகுக்கப்படுகின்றன. நாட்டில் ஏற்கனவே நடைமுறையில் உள்ள தேசிய பாதுகாப்பு ஏற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்காகவே இந்தப் புதிய கட்டமைப்பு என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. காலம் செல்லச் செல்லத்தான் இதன் விளைவுகளைச் சிங்கள மக்கள் புரிந்து கொள்வர்; உணர்ந்துகொள்வர் என எதிர்பார்க்கலாம்.

சிங்களச் சகோதரர்கள் இது குறித்து ஆழமாக ஆராய்வார்களானால், தமிழ்ப்பிரதேசங்களில் நடைபெற்ற இராணுவ ஒடுக்கு முறைக்கான சேமக்கலம் இப்போது ஒலிப்பதை உணர்வார்கள். இதனைக் கண்டுகொள்வார்களோ என்னவோ....? அல்லது வெள்ளம்வந்த பின்னர்தான் அணை கட்ட முயல்வரோ என்பது அவர்களைப் பொறுத்ததே.

# ஆயிரம் உயர்தரப் பாடசாலைகளில் மும்மொழிக்கல்வி அறிமுகப்படுத்தப்படும்

## சிறுவர் நல்லுறவை வளர்க்க கல்வி அமைச்சர் திட்டம்

வெகு விரைவில் அரசினால் மேற்கொள்ளப்படவிருக்கும் கல்வி மேம்பாட்டுத் திட்டங்களில் ஒன்றாக 1000 சிரேஷ்ட பாடசாலைகளில் மும்மொழிக் கல்விமுறை அறிமுகப்படுத்தப்படவுள்ளதெனக் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கரித்தாஸ் - ஸ்ரீலங்கா செடெக் நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட சர்வதேச சிறுவர் தினத்தையொட்டிய நிகழ்வில் அமைச்சர் உரையாற்றுகையிலேயே இப்பாடசாலைகளில் தரம் 6இல் இருந்து சிங்களம், ஆங்கிலம், தமிழ் ஆகிய பாடங்கள் கற்பிக்கப்படுமென்று அமைச்சர் தெரிவித்தார். இங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்:-

எமது இப்புதிய நகர்வின் மூலம் அனைத்து சமூகங்களிலும் சிறுவர்கள் நட்புறவை வளர்த்துக் கொள்ளக் கூடியதோர் புதிய சமுதாயத்தை உருவாக்குவோம்.

முன்னைய நாள்களில் அரசியல்வாதிகள் இன ரீதியாகப் பாடசாலைகளைப் பிரித்தமையினால் இற்றைவரை சிங்களப் பாடசாலைகள் வேறாகவும் தமிழ்ப் பாடசாலைகள் வேறாகவும முஸ்லிம் பாடசாலைகள் வேறாகவும் தனித்தனியே இயக்கப்படுகின்றன.

இந் நிலையில் சிறுவர்கள் இன ரீதியாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். எனவே சிறு பராயத்திலிருந்தே இவர்களுக்குச் சமாதானம், சமத்துவம் பற்றிய அறிவூட்டப்படல் வேண்டும். பாகுபாடற்ற சமத்துவத் தன்மையுடைய கல்வி முறையொன்றை இச்சிறார்களிடையே அறிமுகப்படுத்த வேண்டிய கட்டாய நிலைக்கு அரசாங்கம் நிர்ப் பந்திக்கப்பட்டுள்ளது என்றார்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யு.என்.டி.பி.வதிவிடப் பிரதிநிதி நெயில் பூனே தமது உரையின்போது, பொற்கால அபிவிருத்தித் திட்டங்களில் சாதகமான நிலையைத் தோற்றுவித்து வரும் இலங்கை, சிறுவர்களின் கல்வி மேம்பாட்டில் கவனஞ் செலுத்தி அவர்களைச் சுதந்திரப் பிரஜைகளாக வாழ வழி வகுப்பது பாராட்டிற்குரியது என்றார். (ரி)

# வடமராட்சி கிழக்குப் பகுதியில் 5 பாடசாலைகள் உடன் புனரமைப்பு

## பொருளாதார அபிவிருத்தி அமைச்சு நிதி ஒதுக்கீடு

பருத்தித்துறை,ஒக்.5

வடக்கின் வசந்தம், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் கீழ் வடமராட்சி கிழக்கில் மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்ட பகுதிகளிலுள்ள ஐந்து பாடசாலைகள் உடனடியாகத் திருத்தப்படவுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் வடமராட்சி கிழக்கிலுள்ள உடுத்துறை மகா வித்தியாலயம், ஆழியவளை சி.சி.தமிழ்க் கலவன் பாடசாலை, மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை, செம்பியன் பற்று அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, செம்பியன்பற்று றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை ஆகிய சேதமடைந்த பாடசாலைகளின் கூரைகள் திருத்தியமைக்கப்படவுள்ளன.

இத்திருத்த வேலைக்காக உடுத்துறை மகா வித்தியாலயத்திற்கு சுமார் 48 லட்சம் ரூபாவும், ஆழியவளை சி.சி.தமிழ்க் கலவன் பாடசாலைக்கு சுமார் 13 லட்சம் ரூபாவும், மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் பாடசாலைக்கு சுமார் 45 லட்சம் ரூபாவும், செம்பியன் பற்று அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு சுமார் 3 லட்சம் ரூபாவும் செம்பியன்பற்று றோமன் கத்தோலிக்க பாடசாலைக்கு சுமார் 16 லட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை குறித்த பாடசாலைகளின் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மூலம் இவ்வேலைகளை ஒரு மாத காலத்திற்குள் செய்து முடிக்கவேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது.(த-190)

# சம்பள அதிகரிப்பு, நிலுவை கிடைக்கவில்லை; தமிழ் ஆசிரியர்கள் விரைவில் போராட்டம்

## சங்கப் பொதுச் செயலாளர் மகாசிவம் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.5

பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் சுற்று நிருபம் மூலம் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட சம்பள அதிகரிப்பும், அதற்கான நிலுவையும் இதுவரை வழங்கப்படாமையால் தமிழ் ஆசிரியர்கள், அதிபர்கள் அதிகம் விசனமடைந்துள்ளனர். இதனைப் பெற்றுக் கொள்வதற்காக விரைவில் ஜனநாயக ரீதியாகத் தொழிற்சங்கப் போராட்டத்தையும் நடத்த வேண்டிய நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தெரிவித்தார் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு 2008ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதலாம் திகதி ஆசிரியர்கள், அதிபர்களுக்கு சுற்று நிருபம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது. அதில் மேற்குறிப்பிட்ட திகதி தொடக்கம் இலங்கை ஆசிரியர் சேவையானது இலங்கை பொதுக் கல்வி ஆசிரியர் சேவை என்றும் இலங்கை அதிபர் சேவையானது இலங்கைப் பொதுக் கல்வி அதிபர் சேவை எனவும் பெயர் மாற்றம் செய்யப்படுகிறது என அறிவித்திருந்தது.

அத்துடன் பெயர் மாற்றம் செய்யப்பட்டதன் காரணமாக அவை தொடர்பான பிரமாணக் குறிப்புகளும் மாற்றப்பட்டு அதிகரித்த சம்பள உயர்வு வழங்கப்படவுள்ளதாக அதில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் சுற்று நிருபத்தில் குறிப்பிட்டதுபோன்று அதிகரித்த சம்பள உயர்வு வழங்கப்படவில்லை. இதனால் ஆசிரியர்கள், அதிபர்கள் விரக்தி நிலையில் உள்ளனர்.

இதனால் அதிகரித்த சம்பள உயர்வையும் அதற்கான நிலுவையையும் உடனடியாக வழங்குமாறு வலியுறுத்தி ஜனநாயக ரீதியான தொழிற்சங்கப் போராட்டத்தை நடத்த அவர்கள் திட்டமிட்டு வருகின்றனர்.

எனவே அதற்கு முன்னதாக அதிகரித்த சம்பள உயர்வையும் அதற்கான கடந்த கால நிலுவையையும் வழங்க சம்பந்தப்பட்டோர் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

(த-14)

# வடமராட்சி கிழக்குப் பாடசாலைகளுக்கு சி.டி.எம்.ஏ தொலைபேசிகளை வழங்குக

## அமைச்சரிடம் அதிபர்கள் கோரிக்கை

பருத்தித்துறை,ஒக்.5

வடமராட்சி கிழக்கில் மக்கள் மீள் குடியேற்றப்பட்ட பகுதிகளில் இயங்கும் பாடசாலைகள் உட்பட பத்து பாடசாலைகளுக்கு சி.டி.எம்.ஏ தொலைபேசிகளை வழங்குமாறு கேட்டு மகஜர் ஒன்று பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

10 பாடசாலைகளின் அதிபர்கள், சார்பில் மருதங்கேணி கோட்டக் கல்வி அதிகாரி க. பொன்னையா இந்த மகஜரை அமைச்சரிடம் சமர்ப்பித்துள்ளார்.

தொலைபேசி வசதிகளற்ற நிலையில் இயங்கும் உடுத்துறை மகா வித்தியாலயம், ஆழியவளை சி.சி.தமிழ் கலவன் பாடசாலை, மருதங்கேணி இந்து தமிழ் கலவன் பாடசாலை, தாளையடி றோ.க.த.க பாடசாலை, செம்பியன்பற்று அரசினர் த.க.பாடசாலை ஆகிய மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்ட இடங்களிலுள்ள பாடசாலைகளுக்கும், ஏற்கனவே இயங்கிவரும் அம்பன் அ.மி.த.க பாடசாலை, குடத்தனை அ.மி.த.க.பாடசாலை, குடத்தனை றோ.க. த.க.பாடசாலை, மணற்காடு றோ.க. த.க. பாடசாலை, நாகர்கோவில் ம.வி. உட்பட 10 பாடசாலைகளுக்கே சி.டி.எம்.ஏ தொலைபேசி வசதிகள் வழங்குமாறு அந்த மகஜர் மூலம் கேட்கப்பட்டுள்ளது.(த-190)

## நாளை

| | |
|---|---|
| புரட்டாதி 20 | 06.10.2010 புதன்கிழமை |
| திதி: | : சதுர்த்தசி பி.இ 03.15 வரை |
| நட்சத்திரம் | : பூரம் மு.ப. 09.46 வரை |
| சுபநேரம் | : 04.32-06.02 வரை |
| ராகுகாலம் | : 12.02-01.32 வரை |

# பேரீச்சை மரச் செய்கை பரீட்சார்த்தத்துக்கு முயற்சி

## அரச காணி தர நெடுந்தீவில் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.5

நெடுந்தீவில் பேரீச்சம் மரக் கன்றுகளை பரீட்சார்த்தமாக செய்கை பண்ணுவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

நெடுந்தீவு மேம்பாட்டுக்கான ஐரோப்பிய இணையத்தின் நோர்வே கிளை இந்த முயற்சியை மேற்கொள்ள உள்ளது. இதற்கென பொருத்தமான அரச காணி ஒன்றைத் தெரிவுசெய்து தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவுக்கான அபிவிருத்திக் குழுவைத் தெரிவுசெய்வதற்கான கூட்டம் நாடாளுமன்ற உறுப்பினர் சி.அலன்ரின் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நெடுந்தீவின் அபிவிருத்திக்கான நடவடிக்கைள் குறித்துப் பேசப்பட்டது.

அதன்போது பேரீச்சை செய்கைக்கான நிலத்தைத் தரும்படி கோரிக்கை விடுத்த நோர்வே கிளையின் தலைவர் த.தியாகலிங்கம் பேரீச்சைகளை பரீட்சார்த்தமாக நடுகை செய்ய மேற்படி இணையம் ஆலோசித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

அரச காணி ஐந்து ஏக்கர் வரை வழங்கி இந்தப் பரீட்சார்த்த திட்டத்தை நடைமுறைப்படுத்த நாடாளுமன்ற உறுப்பினர் நடவடிக்கை எடுக்குமாறும் தியாகலிங்கம் கோரினார். இதுதொடர்பாக தமது அமைச்சருக்குத் தெரிவித்து அவரின் பரிசீலனையின் பின் பதில் தருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் அலன்டீன் தெரிவித்தார். (உ-7)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2010 தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில்
156 புள்ளிகள் பெற்று சித்தியடைந்த
யாழ்/புனித சென்.ஜோன் பொஸ்கோ
மகாவித்தியாலய மாணவி

**மோகநாதன் திவ்யா**

(ஆனைப்பந்தி, யாழ்.) மேலும் பல்கலையும் பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: அரவிந்தன் அண்ணா குடும்பம் (கைதடி), அப்பம்மா, குகமாமா குடும்பம் (கைதடி), நாதன் சித்தப்பா குடும்பம் (கனடா).

(104178) கைதடி தென்கிழக்கு, கைதடி.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



அவவெட்டி அருணோதயக் கல்லூரி
மாணவன்

**சேகரன் லெனின்ராஜ்**

2010 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 166 புள்ளிகளைப்பெற்றுச் சித்தியடைந்துள்ளார். அவரைப் பாராட்டுவதோடு மேலும் கல்வியில் சிறப்புற்று மிளிர வாழ்த்துகின்றோம்.

உதவி அரச அதிபர் அலுவலக வீதி, சுன்னாகம்.

வாழ்த்துபவர்: டேமியஸ் (சித்தப்பா)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/கரவெட்டி
மாணிக்கவாசகர் வித்தியாலயம்

**செல்வி.கு.தர்மினி**

எமது அன்புச் செல்வம்
தரம் 5 புலமைப்பரிசில்
பரீட்சையில்
**156 புள்ளிகளைப்**
பெற்றமைக்காகப்
பாராட்டுவதுடன் இவர்
மேலும் பல சிறப்புக்களைப்
பெற்று சிருடன் வாழ எல்லாம்
வல்ல தச்சந்தோப்பு சிந்தாமணி விநாயகரை
வேண்டுகின்றோம்.

வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா, அம்மையா, அம்மம்மா,
பெரியம்மையா (ஏ.சின்னத்தம்பி),
பெரியமாமா குடும்பம் (லண்டன்),
பெரியன்ரி குடும்பம் (நோர்வே), சின்னமாமா,
க.கலைமாறன் (ஆசிரியர்), சின்னன்ரி, குட்டி அன்ரி.

(101786)



## யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

## ஆசிரியர் தின விழா 2010.10.05

இன்று ஆசிரியர் தின விழாவைக் கொண்டாடும் யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அதிபர், ஆசிரியர்களை வாழ்த்தி வணங்கி கௌரவிக்கின்றோம்.

மாணவர்கள், பெற்றோர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்,
பழைய மாணவர் சங்கத்தினர்,
கல்லூரி ஊழியர்கள்.

(சி-571588)






உதயன் நிறுவனம் தனது வெள்ளிவிழாவையொட்டி யாழ்.மாவட்டத்தில் பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கிடையே ஆண், பெண் இருபாலருக்குமான கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி ஒன்றை நடத்தவுள்ளது. இதில் பங்குகொள்ள விரும்பும் கழகங்கள் தமது அணியில் கலந்துகொள்ளும் வீரர்களின்/ வீராங்கனைகளின் பெயர்களைக் குறிப்பிட்டு 07.10.2010 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பங்களை உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.


## குடத்தனை அ.த.க. பாடசாலையில் புதிய மண்டபம்

பருத்தித்துறை,ஒக்.5

மருதங்கேணி கோட்டத்திலுள்ள குடத்தனை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மண்டபம் இன்று செவ்வாய்க்கிழமை திறந்துவைக்கப்படவுள்ளது.

இந்த வைபவம் பாடசாலை அதிபர் எஸ்.செல்வானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா இந்த வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு மண்டபத்தை திறந்து வைக்கவுள்ளார். (த-190)

## கழிவு நீர் வாய்க்கால் சுன்னாகத்தில் சேதம்

சுன்னாகம்,ஒக்.5

சுன்னாகம் சந்தியிலிருந்து கே.கே.எஸ் வீதியின் கிழக்காக செல்லும் கழிவு நீர் வாய்க்கால் சேதமடைந்து இருப்பதால் மழை நீர் தேங்கி நிற்பதாக வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

இக்கழிவுநீர் வாய்க்கால் யுத்த காலத்தில் சேதமடைந்து மண் நிரம்பிய நிலையில் தூர்ந்துபோய்க் காணப்படுவதாகவும், இதனால் மழை காலங்களில் வெள்ளநீர் ஓடிச்செல்ல முடியாது வர்த்தக நிலையங்களின் முன்பாக தேங்கிய நிலையில் உள்ள தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனை புனரமைத்துத் தருமாறு வலி.தெற்குப்பிரதேச சபை யினரைக் கோரியுள்ள போதிலும் இதுவரை நடவடிக்கையேதும் எடுக்கப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டப்படுகிறது. (உ-38)

## உங்களுக்குத் தெரியுமா வினாடி வினா போட்டி: மாகாண மட்டத்துக்கு 9 பேர்

சுன்னாகம்,ஒக்.5

வலிகாமம் கல்வி வலயத்தில் நடத்தப்பட்ட உங்களுக்குத் தெரியுமா? வினாடி வினாப் போட்டியில் 15 மாணவர்கள் வெற்றிபெற்று மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளனர்.

மகாஜனக் கல்லூரி மாணவர்களான ச.வேணியன், கே.கௌசிகன், தி.அரன்ராஜ், அ.தர்சன், யூனியன் கல்லூரி மாணவர்களான நா.சிவஞானச்செல்வன், ம.கோகுலசாமி, சொ.தருமதன், வட்டு இந்துக் கல்லூரி மாணவிகளான ச.தீபா, த.தனலக்குமி, சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலய மாணவன் ம.அச்சுதன், அருணோதையக் கல்லூரி மாணவி கே.சோபனா, மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவன் ந.அன்ரனி ஜெயராஜ், இளவாலை மெய்கண்டான் வித்தியாலய மாணவி பா.சோபனா இணுவில் இந்துக் கல்லூரி மாணவி சி.கம்சாயினி, பண்ணாகம் மெய்கண்டான் ம.வித்தியாலய மாணவி சி.சங்கீதா ஆகியோரே தெரிவாகியுள்ளனர்.

மாகாண மட்டப் போட்டி 9ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-38)

## ஆசிரியர் தினம்

வடமராட்சி,ஒக்.5

கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் ஆசிரியர் தினம் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் இ.இராகவன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வுக்கு கரவெட்டி பிரதேச செயலர் என்.சத்தியசீலன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (உ-236)


## அதிக வேலை வாய்ப்புக்கள் உண்டு

நல்லசம்பளம் இளம் வயதானவர்களுக்கு

**SABINS No. 1 Modern Healthy Farm**

**Veterinary Surgeon** – Full or Part time.

**CEO** - Management and 2 years minimum Poultry Farm experience.

**Secretary** – இளம் பெண் ஆங்கிலம் பேசத்தெரிந்தவர் ComputerBasic, MS Office knowledge.

**Sales Manager** – with Trading Experience.

**Need more staff** – O/L or A/L with Poultry Farm experience - most welcome.

**Driver/ Servant girl.**

Please send the application with Photo to:

**Mr.Sabins Jeyasegara,**
"Pakia Illam", Pulavar Road,
Navaly North, Navaly.

(104163) **Tel. No. 0778350478.**



## ஸ்ரீ அருள்பெற்ற காளியம்மன் ஜோதிடம்



(ஜோதிட நிபுணர் சுவாமிஜீ)

நீங்கள் அனேக ஜோதிடர்களிடம் பார்த்திருக்கலாம். இவரை ஒரு முறை சந்தியுங்கள். உலக அனுபவம் நிறைந்தவர்

கைரேகை, முகநாடி, பெயர், ராசி, உத்தியோகம், திருமணம், பொருள், பணவரவு, கல்வி, வியாபாரம், நிலம், வீடு, யோகம், அதிர்ஷ்ட நம்பர்கள், கணவன் - மனைவி ஒற்றுமையின்மை, குழந்தைப் பாக்கியம், வாகனப் பொருத்தம், பிசாசு, ஏவல், செய்வினை, கண் திருஷ்டி போன்றவற்றிற்கான பரிகாரங்கள் செய்வார். அரசியல் வாதிகளுக்கும் ஜோதிடம் கூறியுள்ளார். மேலும் இவர் சிங்கப்பூர், லண்டன், கனடா, சுவிர்சலாண்ட், நியூஸ்லாண்ட், இந்தியா மற்றும் மலேசியா போன்ற பிரசித்திபெற்ற நாடுகளுக்குச் சென்றும் ஜோதிடம் கூறியுள்ளார்.

தொடர்பு எண்: CONTACT NUMBER T.P.: 0772560822, 0773351612

(முற்பகல் 10 மணி முதல் மாலை 6 மணி வரை அவரை நேரில் சந்திக்கலாம்)

420/4, கே.கே.எஸ்., றோட், சிவன்கோயிலடி, யாழ்ப்பாணம்.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### புலமைப்பரிசில் பரீட்சை - 2010

| | | |
|---|---|---|
| 1. | எஸ்.நிஜன் | 163 |
| 2. | பி.சஞ்சுகாஜினி | 161 |
| 3. | எஸ்.மதுமிதா | 144 |

மேலும் 100 புள்ளிக்கு மேல் எடுத்த மாணவர்கள்

| | | |
|---|---|---|
| 1. | எஸ்.விதுரஸ் | 131 |
| 2. | ஏ.றோசனா | 130 |
| 3. | எஸ்.பகிர்சன் | 128 |
| 4. | வை.அலெக்ஸ்ராம் | 113 |
| 5. | என்.விதுஷன் | 113 |
| 6. | எஸ். சலக்ஸ்ரிகா | 108 |
| 7. | ஆர்.டசிபரன் | 100 |

இவர்களது வெற்றிக்கு வழிகாட்டி ஊக்கமளித்த ஆசிரியை திருமதி சஸ்கந்தகுமார் அவர்களையும் மேலும் ஊக்கமளித்த அதிபர், ஆசிரியர்களையும் உளமாரப்பாராட்டி வாழ்த்துவதோடு நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/ தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி
தெல்லிப்பளை.



## தவறிவிட்டது

இடைக்குறிச்சி, வரணியைச் சேர்ந்த கந்தையா தனேஸ்வரன் என்பவரது தே.அ.அட்டை (881002949V) மற்றும் இதர ஆவணங்கள் பருத்தித்துறை - யாழ்ப்பாணம் (750)வழி மினி பஸ்ஸில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் உடனடியாக கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.
0212263679, 0774178388



## விற்பனையாளர்கள் தேவை

Electronics மற்றும் Dish Antenna விற்பனை மற்றும் Service செய்யும் எமது நிறுவனத்தின் Colombo Show Room இற்கு மேற்படி துறையில் விற்பனை அனுபவமும் பேச்சுத் திறனும் உடைய விற்பனையாளர்கள் தேவை. உணவு, தங்குமிடத்துடன் திறமைக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.

**Sats Tech Engineers(Pvt) Ltd,**
No 51A/102 Wolfendhal Street, Colombo-13
Ph: 0114368835/ 0117242479/ 0114562929/ 0777710785



## தவறிவிட்டது

கனகராயன்குளம் வடக்கு, வவுனியாவைச் சொந்த முகவரியாகக் கொண்ட சின்னத்தம்பி பகிஸ்கரன் என்னும் பெயருடைய எனது தேசிய அடையாள அட்டை (இல. 802925832V), வாகன அனுமதிப்பத்திரம், முகாம் அடையாள அட்டை வேறு பல முக்கிய ஆவணங்கள், சிறுதொகைப் பணம் என்பன கொண்ட பேர்ஸ் 30.09.2010 வியாழன் அன்று அளவெட்டிக்கும் நெல்லியடிக்கும் இடையில் தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ந.பாலகிருஷ்ணன், கலைவாணி மில் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இலக்கம்: 0212223258, 0773116564

# போதிய நிதியுதவி கிடைக்குமானால் பதிவுகள் முழுமையாகக் கணனி மயமாகும்

## யாழ்.மாவட்ட உதவிப் பதிவாளர் கூறுகிறார்

யாழ்ப்பாணம்,ஒக்.5

போதியளவு நிதி உதவி கிடைக்குமானால் 1960ஆம் ஆண்டுக்கு முன்னரான இறப்பு, பிறப்பு மற்றும் விவாகப் பதிவுகள் யாவும் கணனி மயப்படுத்தப்படும் என்று யாழ்.மாவட்ட உதவிப் பதிவாளர் ப.பிரபாகர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த இறப்பு, பிறப்பு, விவாகப் பதிவுகள் யாவும் கணனி மயப்படுத்தும் நடவடிக்கைகள் துரித வேகத்தில் நடைபெற்று வருகிறது.

1960ஆம் ஆண்டுக்குப் பின்னரான இறப்பு, பிறப்பு, விவாகப் பதிவுகள் முதற்கட்டமாக கணனி மயப்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்தப் பணிகள் இரண்டு மாதத்திற்குள் பூர்த்தி செய்வதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் நிதியுதவியுடன் இந்த முதற்கட்டப் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

1960ஆம் ஆண்டுக்கு முன்னரான பதிவுகள் கணனி மயப்படுத்துவதற்கு போதியளவு நிதி இல்லை. அது கிடைக்குமானால் அந்தப் பணிகளும் ஆரம்பிக்கப்படும்-என்றார். (த-9)

# வீதியில் குவித்து வைக்கப்பட்ட பொருள்களால் போக்குவரத்துச் செய்வதில் மக்கள் சிரமம்

கொழும்புத்துறை,ஒக்.5

சுண்டிக்குளி விதானையார் வீதிச் சந்தியின் நடுவே குவித்து வைக்கப்பட்டுள்ள மண் மற்றும் பாரிய நீர்ப்போக்கி குழாய்களால் மக்கள் போக்குவரத்துச் செய்வதில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

வெள்ள வாய்க்கால் திருத்தத்திற்காக கொண்டுவரப்பட்ட இப்பொருள்கள் கடந்த பல நாள்களாக நடுவீதியில் இருப்பதால் பிரதான வீதியில் இருந்து ஒழுங்கைக்கு செல்லும் வாகனங்கள், பாதசாரிகள் விபத்துக்களை எதிர்நோக்கி வருவதாகக் கூறப்படுகிறது.

அப்பகுதியில் சுற்றுலாப் பயணிகள் விடுதியும் காணப்படுவதால் வாகனங்கள் சென்று வரத் தடையாக உள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர். (204-135)

# இலவசப் பாடநூல்கள் வந்து சேர்ந்தன

வடமராட்சி கிழக்கில் மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்ட பின்னர் மீளவும் இயங்கத் தொடங்கியுள்ள 7 பாடசாலைகள் உட்பட அனைத்துப் பாடசாலைகளுக்குமான அடுத்த ஆண்டுக்கான இலவசப் பாடநூல்கள் கல்வி அமைச்சின் பாடநூல் வெளியீட்டுத் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மூன்று தொகுதியாக லொறிகள் மூலம் எடுத்து வரப்பட்டுள்ள இப்பாடநூல்களை மருதங்கேணி கோட்டக்கல்வி அதிகாரி கே.பொன்னையா பொறுப்பேற்றுள்ளார். பாடசாலை ரீதியாக இப்பாட நூல்கள் விரைவில் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன. (த-190)

# சிவன்பண்ணை வீதியில் கழிவுப் பொருள்கள்; சுகாதாரச் சீர்கேடு ஏற்படுவதாக முறைப்பாடு

கொழும்புத்துறை,ஒக்.5

கொட்டடி,சிவன்பண்ணை வீதிப் பகுதியில் கழிவுப்பொருள்கள் உரிய முறையில் அகற்றப்படாமையால் சுகாதாரச் சீர்கேடுகளை எதிர்நோக்கி வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இப் பகுதியில் உள்ள சுற்றுலா விடுதிகளில் தங்குவோரால் வீசப்படும் வெற்றுப் போத்தல்கள், இளநீர் கோம்பைகள் மற்றும் கழிவுகள் நீண்ட நாள்களாக குவிந்து கிடப்பதைக் காணமுடிகிறது.

கழிவுநீர் வாய்க்கால்கள் சேதமடைந்து தடைப்பட்டுள்ளதால் கழிவுநீர் தேங்கிநின்று துர்நாற்றம் வீசுவதோடு நுளம்புப் பெருக்கத்திற்கும் காரணமாக அமைவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். (த-204-135)

# வெள்ளத்தினால் மூழ்கும் வீதிகள்; போக்குவரத்தில் பயணிகள் சிரமம்

யாழ்ப்பாணம், ஒக்.5

யாழ்.இந்துக் கல்லூரியின் தெற்குப் புறத்தில் அமைந்துள்ள



வீதி தற்போது பெய்யும் மழையைத் தொடந்து வெள்ளத்தினால் நிரம்பிக் காணப்படுகின்றது.

இந்துக் கல்லூரி வீதியையும் காங்கேசன்துறை வீதியையும் இணைக்கும் சந்தியிலும் வெள்ளம் தேங்கிக் காணப்படுகின்றது.

இந்த வீதியில் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலதரப்பட்டவர்கள் பயணிக் கின்றனர்.

இப்பகுதியில் கடந்த காலத்தில் இருந்த வெள்ள வாய்க்கால்கள் மூடப்பட்டமை மற்றும் வீதிகள் கணிய மதிப்பீடு இன்றி உயர்த்தப்பட்டமை ஆகிய காரணங்களினால் தேங்கி நிற்கும் வெள்ளம் வழிந்தோட இடமில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வீதியைத் திருத்தியமைக்க யாழ்.மாநகரசபையும், வீதி அபிவிருத்தி அதிகார சபையும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என மக்கள் கோரியுள்ளனர். (த-204-86)

# மீள்குடியேறிய மக்களுக்கு தற்காலிக வீடுகள்; பணிகளை ஆரம்பித்தது 'சோஆ' நிறுவனம்

யாழ்ப்பாணம்,ஒக்.5

மணியந்தோட்டத்தில் மீளக் குடியமர்ந்த மக்களுக்கு 'சோஆ' நிறுவனத்தினால் தற்காலிக அரை நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அப்பகுதியில் மீள்குடியேறும் குடும்பங்களுக்கு 200 வீடுகள் அமைத்துக் கொடுக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் தற்போது 26 வீடுகள் அமைக்கும் பணிகள் நிறைவடையும் கட்டத்தில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஒவ்வொன்றும் ஒரு லட்சத்து 20ஆயிரம் ரூபா செலவில் அமையும் இவ்வீடுகள் நிரந்தர வீடுகள் அமைக்கக் கூடிய வகையில் காணியின் வேறொரு பகுதியில் அமைக்கப்படுகின்றன.

நிலமும் அரைப்பகுதி சிவரும் சிமெந்தினாலும் கூரை தகரத்தினாலும் அமைக்கப்பட்ட வீடுகளையே 'சோஆ' தொண்டு நிறுவனம் அமைத்துக் கொடுக்க முன்வந்துள்ளதாகப் பயனாளிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர். (த-204-135)

# செபமாலை அன்னை பெருவிழா

கொழும்புத்துறை,ஒக்.5

கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை திருவிழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது.

இந்தத் திருவிழாவில் கலை பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, யாழ்.மாநகர உதவி மேயர் து.இளங்கோ ஆகியோர் கலந்து கொண்டனர்

அமைச்சர் அன்னையின் தேர்வடத்தை இழுத்து பவனியை ஆரம்பித்து வைத்தார். பெருந்திரளான பக்தர்கள் கலந்து கொண்டு அன்னையின் ஆசி பெற்றுச்சென்றனர். (204-135)

# விபத்தில் காயம்

தென்மராட்சி,ஒக்.5

ஹன்டர் வாகனமும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் மோட்டார் சைக்கிளோட்டி படுகாயமடைந்தார்.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக் கிழமை சாவகச்சேரி கொமர்ஷல் வங்கிக்கு முன்பாக இடம்பெற்றுள்ளது.

மருதன் கடவையைச் சேர்ந்த அப்துல் பாசின் முகமட் ரிசாட் (வயது 24) என்பவர் இந்த விபத்தின்போது காயமடைந்து சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (எ-207)

# மின்கம்பம் வீழ்ந்து குடும்பஸ்தர் காயம்

தென்மராட்சி,ஒக்.5

புதிய மின்கம்பம் ஒன்றை நடுவதற்காக உயர்த்தியபோது தவறி வீழ்ந்ததில் கீழே நின்றவரின் தலையில் காயமேற்பட்டது.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை மீசாலையில் இடம் பெற்றது. இதே இடத்தைச் சேர்ந்த கே.நவரத்தினம் (வயது 58) என்பவரே இவ்வாறு காயமுற்ற நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (எ-207)

# வீதி புனரமைப்புக்கு கற்கள் குவிக்கப்பட்டும் பணிகள் இதுவரை ஆரம்பமாகவில்லை

யாழ்ப்பாணம்,ஒக்.5

ஈச்சமோட்டை குறுக்கு வீதிப் புனரமைப்புப் பணிக்கெனக் கற்கள் குவிக்கப்பட்டு இரண்டு மாதங்கள் கடந்துள்ளபோதும் இதுவரை புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது.



மழைகாலம் ஆரம்பித்துள்ளமையால் இந்த வீதியில் வெள்ளநீர் தேங்கியுள்ளது. இதனால் இந்த வீதியூடாகப் பயணிப்பவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

எனவே இந்த வீதியைப் புனரமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-204-23)

# காட்டுக் கந்தோர் ஒழுங்கை துப்புரவு செய்யப்படவில்லை

கைதடி,ஒக்.5

யாழ்ப்பாணம், சுண்டுக்குளிப் பகுதியிலுள்ள காட்டுக் கந்தோர் ஒழுங்கை கடந்த சில மாதங்களாக மாநகரசபைத் தொழிலாளர்களால் துப்புரவு செய்யப்படாமல் கழிவுப் பொருள்கள் நிறைந்து காணப்படுகின்றது.

இந்த வீதி முன்னைய காலங்களில் மாநகரசபையின் வீதித் தொழிலாளர்களால் பராமரிக்கப்பட்டு வந்தது. எனினும் தற்போது துப்புரவுப் பணிகள் நடைபெறுவதில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் வீதியின் இருமருங்கும் பற்றைகள், செடி, கொடிகள் வளர்ந்து காணப்படுவதாகக் கூறப்படுகின்றது.

மழைகாலம் ஆரம்பித்துள்ளதனால் நுளம்புகள் பெருகி டெங்கு போன்ற நோய்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதியைத் தொடர் பராமரிப்பில் வைக்குமாறும் இப்பகுதி மக்கள் மாநகர சபையிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (204-288)

# கொழும்புத்துறையில் புதிய வீதி மாநகர முதல்வர் திறந்து வைத்தார்

கொழும்புத்துறை,ஒக்.5

கொழும்புத்துறை மேற்கு வதிரிபீட விநாயகர் ஆலயத்திற்குப் புதிதாக அமைக்கப்பட்ட வெளி வீதியை யாழ். நகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெற்றது.

விநாயகர் ஆலயத்திற்கு வெளி வீதி மண்ணினால் ஆனதாக இருந்ததையடுத்து இதுவரை காலமும் தேர்ப்பவனி கிராம வீதியூடாக இடம்பெற்றது.

யாழ்.மாநகர சபையினதும் மேயரின் நேரடி அன்பளிப்பைப் பயன்படுத்தி யாழ்.மாநகர சபையால் இந்த வீதி அமைக்கப்பட்டது. (204-135)



யாழ்ப்பாணம் வர்த்தக தொழில்துறை மன்றத்தின் ஏற்பார்ட்டில் கைத்தொழில் துறையினருக்கான சட்ட நடைமுறைகள் தொடர்பான பயிற்சிப் பட்டறை கடந்த சனிக்கிழமை யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படம்.

இந்த நிகழ்வுக்கு வளவாளராகக் கலந்துகொண்ட சட்டத் தரணிகளான திருமதி அஜித எதிரிமான, கே.நீலகண்டன், எ.எ.எம்.இலியஸ், கே.கனக ஈஸ்வரன் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம்.

*(படம்: ரட்ணம்)*

# இழந்த பெருமையை யாழ்ப்பாணம் மீட்க கல்விச் சமூகம் அர்ப்பணிப்புடன் செயலாற்றட்டும்

## நூற்றாண்டு விழாவில் கல்விப் பணிப்பாளர் உரை

சுன்னாகம்,ஒக்.5

''யுத்தகாலத்துக்கு முன்னரான காலப்பகுதியில் யாழ்ப்பாணம் எவ்வாறு உயர்நிலையில் இருந்ததோ அந்த நிலைமையை மீண்டும் ஏற்படுத்த யாழ்ப்பாணக் கல்விச் சமூகம் அர்ப்பணிப்புடன் வேலைத்திட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்த வேண்டும்'' இவ்வாறு தெரிவித்தார் வலிகாமம் வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம்.


மல்லாகம் மகாவித்தியாலயத்தின் 150 ஆவது ஆண்டு நிறைவு மலர் வெளியீட்டில் கௌவர விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவர் இவ்வாறு தெரிவித்தார். வித்தியாலய அதிபர் மா.நாகேந்திரசீலன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றும்போது கூறியதாவது:-

தமிழ்மக்கள் பின்னடைவு நிலையிலிருந்து எதிர்கால இருப்பை உயர்த்திக்கொள்வதற்கு சமூக ரீதியில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவேண்டும். வாசிப்புத் திறனை வளர்ப்பதனூடாகவே இதனைச் சாத்தியப்படுத்தலாம். வீட்டில் பெற்றோர்கள் மத்தியிலும் பாடசாலையில் ஆசிரியர்கள் மத்தியிலும் உருவாக்கப்படும் வாசிப்புப் பழக்கம் பிள்ளைகளைப் பின்பற்ற வைக்கும்.

வாசிப்பு அனுபவங்களே ஒருவரது அறிவை மேம்படுத்தி அவனை மனிதனாக்குகிறது. ஒவ்வொரு வீட்டிலும் ஓர் அறையை நூலகத்துக்காக ஒதுக்கவேண்டும். இன்று அறநெறிக்கு மாறாகச் செயற்பட இளைஞர்கள் தூண்டப்படுகிறார்கள். இதைத் தடுக்க முன்னுதாரண மனிதர்களின் வாழ்க்கை வரலாற்றினை மாணவர்கள் படிப்பதற்கு ஊக்கமளிக்க வேண்டும்.

வெறுமனே பரீட்சைக் கண்ணோட்டத்தில் மாணவர்களைச் செயற்படவைக்கும் போக்குகளையப்பட வேண்டும். சமூக விழுமியக் கருத்துக்களை மாணவர்களது நெஞ்சில் பதிப்பதற்கு முயலவேண்டும். இவ்வாறு செயற்படும்போதே பிள்ளைகளுக்கு அறநெறி நிற்கும் பண்நிலைப்பட்ட அறிவு ஏற்படும் - என்றார். (உ-38)

# மக்கள் பணியில் வல்வை சனசமூக சேவா நிலையம்



வடமராட்சி மண்ணிலே பல அறிவாளர்களையும் கலைஞர்களையும் தந்து கொண்டு இருக்கின்ற ஊர் வல்வெட்டித்துறை. இந்த வல்வெட்டித்துறை மண்ணிலே மக்களின் அறிவுப்பசியைத் தீர்க்க அரும்பாடுபட்டு வரும் சனசமூக நிலையங்களில் வல்வை சனசமூக சேவா நிலையமும் ஒன்றாகும்.

வல்வையில் கப்பற்தொழில் வீழ்ச்சி அடைந்திருந்த ஒரு காலகட்டத்தில் வல்வை மக்களின் கல்வித்தேவையை நிவர்த்தி செய்து அவர்களை முன்னேற்ற வேண்டும் என்ற ஒரே இலட்சிய வீச்சுடன் க.ஆனந்தமயில் என்பவரின் அயராத முயற்சியுடன் ஆரம்பிக்கப்பட்டதே வல்வை சனசமூக சேவா நிலையம்.


இது1943ஆம் ஆண்டு மார்ச்மாதம் 10ஆம் திகதி ''வல்வை இலவச வாசிகசாலை''என்ற பெயரில் சைவசமய முறைப்படி ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன் முதல் தலைவராக சாந்தமூர்த்தியும் செயலாளராக து.நவரத்தினமும் பொருளாளராக வெங்கடாசலபிள்ளையும் தெரிவானார்கள்.

இந்த வாசிகசாலையின் அமைவிடத்தைப் பொறுத்தவரையில் முதலில் நவீன சந்தைக்கு நேர்வடக்கில் உள்ள விஸ்வநாதர் கிட்டங்கியின் மேற்குப் பக்க அறையில் அமைந்திருந்தது. இது தற்போது வல்வைச் சந்தியில் அமைந்து சனசமூகப் பணியைச் செவ்வனே ஆற்றி வருகின்றது.

வடமராட்சியில் கடந்த காலங்களில் இடம்பெற்ற பெரும்போர் இச்சனசமூக நிலையத்தின் வளர்ச்சிக்கு நெருக்கடியைக் கொடுத்தது. ஆனாலும் சாவில் இருந்து புறப்படும் பீனிக்ஸ் பறவையைப் போல இச்சனசமூக நிலையம் மீண்டும் புத்தெழுச்சி பெற்று வளர்ச்சி கண்டு மக்களுக்கு பெரும்பணி ஆற்றிவருகின்றது.

**ஆன்மீகப் பணி**

இந்தச் சனசமூக நிலையம் மக்களின் அறிவுப் பசியைப் போக்கும் வகையில் சொற்பொழிவுகளையும், பஜனைகளையும் நடத்தி ஆன்மீகப் பணியினையும் செவ்வனே ஆற்றிவருகின்றது.



ஆரம்பகாலத்திலிருந்தே கலைவாணி என்ற பெயரில் இச்சனசமூக நிலையெத்தினரால் கையெழுத்து சஞ்சிகை ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றது. இச்சனசமூக நிலையம் கவிதை, கட்டுரை, சிறுகதை போன்ற இலக்கியப் போட்டிகளையும் நடத்தி இலக்கியப் பணிகளையும் ஆற்றி வருகின்றது. ஆண்டுதோறும் காந்தி ஜயந்தி நிகழ்வுகளையும் நடத்தி வருகின்றது. வருடந்தோறும் நவராத்திரி விழா இச்சனசமூக நிலையத்தில் சிறப்புடன் நடத்தப்பட்டு வருகின்றது.

1958ஆம் ஆண்டு இடம்பெற்ற பாரிய வெள்ளப்பெருக்குக் காரணமாக பல குடும்பங்கள் இடம்பெயர்ந்த சூழ்நிலையில் அரசிடமிருந்து நிவாரண உதவிகளைப் பெற்று பல உதவிகளையும் ஆற்றியுள்ளது.

விளையாட்டைப் பொறுத்தவரையில் மரதன் ஓட்டப் போட்டிகளையும் நடத்தி விளையாட்டுத் துறையின் எழுச்சிக்குப் பாரிய உதவி. இது மட்டுமல்ல ஓட்டப் போட்டி உதைபந்தாட்டப் போட்டி, கரம், சதுரங்கம் போன்றவற்றை சிறப்பாக நடத்தி வருகின்றது.

இவ்வாறான கணக்கற்ற மக்கள் பணிகளைச் செய்துவரும் சனசமூக நிலையம் பாராட்டப்பட வேண்டியதாகும்.




# சோதனைகளுக்கு மத்தியிலும் சாதனைகளை தொடரும் வல்வை சிவகுரு வித்தியாலயம்

வடமராட்சியின் புகழ்பூத்த பாடசாலைகளில் வல்வை சிவகுரு வித்தியாலயமும் ஒன்றாகும். இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட காலம்முதல் இன்றுவரை பல்வேறு கல்வியியலாளர்களையும் அறிஞர்களையும் கலைஞர்களையும் புலவர்களையும் பேராளர்களையும் தந்து கொண்டிருக்கின்றது.

1890ஆம் ஆண்டு வல்வை வைத்தீஸ்வரன் கோயிலுக்கு அருகில் உள்ள காணியில் சமூக சேவையாளராகிய க.சிதம்பரப்பிள்ளை என்ற பெரியாரால் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பகாலத்தில் ''ஆங்கில பாடசாலை'' என்றே இது அழைக்கப்பட்டு வந்தது.




பின்னர் சைவமும் தமிழும் தழைத்தோங்கும்படியாக சிவகுரு வித்தியாலயம் என்ற நாமம் சூட்டப்பெற்றது.

இப்பாடசாலையின் முதன்மை ஆசிரியராக ஆரம்பகாலத்தில் புற்றளை சின்னையா உபாத்தியார் விளங்கினார். இவரின் வரவு இப்பாடசாலையின் வளர்ச்சிக்குப் பெரும் வலுச்சேர்த்தது. இவரின் பின்னர் ரி.கே.அருணாசலம், வீரகத்தி, க.வல்லிபுரம், வ.ஆறுமுகம் போன்றவர்கள் தலைமை ஆசிரியர்கள் ஆனார்கள்.

இவர்களின் பின்னர் அல்வாய் ஊரைச் சேர்ந்த சி.கணபதிப்பிள்ளை ஐயாவின் வருகையின் மூலம் இக்கல்லூரியின் வளர்ச்சி மேலும் ஓங்கத் தொடங்கியது. இவரின் காலத்திலேயே மாணவர்களின் எண்ணிக்கையும் பல மடங்காக அதிகரித்தது. இவரின் 35 வருட கல்விப் பணியின் பெறுபேறாக பல தமிழ் அறிஞர்களும் சட்ட வல்லுநர்களும், பொறியியல் மேதைகளும் இக்கல்லூரியின் வழியாக உருவானார்கள்.

பிற்காலத்தில் இப்பாடசாலை பெரும் இடநெருக்கடியைச் சந்தித்தது. இதனால் பாடசாலை இடம்மாற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இந்நிலையில் இப்பிரதேச சமூக சேவையாளராக விளங்கிய கந்தசாமி பொன்னுச்சாமி என்பவர் பரந்த உள்ளத்தோடு குறைந்த விலையிலே நிலத்தை இப்பாடசாலைக்காகக் கொடுத்து உதவினார். இப்பாடசாலையின் முகாமையாளராக விளங்கிய ஞா.தையல்பாகர் அவர்கள் அரச உதவி எதுவுமின்றி இப் பாடசாலையை தனது சொந்த முயற்சியில் கட்டி முடித்தார்.

இதன் பின்னர் அல்வாய் துரைராஜா தலைமை ஆசிரியர் பொறுப்பை ஏற்றார். இவரின் காலத்தில் இப்பாடசாலையின் ஓலைக்கூரை ஓட்டுக் கூரையாக மாறியது. இதன்பின்னர் 60 அடி நீளக்கட்டடம் உட்பட பாரிய கட்டடங்கள் அமைக்கப்பட்டு எழுச்சிகண்டது. 1969ஆம் ஆண்டு பாரிய விஞ்ஞானகூடம் அமைக்கப்பட்டது.

ஆனாலும் காலத்தின் சதியால் 26.12.2004 அன்று உலகத்தையே அதிர்ச்சிக்கும் சோகத்திற்கும் உள்ளாக்கிய சுனாமி அலைகள் இப்பாடசாலை கட்டடங்கள் மீதும் தனது கோரத்தாண்டவத்தைக் காட்டின. இதனால் பௌதீக வளங்கள் அனைத்தும் முற்றாக நிர்மூலம் ஆகின. இதனால் இப்பாடசாலையை அமைப்பதற்கு இவ்விடம் பொருத்தமற்றது என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. ஆனால் அம்முயற்சி தோல்வியில் முடிவடைந்தது. பின்னர் 24 வகுப்பறைகளைக் கொண்ட மாடிக் கட்டடத்துக்கு யுனிசெப் அமைப்பினரால் வேலை ஆரம்பிக்கப்பட்டது. ஆனாலும் 2006ஆம் ஆண்டு ஓகஸ்ட்மாதம் 11ஆம் திகதி குடாநாட்டில் ஏற்பட்ட அசாதாரண யுத்த சூழ்நிலையால் வேலைகள் பாதிக்கப்பட்டன. இதன் பின்னர் 06.09.2008 அன்று புதிய கட்டடத்தொகுதி அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

இப்பாடசாலைக்கு இன்னும் 16 வகுப்பறைகள் தேவையாக உள்ளன. ஆனாலும் இருக்கின்ற கட்டடத் தொகுதிகளைப் பயன்படுத்தி நல்ல சேவையை இக்கல்லூரி வழங்கி வருகிறது.

01.10.2006இல் இருந்து இப்பாடசாலையில் அதிபராக அ.சிவநாதன் கடமையாற்றி வருகின்றார்.

இப்பகுதிக்கும் பிரதேசத்துக்கும் இப்பாடசாலையின் சேவை தொடர்ந்து கிடைத்துவரும். அதனால் இப்பகுதியின் இளம் சமூகம் மேலும் முன்னேறும் என்றும் எதிர்பார்க்கலாம்.

# வெளியேறும் நிலையில் 150 குடும்பங்கள் சரஸ்வதி கிராமத்தின் அவலம் நீங்குமா?

கிளிநொச்சி,ஒக்.5

கிளிநொச்சி பன்னங்கண்டி சரஸ்வதி கிராம மக்கள் தமக்கென சொந்தமாகக் காணிகள் இல்லாததால் நிரந்தரக் குடிமனைகளை அமைப்பதில் பெரும் சிரமங்களைச் சந்தித்து வருகின்றார்கள். போர்ச் சூழ்நிலைக்கு முன்னர் இந்தக் குடும்பத்தினர் தனியார் ஒருவருக்குச் சொந்தமான 40 ஏக்கர் காணியில் வீடுகளை அமைத்து வசித்து வந்தார்கள். தற்போது 150 குடும்பங்கள் நலன்புரி முகாம்களிலிருந்து மீண்டு இக்கிராமத்தில் தறப்பாள் குடிசைகளில் குடியேறியுள்ளன.

போரின் போது உறவுகள், உடைமைகளை இழந்த இந்த ஏழைக் குடும்பத்தினர் அன்றாடம் கூலி வேலை செய்து பிழைப்பவர்கள். இதனால் காணிகளை விலைக்கு வாங்கும் அளவுக்கு இவர்களிடம் பணவசதி இல்லை.

தற்போது காணி உரிமையாளர் இவர்களைக் காணியை விட்டு எழும்புமாறு கூறியுள்ளார். கணவன் மாரை சிறையிலும், காணாமலும் பிரிந்து வாழும் குடும்பங்கள் என்பதால் தாம் எங்கே போவது என்ன செய்வது என்று தெரியாத நிலையில் இக்குடும்பத் தலைவிகள் பரிதவித்து நிற்கின்றனர்.

எமது வறுமை நிலையையும் குடும்ப நிலையையும் கருத்தில் கொண்டு எமக்கு உதவி செய்ய யாராவது முன்வருவார்களா? எமக்கான தீர்வுதான் என்ன? வாழ்க்கை முழுவதும் ஏதிலிகளாக வாழ நாம் என்ன பாவம் செய்தோம் என இந்த மக்கள் ஒவ்வொருவரிடமும் இருந்து பல கேள்விகள் எழுகின்றன.

பன்னங்கண்டி சரஸ்வதி கிராம மக்கள் தமது வாழ்விற்கு உரிய தீர்வினைப் பெற்றுத் தருமாறு கண்ணீருடன் வேண்டுகோள் விடுப்படுகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-313)




# மழையினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள கனகாம்பிகைக்குளம் மகா வித்தியாலயம்

யாழ்ப்பாணம்,ஒக்.5

தற்போது பெய்துவரும் பெருமழையினால் கிளிநொச்சி கனகாம்பிகைக்குளம் மகாவித்தியாலய மாணவர்களின் கல்விநிலை பெரிதும் பாதிப்படைந்துள்ளதாக பாடசாலை வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன.

போருக்கு முன்னர் போதிய அடிப்படை வசதிகளுடனும் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு ஏற்றாற்போல் புதுப் பொலிவுடனும் இந்தப் பாடசாலை காணப்பட்டது. போரின் போது இந்தப் பாடசாலையின் கட்டடங்கள் சிதைவடைந்தன தற்போது மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்கு ஏதுவாக இடிபாடுகள் அகற்றப்பட்டு சில கட்டடங்கள் சீர் செய்யப்பட்டிருந்தது.

அதிக மாணவர்கள் இப்பாடசாலையில் கல்வி கற்பதால் மரங்களின் கீழ் தறப்பாள்களை விரித்து மாணவர்களுக்கு ஆசிரியர்களால் பாடங்கள் நடத்தப்படுகின்றன.

வகுப்பறைகள் சிலவும் மேற்கூரைகள் இல்லாது காணப்படுவதால் மழைநீர் தேங்கி நிற்கிறது. இதனால் மாணவர்கள் வெள்ளத்திலும் சேற்றிலும் கல்வி கற்க வேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. பாடசாலையின் இச்சூழல் கேட்டினால் மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வதில் ஆர்வம் காட்டவில்லையெனப் பெற்றோர் தெரிவிக்கின்றார்கள். (க-313)

## தலைமைச் செயலகம் திறந்து வைப்பு

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கிளிநொச்சி மாவட்டத் தலைமைச் செயலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை மாலை 4 மணிக்கு தந்தை செல்வாவின் புதல்வர் செல்வநாயகம் சந்திரகாசன் செயலகத்தைத் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வுக்கு கட்சியின் தலைவரான வீ.அனந்த சங்கரி தலைமை வகித்தார் என தமிழர் விடு தலைக் கூட்டணியின் ஊடகச் செயலாளர் அறிவித்துள்ளார். (க)

# ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு ஆக்கத்திறன் போட்டிகள்

கிளிநொச்சி,ஒக்.5

கரைச்சிக் கோட்டப் பாடசாலைகளின் ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான ஆக்கத்திறன் போட்டிகள் நாளைக் காலை 9 மணிக்கு கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் ஆரம்பமாகவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி போட்டிகளில் கோலம் போடுதல், விரைவு கணிதம், வாய்ப்பாடு மனனம் செய்தல், திருக்குறள் ஒப்புவித்தல், சிறுவர் நாடகம் போன்றன இடம்பெறுமென கரைச்சிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அ.அமிர்தலிங்கம் அறிவித்துள்ளார். (க-405)

# இரணைமடுக்குள வீதியில் திருடர்தொல்லை; அச்சத்துடன் பயணிக்கும் பொதுமக்கள்

கிளிநொச்சி,ஒக்.5

இரணைமடுக்குள வீதியில் திருடர்கள் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதால், அவ்வீதியால் போக்குவரத்துச் செய்வதற்கு பொது மக்கள் அச்சம் தெரிவிக்கின்றார்கள்.

இப்பிரதேசம் காட்டுப் பிரதேசமாக உள்ளது. தொலைதூரங்களில் குடிமனைகள் அமைந்துள்ளன. கிளிநொச்சி நகரப் பகுதி, மற்றும் உறவினர் வீடுகளுக்குச் செல்வோர், பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்கள் ஆகியோர் இவ்வீதியால் போக்குவரத்துச் செய்து வருகிறார்கள்.

''காட்டுப்பிரதேசம் என்பதால் திருடர்கள் மறைவாக நின்று வீதியில் பயணிப்போரை அச்சுறுத்திப் பணம், நகைகள் போன்றவற்றைத் திருடுவதற்கு முயற்சிக்கிறார்கள். இதனால் அவ்வீதியால் தனியாகப் பயணம் செய்வதற்கு அச்சப்படுகிறோம்'' என அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றார்கள். (க-313)

# கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளின் ஆங்கில தினப்போட்டி முடிவுகள்

கிளிநொச்சி,ஒக்.5

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே வலய மட்டத்தில் நடத்தப்பட்ட இந்த ஆண்டுக்கான ஆங்கில தினப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ, மாணவியரின் விவரங்கள்.

பாட்டு தரம்-1-2

முதலாமிடம் - பாரதி வித்தியாலயம், 2 ஆம் இடம் - ஜெயபுரம் மகாவித்தியாலயம், 3 ஆம் இடம் - தர்மபுரம் இல.01 அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை.

தரம்-5-6

முதலாமிடம் - முழங்காவில் மகாவித்தியாலயம், 2 ஆம் இடம் - கிளிநொச்சி மத்திய கல்லூரி, 3 ஆம் இடம் - ஜெயபுரம் மகாவித்தியாலயம்.

தரம் 6- 8

முதலாமிடம் - ஜெயபுரம் மகாவித்தியாலயம், 2 ஆம் இடம் - கிளிநொச்சி இந்துக் கல்லூரி.

தரம் 9-11

முதலாமிடம்- ஜெயபுரம் மகாவித்தியாலயம், 2 ஆம் இடம் - தர்மபுரம் மகாவித்தியாலயம்.

பாத்திரமாக நடித்துக் காண்பித்தல்

தரம் 6

முதலாமிடம் - புனித திரேச பெண்கள் கல்லூரி

தரம் -8


முதலாமிடம் - புனித திரேச பெண்கள் கல்லூரி, 2 ஆம் இடம் - இரமநாத புரம் மேற்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை.

தரம் -9

முதலாமிடம் - புனித திரேச பெண்கள் கல்லூரி.

நாடகம் மேற்பிரிவு

முதலாமிடம் - வட்டக்கச்சி மகாவித்தியாலயம். (க-405)



இரணைமடுக் குளத்தில் இருந்து நீர் விநியோகிக்கும் பிரதான வாய்க்காலில் கோவிந்தன் கடைச் சந்தியில் அமைந்துள்ள நீர் வேகத் தடுப்பு அணை புனரமைக்கப்பட்டு வருவதையும், கதவுகள் பொருத்தப்படவுள்ள பகுதிகளையும் படங்களில் காணலாம்.
(படங்கள் கிளிநொச்சிச் செய்தியாளர்)

## வைத்தியசாலை இயங்காததால் மக்கள் அவதி

போரினால் சேதத்துக்குள்ளாகியிருக்கும் அளம்பில் - செம்மலைப் பிரதேச வைத்தியசாலையை மீண்டும் இயங்க வைப்பதற்கு ஆவன செய்யுமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மீளக் குடியமர்ந்துள்ள முல்லைத்தீவின் அளம்பில் - செம்மலை வாழ் மக்கள் தமது மருத்துவத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக நீண்ட தூரம் செல்லவேண்டியுள்ளது. இதனால் நோயாளிகள் மிகுந்த சிரமத்தை எதிர்கொள்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (க-20)

# கிளிநொச்சியில் சிறுவர் தின நிகழ்வு

கிளிநொச்சி,ஒக்.5

கிளிநொச்சி ஆதவன் முன்பள்ளியின் சிறுவர்தின நிகழ்வுகள் கடந்த வெள்ளிக்கிழமை மிகச் சிறப்பாக நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 150 க்கும் மேற்பட்ட முன்பள்ளிச் சிறார்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். முன்னதாக ஸ்ரீ மீனாட்சியம்மன் ஆலயத்தில் விசேட பூசைகள் நடைபெற்று பல்வேறு வேடங்களை அணிந்த சிறார்கள் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

ஆலய முன்றலில் இடம் பெற்ற நிகழ்வில் வடமாகாண மேலதிகப் பணிப்பாளர் எஸ்.வரதராஜன் ஆசியுரையை வழங்கி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராசா சிறார்களுக்கு மலர்மாலை அணிவித்து ஊர்வலத்தை ஆரம்பித்து வைத்தார். பின்னர் சிறார்கள் அனைவரும் ஆதவன் முன்பள்ளிக்கு அழைத்துச் செல்லப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின.

மண்டப நிகழ்வுகள் ஆதவன் முன்பள்ளியின் பணிப்பாளர் சி. மகேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இதில் சர்வமதப் பிரார்த்தனையைத் தொடர்ந்து கிளிநொச்சி மகாவித்தியாலய அதிபர் அ.பங்கையற்செல்வன், சைவ மங்கையர் கழகச் செயலாளர் திருமதி கோ.செல்வராணி, முன்பள்ளி ஆசிரியை திருமதி பூமா, முன்பள்ளியின் அபிவிருத்திச் சங்கத் தலைவர் தி.சிவரூபன் ஆகியோர் உரையாற்றினர்.

தொடர்ந்து மாணவர்களுக்கு இனிப்புப் பண்டங்கள், குளிர்பானம் என்பன வழங்கப்பட்டதோடு, தேசிய சேமிப்பு வங்கியில் சிறுவர் சேமிப்புக்கணக்குகளும் ஆரம்பிக்கப்பட்டன. (க-405)

# வன்னி ஆசிரியர், பெற்றோர் மனங்களில் யுத்தத்தின் வடு இன்றும் மறையவில்லை

## ஜீ.ரி.இசற் ஆலோசகர் சுந்தரம் டிவகலாலா கூறுகிறார்

வலி.வடக்கு,ஒக்.5

வன்னியில் உள்ள ஆசிரியர்கள் மாணவர்களுக்குக் கற்பிக்க முடியாமல் திண்டாடிக் கொண்டு இருக்கின்றார்கள். இதேபோன்று பெற்றோர்களும் தமது செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாதவாறு துன்பப்படுகின்றார்கள்.

மேற்கண்டவாறு முன்னாள் வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரும் ஜீ.ரி.இசற். நிறுவனத்தின் தற்போதைய ஆலோசகருமான சுந்தரம் டிவகலாலா குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணத்தில் நடந்த 'ஏழாவது ஊழி' நூல் வெளி யீட்டு விழாவில் தலைமையுரை நிகழ்த்திய சுந்தரம் டிவகலாலா தொடர்ந்து உரையாற்றும் போது கூறியதாவது:-வன்னி ஆசிரியர்கள் மாணவர்களைக் கண்டதும் தமது பிள்ளைகள், சகோதரர்களின் நினைவுக்கு உள்ளாகி கற்பிக்க முடியாத நிலைமைக்குச் செல்கின்றார்கள்.

இதேபோன்று பெற்றோர்கள் ஏனைய பிள்ளைகளைக் கண்டதும் தமது பிள்ளைகளின் நினைவுக்குள் சென்று துன்பத்திற்குள் ஆழ்ந்து விடுகின்றனர். ஏனைய உறவுகளும் தம்மை விட்டுப் பிரிந்த உறவுகளுக்காக ஏங்கித் தவிக்கும் நிலைமை தொடர்ந்த வண்ணமே உள்ளன.

இன்று மக்கள் நிகழ்வுகளை கைதட்டி உற்சாகப்படுத்தும் மன நிலையில் இல்லாது இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

மனச் சுமைகளுக்கும் மன அழுத்தங்களுக்கும் உள்ளாகி இருப்பதே இத்தகைய நிலைமைக்கு காரணம் இதேபோல கலைத்துறையும் கூட எம்மை விட்டு நாளுக்கு நாள் மறைந்து கொண்டே செல்கின்றது.

இனவாதம் இன்று உலக நாடுகள் பலவற்றிலும் காணப்படுகின்றது. உலக நாடுகளில் பல இனங்கள் துன்பதுயரங்களுக்கு உள்ளாக்கப்பட்டும் அழிக்கப்பட்டும் வருகின்றன.

உலக நாடுகள் தமது பொருளாதார அபிவிருத்திச் செயற்பாடுகளிலும் பார்க்கக் கூடிய தொகையை வரவு செலவுத் திட்டங்களில் இராணுவச் செயற்பாடுகளுக்கு ஒதுக்கும் நிலைமையே காணப்படுகின்றது.

இன்று பிரச்சினைகள் மாறி உள்ளன. உலக நாடுகள் சுற்றுச் சூழல் பாதிப்புகளுக்கு உள்ளாகும் நிலைமை காணப்படுகின்றது.

இன்று உலகில் ஒவ்வொரு நாலு செக்கனுக்கும் ஒரு குழந்தை இறக்கின்றது. இதற்கு சுற்றுச் சூழல் காரணிகளும் கூடக் காரணமாக அமைகின்றன.

சுற்றுச் சூழல் தாக்கத்தினால் 40 லட்சம் பிள்ளைகள் கொல்லப்படுகின்றார்கள். இதேபோன்று உலக நாடுகளில் சுமார் 101 மில்லியன் பிள்ளைகள் பாடசாலை செல்லாத நிலைமை காணப்படுகின்றது- இவ்வாறு அவர் குறிப்பிட்டார். (க-86)

அன்றைய செய்திகள், தகவல்கள் இங்கே பதிவுகளாக...



உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

16.06.1994

✱ அடுத்த ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில் சுதந்திரக் கட்சி வெற்றியீட்டியதும் தாம் விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை மேற்கொள்ளப் போவதாக சந்திரிகா தெரிவிப்பு.

✱ யுத்தத்துக்கு அரசில் தீர்வு காணப்படும் வரை எந்தத் தேர்தலையும் நடத்தத் தாம் அனுமதிக்கப் போவதில்லை என விடுதலைப்புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாக பி.பி.ஸி.செய்தியாளர் தெரிவிப்பு.

17.06.1994

✱ மதவாச்சி- கெப்பிட்டிக்கொல்லாவ பொலிஸ் காவலரண் மீது விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் 4 பொலிஸார் கொல்லப்பட்டதுடன், 4பொலிஸார் காணாமல் போயுள்ளதாகத் தெரிவிப்பு.

✱ மேல்மாகாண ஆளுநர் பதவியில் இருந்து ஜனாதிபதியால் நீக்கப்பட்ட எஸ்.சர்வாநந்தாவை சுதந்திரக் கட்சியில் சேருமாறு அக்கட்சியின் தலைமைப் பீடம் அழைப்பு விடுப்பு.

18.06.1994

✱ ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க மேற்கொண்ட இரண்டாவது அமைச்சரவை மாற்றம் அரச தரப்புக்குள் மேலும் குழப்பங்களுக்கு வழி கோலும் என பி.பி.ஸி. வானொலி தெரிவிப்பு.

✱ எதிர்வரும் நவம்பரில் நாடு முழுவதிலும் ஜனாதிபதித் தேர்தலை பூரணமாக நடைபெறச் செய்வதற்குத் தேவையான ஆற்றல் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு உண்டு என ராய்ட்டர் செய்தி நிறுவனம் தெரிவிப்பு.

19.06.1994

✱ நிபந்தனை எதுவுமின்றி அரசுடன் பேசுவதற்கு தாம் தயாராகவுள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்திருப்பதை அரசு கவனத்தில் எடுத்துள்ளதாக ஜனாதிபதியின் ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவிப்பு.

✱ உயர் கல்வி அமைச்சர் பதவிக்கு மேலதிகமாக தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் பதவியும் அனுரா பண்டாரநாயக்காவுக்கு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

20.06.1994

✱ யுத்த நிறுத்தத்தைக் கண்காணிக்க ஐ.நா.சபையின் அமைதிப் படை ஒன்று இலங்கையில் நிலைகொள்ளவிருப்பதாக அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ.யின் அறிக்கை தெரிவிப்பு.

✱ ஆறு சிரேஷ்ட அமைச்சர்களுக்கு எதிராக தனித்தனியாக நம்பிக்கையில்லாப் -பிரேரணைகளை ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பதாக நாடாளுமன்றத்தில் கொண்டுவருவதற்கு எதிர்க்கட்சிகள் தீவிரமாக முயற்சித்து வருவதாகத் தெரிவிப்பு.

21.06.1994

✱ அமைச்சர்ப் பதவியிலிருந்து ஜனாதிபதியால் கடந்தவாரம் பதவி நீக்கம் செய்யப்பட்ட அலிக் அலுவிகார நேற்று மீண்டும் பொது நிர்வாக அமைச்சராக பதவி ஏற்றுக்கொண்டதாகத் தெரிவிப்பு.

✱ ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலை வடபகுதியில் நடத்துவதற்கு சாத்தியம் உண்டா என்பது குறித்து தேர்தல் ஆணையாளர் யாழ்.அரச அதிபரிடம் ஆலோசனை நடத்தியதாகத் தெரிவிப்பு.

22.06.1994

✱ இனப்பிரச்சினைக்கு இராணுவ ரீதியிலான தீர்வு அல்லாது அரசியல் தீர்வே உகந்தது. விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவும் நான் தயாராகவுள்ளேன் என ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க தெரிவிப்பு.

✱ சுதந்திரக் கட்சியில் இருந்து பிரிந்து ஐ.தே.கட்சியில் இணைந்து அமைச்சராகவுள்ள அனுரா பண்டாரநாயக்க மீண்டும் சுதந்திரக் கட்சியில் இணைவதற்காக முயற்சி செய்வதாக பத்திரிகைகள் தெரிவிப்பு.

23.06.1994

✱ நாடாளுமன்றத்தை உடனடியாகக் கலைத்து திடீர்பொதுத் தேர்தலை நடத்த ஐ.தே.கட்சி முடிவு செய்திருப்பதாகத் தெரிவிப்பு.

✱ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வடக்கு, கிழக்குப் பகுதிகளை விட்டுவிட்டு எஞ்சிய பகுதிகளில் பொதுத் தேர்தலை அரசு நடத்தி முடிக்க முடியும் என சட்டத்துறை வட்டாரங்கள் தெரிவிப்பு.

24.06.1994

✱ சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 6 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அக் கட்சியில் இருந்து விலகி ஐ.தே.கட்சியில் இணைந்து கொண்டுள்ளதாகத் தெரிவிப்பு.

✱ நாடாளுமன்றம் கலைக்கப்பட்டவுடன் அமைக்கப்படவுள்ள காபந்து அமைச்சரவையின் பிரதமராக காமினி திஸநாயக்க நியமிக்கப்படவுள்ளதாகத் தெரிவிப்பு.

25.06.1994

✱ இலங்கையின் பத்தாவது நாடாளுமன்றத்தைத் தெரிவு செய்வதற்கான பொதுத் தேர்தல் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 16ஆம் திகதி நடைபெறுமென அரசு அறிவிப்பு.

✱ கொழும்பு இராணுவத் தலைமையகத்தை வெடிகுண்டு வைத்துத் தகர்க்கும் நோக்கத்தில் கொண்டு செல்லப்பட்டதாகக் கூறப்படும் 300 கிலோ எடையான குண்டு ஒன்றை படையினர் கைப்பற்றியுள்ளதாகத் தெரிவிப்பு.

26.06.1994

✱ கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தில் உப சபாநாயகராக இருந்த காமினி பொன்சேகாவை பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் சேர்ப்பதற்கான முயற்சி இடம்பெறுவதாகத் தெரிவிப்பு.

✱ நாட்டின் நிலைமையை கவனமாக ஆராய்ந்த பின்னரே நாடாளுமன்றத்தைக் கலைத்துபொதுத் தேர்தலை நடத்தத் தாம் தீர்மானித்ததாக ஜனாதிபதி விஜேதுங்க தெரிவிப்பு.

27.06.1994

✱ விடுதலைப்புலிகள் இயக்கம் தனது ஆதரவு வேட்பாளர்களை தேர்த லில் நிறுத்தினால் வடக்கின் சகல பகுதிகளிலும் வாக்களிப்பு நிலையங்களை அமைக்க ஏற்பாடு செய்யப்படுமென ஜனாதிபதி விஜேதுங்க தெரிவிப்பு.

✱ எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வெற்றியீட்டிய உடன் சந்திரிகா பிரதமராக நியமிக்கப்படுவார் என சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் அறிவிப்பு.

28.06.1994

✱ நாடாளுமன்றத் தேர்தல் வரை நாட்டை நிர்வகிக்க இருக்கும் காபந்து அரசாங்கத்தில் 80பேர் அமைச்சர்களாக நியமிக்கப்படவிருக்கும் செயற்பாட்டு எதிரணியினர் கடும் எதிர்ப்பு தெரிவித்திருப்பதாக அறிவிப்பு.

✱ விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த 20 கரும்புலிகள் கொழும்பு நகருக்குள் ஊடுருவியுள்ளதாக கொழும்பு குற்றத்தடுப்புப் பணியகத்தின் அதிகாரிகள் தெரிவிப்பு.

29.06.1994

✱ நாடாளுமன்றத் தேர்தலை முன்கூட்டியே நடத்துவதென்ற ஜனாதிபதி விஜேதுங்கவின் முடிவு தற்கொலைக்கு ஒப்பானது என அமைச்சர் காமினி திஸாநாயக்க தெரிவிப்பு.

✱ ஜனாதிபதி விஜேதுங்க முக்கிய அரசியல் முடிவுகளை எடுத்தபோது தம்மைக் கலந்தாலோசிக்கவில்லை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குற்றச்சாட்டு.

30.06.1994

✱ இலங்கையின் பாதுகாப்பு நிலைவரம் குறித்து அறிந்து கொள்ளும் நோக்குடன் அமெரிக்க உயர்மட்ட இராணுவ அதிகாரிகள் குழு ஒன்று இலங்கை வந்துள்ளதாகத் தெரிவிப்பு.

✱ கொழும்பில் உள்ள விமானப்படை தலைமையகத்தை குண்டு வைத்துத் தகர்ப்பதற்கு விடுதலைப்புலிகள் திட்டமிட்டிருந்தது தெரியவந்துள்ளதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவிப்பு.

# சாதனை நோக்கிய நீச்சல் பயணம்

மன்னார்,ஒக்.5

காலி எல்பிட்டி பகுதியைச் சேர்ந்த சமன் (வயது-34) என்பவர் கின்னஸ் சாதனை படைக்கும் முகமாக கொழும்பு கோல்பேஸ் கடலில் இருந்து நாட்டின் பல பாகங்களுக்கும் நீந்திச் செல்லும் நோக்கில் கடல் மார்க்கமாக தனது நீச்சலை ஆரம்பித்துள்ளார்.

கடந்த மாதம் கொழும்பு கடற்கரையில் தனது பயணத்தை ஆரம்பித்து இவர் அம்பாந்தோட்டை, திருகோணமலை, யாழ்ப்பாணம், பூநகரி ஆகிய இடங்களுக்குச் சென்று அங்கிருந்து கடல் வழியாக கடந்த வியாழக்கிழமை மாலை 4 மணியளவில் மன்னார் பிரதான பாலத்தை வந்தடைந்தார்.

இவரை மாவட்ட அரச அதிபர் ஏ. நிக்கெலாஸ்பிள்ளை, மன்னார் பிரதேச செயலாளர் திருமதி ஸ்ரான்ஸி டிமெல் ஆகியோர் மாலை அணிவித்து வரவேற்றனர். நூற்றுக் கணக்கான மக்கள் மன்னார் பிரதான பாலப் பகுதியை சூழ்ந்து கொண்டனர். பின் இவர் சிலாபத்துறை கடல் வழியாக கற்பிட்டி, புத்தளம், நீர்கொழும்பு சென்று கொழும்பை சென்றடைவர் என தெரிவிக்கப்படுகின்றது.

மன்னாரில் இவரை வரவேற்பதற்காக மன்னார் மாவட்ட தேசிய சேவைகள் மன்றத்தின் இளைஞர் என்.எம். முனவ்வர் மற்றும் மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத் தலைவர் எப். எஸ். பாரிஸ் ஆகியோர் ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தனர். (சி)

# வலி. வடக்கில் கண்ணிகள் அகற்றப்பட்ட சான்றிழுக்காகக் காத்திருக்கிறது ராணுவம்

சுன்னாகம்,ஒக்.5

வலி.வடக்கு பிரதேசத்தில் கண்ணிவெடி அகற்றப்பட்டமைக்கான சான்றிதழை கண்ணிவெடி அகற்றும் நிறுவனங்களிடமிருந்து விரைவில் பெற்றுத்தருமாறு யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துரு சிங்க யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமாரிடம் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக அரச அதிபர் தெரிவிக்கையில்:

''கண்ணிவெடி அகற்றும் நிறுவனங்கள் அந்தப் பிரதேசங்களில் கண்ணிவெடிகளை அகற்றுவதில் முழுமூச்சாக செயற்படுகின்றன. இருந்தபோதும் அவர்களுக்கு சில இடர்பாடுகள் இருக்கின்றன. அவர்கள் விரைவாக கண்ணிவெடி அகற்றப்பட்டமைக்கான சான்றிதழ்களைத் தந்த உடன் இராணுவத் தளபதிக்கு அதனைக் கையளிக்க முடியும்'' - என்றார்.

வடமராட்சி கிழக்கின் ஏனைய பகுதிகளிலும் கண்ணிவெடி அகற்றும் செயற்பாடு இடம்பெற்று வருகின்றன எனவும் அவர் தெரிவித்தார். அத்துடன் ''சோரன்பற்று பாலத்தை திருத்தி அமைக்க வேண்டிய தேவை உள்ளது.

உடனடியாக நிதி ஒதுக்கி பால வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அங்குள்ள மக்களுக்கான குடிதண்ணீர் வசதிகளை மேம்படுத்த 2.5 கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின்கீழ் வடக்கின் துரித மீட்சித் திட்டத்தில் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அத்துடன் குடியமர்ந்த மக்களுக்கான தொழில்சார் உபகரணங்களும் வழங்கப்பட்டு வருகின்றன'' - என்றார். (உ-15)

# சமுர்த்தி அபிவிருத்தி மன்ற பரிசில் வழங்கல் நிகழ்வு

வடமராட்சி,ஒக்.5

சர்வதேச சிறுவர் முதியோர் தின விழாவும் சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றின் பரிசில் வழங்கும் நிகழ்வும் பருத்தித்துறை சிவன்கோயில் பர்வத வர்த்தனி கலா மண்டபத்தில் இன்று 5ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்குப் பருத்தித்துறை பிரதேச செயலாளர் இ.வரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். சமூக செயற்பாட்டு மைய இணைப்பாளர் ந.சுகிர்தராஜ், டனிஸ் அகதிகள் பேரவையின் யாழ்ப்பாண அலுவலக தலைமை அதிகாரி செல்வி பபிலோ புளோறங், தியாகி அறக்கொடை நிறுவன உப தலைவர் வி.சுந்தரமூர்த்தி ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

முதியோர்கள் கௌரவிப்பு, சிறுவர் முதியோர் தினத்தை ஒட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில் வழங்கல், சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றின் பரிசில் வழங்கல் என்பனவும் இடம்பெறும். (உ-236)

# ஏன் எமக்கு மட்டும் இந்நிலைமை...?

வலிகாமம் மேற்கு எனும் புனித பூமியாம் எமது பல்லசுட்டி எனும் கிராமம். எமது கிராமத்திலே சுமார் 160 குடும்பங்கள் வரை வாழ்ந்துவருகின்றனர் .ஏன் எமக்கு மட்டும் இந்நிலைமை,இந்நிலைமை மாறவேண்டும் . எமது கிராமத்தை சில அரச உத்தியோகத்தர்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். எமது கிராமத்திலே சில அவசர திருத்த வேலைகள் உள்ளன. ஆகவே எமது தேவைகளை நிவர்த்தி செய்து தருவார்கள் என்ற மன நம்பிக்கையுடன் இதனைச் சுட்டிக் காட்டுகிறேன்.




முதலாவதாக எமது கிராமத்திலே இதுவரை காலமும் சுமார் 100 வருடங்களுக்கு மேலாக குடிப்பதற்கு நல்லநீர் இல்லாமல் ஒரு கிலோமீற்றர் தூரம் சென்று நீரை எடுத்து பருகிவருகிறோம்.

இரண்டாவதாக எமது வீதிகள் அனைத்தும் பல வருடங்களாக திருத்தப்படாத வீதிகளாக குட்டையும் சொறியும் கிடங்கும் முடங்குமாக மழை காலமென்றால் ஒரு முழத் திற்கு மேலாக வெள்ளம் தேங்கி நிற்கும். அரச உத்தியோகத்தர்கள் சிலவேளைகளில் எமது கிராமத்திற்கு வரும்போது தாம் வரும் வாகனத்தை எங்கேயாவது ஓர் இடத்தில் நிறுத்திவிட்டுத்தான் வருவார்கள். காவல் துறையினர் ஏதாவது பிரச்சினை என்று வரும்வேளையில் ஒருவர் மோட்டார் சைக்கிளில் செல்வார், மற்றவர் இறங்கி நடப்பார். இப்படியான வீதிதான் எமது கிராமத்தின் வீதிகள்.

மூன்றாவதாக எமது கிராமத்திலே மின்சாரம் அரைகுறையாகக் கிடைத்துள்ளது. அப்படியிருக்கும் வேளையிலே ஒருசிலர் 10,000 பணம் செலுத்தி மின்சாரத்தைப் பெற்று வருகின்றனர். பணம் இல்லாதோர் மின்சாரம் இன்றிப் படிப்பதற்கு மாணவர்கள் பெரும் சிரமப்படுகின்றனர்.

அடுத்ததாக எமது கிராமத்தில் வீடுகள் சரிவரத் திருத்தப்படாத நிலையில் அரையும் குறையுமாகக் காணப்படுகின்றன. எத்தனையோ குடும்பங்கள் ஓலை வீட்டில் வசித்து வருகின்றார்கள். மழை காலமென்றால் அவ்வீடுகள் ஊறி சிதம்பிவிடும். மாலையில் உறங்குவதென்றால் அயல் வீட்டில் உறங்குவார்கள்.

எமது கிராமத்தில் சுமார் 20 குடும்பங்கள் வரை நில வசதி இல்லாமல் ஒரு வீட்டில் இரண்டு குடும்பமும் மூன்று குடும்பமுமாக வாழ்கின்றார்கள். ஆகவே, எமது கிராமத்தில் சுமார் 2ஏக்கர் காணி அயல் கிராமவாசிகளின் பெயரில் உள்ளன. நாம் போய் விலை கேட்டால் அதை விற்கமாட்டோம் எனக் கூறுகிறார்கள். எமது கருத்துக்களை அரச உத்தியோகத்தர்கள் கவனத்தில் எடுத்து எமது கிராமத்தைப் பார்வைசெய்து எமது மக்களின் மனங்களில் கண்ணீர் இல்லாமல் ஆனந்தம் பொங்கச்செய்ய வேண்டும். தண்ணீர் வேண்டும்.

எமது கிராமத்து மக்கள் சார்பாக
சனசமூக நிலையத்தினர்.

# 11,788 ஹெக்ரேயரில் காலபோக நெற் செய்கை; யாழ். மாவட்டத்தில் 22,000 பயனாளிகள் ஈடுபடுவர்

## கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் தகவல்

யாழ்ப்பாணம்,ஒக்.5

யாழ்.மாவட்டத்தில் இம்முறை 11 ஆயிரத்து 788 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்காக 22 ஆயிரம் பயனாளிகளுக்கு மானிய அடிப்படையில் உரம் வழங்குவதற்குத் திட்டமிட்டுள்ளோம் என யாழ். மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் எம். பற்றிக்டிறஞ்சன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக உதவி ஆணையாளர் உதயனுக்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

காலபோக நெற்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு மானிய அடிப்படையில் உரம் வழங்குவதற்கான அனுமதி யாழ். மாவட்டத்திலுள்ள கமநல சேவைகள் நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலையங்களுக்கான உர விநியோகமானது, கோண்டாவிலில் அண்மையில் திறந்து வைக்கபட்டுள்ள இலங்கை உரக் கம்பனியின் பிரதேச களஞ்சியத்திலிருந்து தற்போது வழங்கப்பட்டு வருகிறது.

நெற்செய்கைக்குத் தேவையான உர வகைகளான யூரியா 2 ஆயிரத்து 652 மெற்றிக் தொன்னும், ரி.எஸ்.பி 736 மெற்றிக் தொன்னும், எம்.ஓ.பி 736 மெற்றிக் தொன்னும் இம்முறை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்.

மானிய அடிப்படையில் 50 கிலோ கிராம் நிறையுடைய உரம் 350 ரூபாவுக்கு விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள கமநல சேவை நிலையங்கள் ரீதியாகக் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலப்பரப்புகளின் விவரம் வருமாறு:

சாவகச்சேரி நிலையப் பகுதியில் 2 ஆயிரத்து 405 ஹெக்ரேயரிலும், கைதடியில் ஆயிரத்து 681 ஹெக்ரேயரிலும், நல்லூரில் 330 ஹெக்ரேயரிலும், வேலணையில் 629 ஹெக்ரேயரிலும், புங்குடுதீவில் 888 ஹெக்ரேயரிலும், தொல்புரத்தில் ஆயிரத்து 355 ஹெக்ரேயரிலும் இம்முறை காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படலாம் என எதிர்பார்க்கபடுகிறது.

அதேபோல கீரிமலையில் 325 ஹெக்ரேயரிலும், உடுவிலில் 244 ஹெக்ரேயரிலும், புத்தூரில் 458 ஹெக்ரேயரிலும், உரும்பிராயில் 474 ஹெக்ரேயரிலும், புலோலியில் 216 ஹெக்ரேயரிலும், அம்பனில் 671 ஹெக்ரேயரிலும், காரைநகரில் 474 ஹெக்ரேயரிலும், சண்டிலிப்பாயில் ஆயிரத்து 37 ஹெக்ரேயரிலும், கரவெட்டியில் ஆயிரத்து 400 ஹெக்ரேயரிலும், இவ்வாறு நெற்செய்கை மேற்கொள்ளப்படலாம் என உத்தேசிக்கப்பட்டுள்ளது- என்றார். (த-14)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,ஒக்.5

புத்தூர் யா/புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா அதிபர் கு.ரவிச்சந்திரன் தலைமையில் நாளை புதன்கிழமை பி.ப 2மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

இந்த விழாவிற்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறைத் தலைவர் பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக யாழ். மாநகர சபை உறுப்பினர் அ.பரஞ்சோதி கலந்து சிறப்பிப்பார். (த-ற)

# மதிய உணவு தயாரிக்கப் பாத்திரங்கள் வடமராட்சி கிழக்குப் பாடசாலைகளுக்கு

## சபா.ரவீந்திரன் அறக்கட்டளை வழங்கியது

வடமராட்சி,ஒக்.5

வடமராட்சி கிழக்கில் பாடசாலை மாணவர்களுக்கான மதிய உணவைத் தயாரிப்பதற்கு வேண்டிய தேவையான பாத்திரங்களை பருத்தித்துறை தும்பளை சபா ரவீந்திரன் அறக்கட்டளை நிதியம் வழங்கியது.

இதற்கென சபா.ரவீந்திரன் அறக்கட்டளை நிதியம் 60 ஆயிரம் ரூபா நிதியை வடமராட்சிக் கல்வி வலயப் பணிப்பாளர் வ.செல்வராசாவிடம் கையளித்தது.

வடமராட்சி கிழக்கில் மீள்குடியமர்ந்துள்ள மாணவர்கள் கல்வி கற்றும் உடுத்துறை மகா வித்தியாலயம், மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை, ஆழியவளை சி.சி.தமிழ்க் கலவன் பாடசாலை, தாளையடி றோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலை, செம்பியன்பற்று றோ.க. தமிழ்க் கலவன் பாடசாலை, செம்பியன்பற்று அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியவற்றுக்குத் தேவையான கிடாரங்கள், அகப்பைகள் மற்றும் உபகரணங்கள் உடனடியாகக் கொள்வனவு செய்யப்பட்டு அந்தந்தப் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டதாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற " பராமரிப்புச் சட்டம்" என்னும் சட்ட நூல் வெளியீட்டு நிகழ்வில் இந்த உதவிக்கான கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

"வடமராட்சி கிழக்கில் மீள் குடியேறியுள்ள ஏதிலிகளான மாணவர்கள் தமது கல்வியைத் தொடர்வதற்கு போதிய வசதிகள், வளங்கள் இன்றி துன்பப்படுகிறார்கள். அவர்களுக்குக் கல்வித் திணைக்களம் உதவ அதிக காலம் பிடிக்கும். ஆதலால் அந்த மாணவர்களுக்குச் சில உடனடி உதவிகளை வழங்க சபா.ரவீந்திரன் அறக்கட்டளை நிதியம் முன்வரவேண்டும்"- என்று நிதியத்தின் ஆளுநர் சபைத் தலைவர் சட்டத்தரணி சபா. ரவீந்திரனிடம் வேண்டுகோள் ஒன்றை அந் நிகழ்வில் கலந்து கொண்டு பேசிய வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார் விடுத்திருந்தார்.

இம்மாணவர்களுக்கு மதிய உணவை வழங்குவதற்குத் தேவையான அரிசி, பருப்பு போன்றவற்றை உலக உணவு நிறுவனம் வழங்க முன் வந்தவேளை சமையல் பாத்திரங்கள் இன்மையால் திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டிருந்தது. அறக்கட்டளை நிதியம் உதவியினால் அந்த நெருக்கடி நிலை ஓரளவு தீர்க்கப்பட்டுள்ளது.

" மாணவர்களுக்குத் தற்போது மதிய உணவு வழங்கப்பட்டு வருகிறது. இது எமக்கு மிகுந்த ஆறுதலைத் தருகிறது. இப்பேருதவியைப் புரிந்த சபா .ரவீந்திரன் அறக்கட்டளை நிதியத்தின் ஆளுநர் சபைக்கு திணைக்களத்தின் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்."- என வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர்வ.செல்வராசா கூறினார். (உ-236)



வலிகாமம் மேற்குப் பிரதேச சபையின் உள்ளூராட்சி வார நிகழ்வின் போது வலிகாமம் மேற்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கமும் வட்டுக்கோட்டை குடும்ப முன்பள்ளி கலைவிழாவும் கண்காட்சியும் இடம்பெற்றது. இதில் பிதம விருந்தினராகக் கலந்து கொண்ட வலிகாமம் கல்வி வலய ஆரம்பப் பிரிவு கல்வி அபிவிருத்தி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.குகனேசன் கண்காட்சியைத் திறந்து வைப்பதையும், கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்ட விசேட கல்வி அலகு உதவிக் கல்விப் பணிப்பாளர் நி.முருகானந்தன் மற்றும் முன்பள்ளி ஆசிரியை அருகில் நிற்பதைப் படத்தில் காணலாம். (த-28)

# திருவடி நிலைக் கடற்கரையில் வெளிச்சவீடு அமைக்கத் திட்டம்

மூளாய்,ஒக்.5

சுழிபுரம், திருவடி நிலைக் கடற்கரையில் வெளிச்சவீடு ஒன்று அமைக்கப்படவுள்ளது. இக்கடற்பரப்பில் கடற்றொழிலில் ஈடுபடும் தொழிலாளர்களின் நலன்கருதியே இந்த வெளிச்ச வீடு அமைக்கப்படவிருக்கின்றது.

இதற்காக 'கமநெகும' திட்டத்தின் கீழ் சுமார் இரண்டரை லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. உத்தேச வெளிச்ச வீட்டில் முந்நூறு வாற்ஸ் அளவிலான சமிக்ஞை மின் விளக்கு பொருத்தப்படவுள்ளது.

இச் செயற்திட்டம் அப்பகுதி கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களின் கோரிக்கைக்கு இணங்கவே மேற்கொள்ளப்படவுள்ளது. (ஜ-99)

# அனுமதியின்றி கல் ஏற்றிச் செல்லும் வாகனங்கள் மீது நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.5

யாழ்.குடாநாட்டில் அனுமதிப்பத்திரம் இன்றிக் கற்களை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் மீது பொலிஸாரின் கவனம் இப்போது திரும்பியுள்ளது.

அவ்வாறு கற்களை ஏற்றிச் செல்லும் வாகனங்களை வீதியில் வைத்து இடைமறிக்கும் பொலிஸார், வாகன சாரதிகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குடாநாட்டில் தற்போது கற்களை அகழ்வது, அவற்றை வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்வது ஆகிய செயற்பாடுகளுக்குப் பிரதேச செயலகம் ஊடாகச் சுற்றுச் சூழல் அதிகார சபையிடம் அனுமதி பெறப்பட வேண்டும். இந்த நடைமுறை கடுமையாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

எனினும் சில இடங்களில் சட்ட விரோத கல் அகழ்வு, விற்பனை என்பன இடம்பெற்று வருகின்றன. இது தொடர்பாக பொலிஸாருக்கும் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இதனையடுத்து இந்த நடவடிக்கைக்கு எதிராகப் பொலிஸார் சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்த நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன் றத்தில் நிறுத்தப்படுவதாகப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.(த-26)

# மல்லாகம் ம.வி.நூற்றாண்டு மலர் ஆளுநர் வெளியிட்டு வைத்தார்

வலி.வடக்கு,ஒக்.5

மல்லாகம் மகா வித்தியாலய 150 ஆவது ஆண்டு நிறைவு நாள் நிகழ்வு வித்தியாலய மைதானத்தில் அதிபர் மா.நாகேந்திரசீலன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வின் இரண்டாம் நாள் அமர்வுகளில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி கலந்து கொண்டதுடன் வித்தியாலயத்தின் 150 ஆவது ஆண்டு நிறைவு மலரையும் வெளியிட்டு வைத்தார்.

வித்தியாலயத்தின் ஓய்வு பெற்ற ஆசிரியையும் வலி. வடக்குப் பிரதேச சபையின் முன்னாள் தலைவருமான திருமதி பாலாம்பிகை ஸ்ரீ பாஸ்கரன் ஆளுநரிடமிருந்து முதல் பிரதியை பெற்றார்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார், தெல்லிப்பழை கல்விக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ். கைலாசநாதன் உட்பட மற்றும் பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர். (உ-86)




# சேதமடைந்த கட்டடங்களைப் புனரமைக்க பனை அபிவிருத்திச் சபை நடவடிக்கை

கொழும்புத்துறை,ஒக்.5

பனை அபிவிருத்திச்சபையின் சேதமடைந்த கட்டடங்கள் புனரமைப்புச் செய்யவும் மற்றும் புதிய கட்டடங்களை அமைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சபையின் யாழ்.தலைமைக் காரியாலய சுற்றுலாவிடுதி, மலசலகூடம் என்பன தற்போது புனரமைக்கப்படுகின்றன். அத்துடன் புளியங்குளத்தில் உள்ள மாதிரிப் பண்ணையைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கிளிநொச்சியில் போரால் சேதமடைந்த பிராந்திய அலுவலகக் கட்டடப் புனரமைப்பும் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-135)

# மீள்குடியேறியோருக்கு சுயதொழில் உதவிப் பொருள்கள் வழங்கல்

வலி.வடக்கு,ஒக்.5

மனிதநேய அமைப்புகளின் கூட்டமைப்பினால் வன்னியில் இருந்து உடுவில் பிரதேச செயலர் பிரிவில் மீள்குடியேறிய 30 குடும்பங்களுக்குச் சுயதொழில் முயற்சிக்கான உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இன்று பிற்பகல் 3 மணிக்கு உடுவில் பிரதேச செயலாளர் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

உடுவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் உதவிப் பிரதேச செயலாளர் திருமதி உதயகுமார் யசோதரா தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கலந்துகொள்ளவுள்ளார்.

வன்னியில் இருந்து வந்து உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் மீளக்குடியேறியுள்ள இக்குடும்பங்களுக்கு பல்வேறு தொழில் முயற்சிக்குமான பொருள்கள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (201-86)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,ஒக்-5

ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய பரிசளிப்பு விழா பாடசாலை அதிபர் அ.அருணந்திசிவம் தலைமையில் இன்று செவ்வாய்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலைக் கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவிற்கு பிரதம விருந்தினராக பாரம்பரிய மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். கல்வி வலய ஆரம்பக்கல்விப் பணிப்பாளர் பூ.குகநாதன், வலி. கிழக்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் த.கவீந்திரதாஸ் ஆகியோர் கலந்து சிறப்பிப்பார். (த-ற)

## கிரனேட் மீட்பு

யாழ்ப்பாணம்,ஒக்.5

வெடிக்காத நிலையிலிருந்த கிரனேட் ஒன்று கடந்த புதன்கிழமை சாவகச்சேரிப் பகுதியில் மீட்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி, கனகம்புளியடியிலுள்ள தனியார் காணியில் வெடிக்காத நிலையிலிருந்த கிரனேட் ஒன்று அப்பகுதி மக்களால் அடையாளம் காணப்பட்டது. சாவகச்சேரிப் பொலிஸாரிடம் இது குறித்து முறையிடப்பட்டது.

உடனே சாவகச்சேரிப் பொலிஸார் அதைமீட்டு யாழ்.பொலிஸ் தலைமையகத்தினூடாக இராணுவத்திடம் ஒப்படைத்துள்ளனர். (உ-16)

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேஷம்:**
சகோதர வகையில் நன்மை உண்டு. அரச அதிகாரிகளின் உதவியால் சில காரியங்களை முடிப்பீர்கள். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சி காணப்படும். வியாபாரத்தில் வேலையாள்களின் ஆதரவு கிட்டும். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். மனநிறைவு கிட்டும் நாள்.



**இடபம்:**
சவால்களில் வெற்றி பெறுவீர்கள். உடன்பிறந்தவர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். அரசால் அனுகூலம் உண்டு. புதியவர்கள் அறிமுகமாவார்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங் களைத் தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் சில நுணுக் கங்களை கற்றுக் கொள்வீர்கள். தைரியம் கூடும் நாள்.



**மிதுனம்:**
சோர்வு நீங்கி துடிப்புடன் செயற்படத் தொடங்குவீர்கள். பிள்ளைகளால் புகழ், கௌரவம் உயரும். சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். வியாபாரத்தில் வேலையாள்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். சாதிக்கும் நாள்.



**கடகம்:**
மதியம் ஒருமணி வரை ராசிக்குள் சந்திரன் தொடர்வதால் சிலர் உங்களை தாழ்த்திப் பேசினாலும் கலங்காதீர்கள். சொந்த - பந்தங்களால் அன்புத் தொல்லைகள் உண்டு. வாகனத்தில் அதிக வேகம் வேண்டாம். வியாபாரத்தில் ஒரளவு லாபம் வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களை உதாசீனப்படுத்த வேண்டாம்.



**சிம்மம்:**
கணவன் - மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. வெளிவட்டாரத்தில் யாரையும் விமர்சித்து பேச வேண்டாம். அரச காரியங்கள் இழுபறியாகும். வியாபாரம் சுமாராக இருக்கும். உத்தியோகத்தில் பொறுப்பு அதிகரிக்கும். பிற்பகல் ஒரு மணி முதல் ராசிக்குள் சந்திரன் செல்வதால் எதிலும் கவனம் தேவைப்படும் நாள்.



**கன்னி:**
பழைய நல்ல சம்பவங்களை நினைவுகூர்ந்து மகிழ்வீர்கள். பெற்றோர் ஒத்து ழைப்பார்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். வியாபாரத்தை விரிவுப்படுத்துவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் திறமையைக் கண்டு மேலதிகாரி வியப்படைவர்.



**துலாம்:**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உறவினர்கள், நண்பர்களுடன் மனம் விட்டு பேசுவீர்கள். பழைய கடனை நீக்குவீர்கள். வியாபாரத்தில் புது சலுகைகளை அறிவிப்பீர்கள். உத்தியோகத்தில் தலைமையின் ஆதரவு கிடைக்கும். நினைத்ததை முடிக்கும் நாள்.



**விருச்சிகம்:**
உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். சொந்த - பந்தங்கள் வீடு தேடி வருவார்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மகிழ்ச்சி தங்கும் நாள்.



**தனுசு:**
பிற்பகல் ஒரு மணி வரை சந்திராஷ்டமம் தொடர்வதால் திட்டமிடாத செலவுகளும், பயணங்களும் குறுக்கிட்டாலும் சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். பிள்ளைகளிடம் கோபத்தை காட்ட வேண்டாம். சொத்து விடயத்தில் அவசர முடிவுகள் வேண்டாம். வியாபாரத்தில் லாபம் மந்தமாக இருக்கும். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. மாலையில் மகிழ்ச்சி தொடங்கும் நாள்.



**மகரம்:**
குடும்பத்தில் ஆரோக்கியமான விவாதங்கள் வந்துப் போகும். வெளிவட்டாரத்தில் மதிப்புக்கூடும். மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு. வியாபாரத்தில் லாபம் வரும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஒத்துழைப்பார். நண்பகல் ஒருமணி முதல் சந்திராஷ்டமம் தொடங்குவதால் எச்சரிக்கை தேவைப்படும் நாள்.



**கும்பம்:**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். பிள்ளைகளின் பாசம் அதிகரிக்கும். வழக்கு சாதகமாக திரும்பும். உறவினர்கள் மதிப்பார்கள். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். அமோகமான நாள்.



**மீனம்:**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். உங்களைச் சுற்றியிருப்பவர்களில் நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள். கடன் பிரச்சினைகள் தீரும். வியாபாரத்தில் நெளிவு, சுளிவுகளைக் கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் எதிர்ப்புகள் அடங்கும். நினைத்தது நிறைவேறும் நாள்.

# யாழ். பாடசாலைகளின் புலமைப் பரிசில் முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.5

2010ஆம் ஆண்டு, தரம் 5 புலமைப்பரிசில் பெறு பேறுகள் அண்மையில் வெளிவந்துள்ளன. எனவே சித்தியடைந்த மாணவர்களின் விவரங்களை உதயன் தொடர்ச்சியாக வெளியிடவுள்ளது. ஒரு தொகுதி மாண வர் விவரம் வருமாறு:

**வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம்**

கனகலிங்கம் சயிதா -174, தர்மசீலன் திலக்சனா-168, லெஸ்வித்துரை கெபின் -163, ஸ்ரீஸ்கந்தராசா நிலானி- 161, தேவராசா சங்கரன்-161, கண்ணன் திசாளினி-161, சிவமூர்த்தி விதுர்சனா -156, சந்திர குமார் மிதுன்-148, விஜயநாதன் ஜெனார்த்தன் -147, மகேந்திரம் சுகந்தன் -147, சந்திரதாசன் ஹரிகரன் -146, சுரேஸ் லக்சா-144, சுதர்சன் சுதனிகா-144, குலசிங்கம் மதீபன்-143.

**வல்வை சிவகுரு வித்தியாலயம்**

சிவசுப்பிரமணியம் ரமணன் -160.

**புற்றளை மகா வித்தியாலயம்**

பா.நவநீதன்- 169, ஜெ.விபுலன்- 164, ந.இராக வன்- 163, செ.வேணுஜன்-163, கு.திவ்யா- 157, ம.மதன்-156, மா.சாருஜா- 154, பூ.கீதாஞ்சலி- 150, பா. ஜதுகிரி-145, ஞா.கௌசிகா-142.

**துன்னாலை மேற்கு மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை**

கு.மாலன்பன்-171, சி.சிவந்தினி-161, வி.கம்சிகா -155, த.கவிதன்-154, மு.யாழினி-144.

(முடிவுகள் தொடர்ந்து வெளிவரும்).

(201)

# பொன்சேகாவுக்கு விதிக்கப்பட்ட தண்டனை மிகச் சரியானதே

## ஜாதிக ஹெல உறுமய தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.5

தேசிய ஜனநாயக கூட்டமைப்பின் தலைவரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான சரத்பொன் சேகாவுக்கு விதிக்கப்பட்ட தண்டனை மிகச் சரி யானதென ஜாதிக ஹெல உறுமய கட்சி தெரிவித் துள்ளது.

சரத் பொன்சேகா தேச விரோத சக்திகளின் கைப் பொம்மையாக மாறியுள்ளார் என்று அக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் நிசாந்த ஸ்ரீ வர்ணசிங்க தெரி வித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி. மற்றும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மக்கள் பிரிவு ஆகியன சரத் பொன்சேகாவின் இன்றைய நிலைமைக்குப் பொறுப்புச் சொல்ல வேண்டுமென்றும் அவர் கூறி யுள்ளார்.

இராணுவத் தளபதியாகக் கடமையாற்றிய காலத் திலேயே அவர் அரசுக்கு விரோதமான வகையில் செயற்பட்டுள்ளார் என என அவர் தெரிவித்துள் ளார்.

இராணுவ ஒழுக்கவிதிகளை மீறிய காரணத்துக்காக அவருக்குத் தண்டனை வழங்கப்படவேண்டும் என வும், இதில் எந்தவித தவறையும் தாம் காணவில்லை என வும் அவர் தெரிவித்துள்ளார்.

தண்டனை வழங்கப்படாவிட்டால், பாகிஸ்தான் பங் களாதேஷ் போன்ற நாடுகளில் நேர்ந்த கதி இலங்கைக் கும் நேரிடும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சரத் பொன்சேகாவிற்கு சலுகைகள் வழங்கினால் ஏனைய இராணுவச் சிப்பாய்கள் பிழையான முன்னு தாரணத்தைப் பின்பற்றக்கூடிய சாத்தியம் காணப்படு கிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பதவி வகித்த காலத்தில் சரத் பொன்சேகாவே பல இராணுவ அதிகாரிகளுக்கு இராணுவ நீதிமன்றின் மூலம் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் சுட் டிக்காட்டியுள்ளார். (சி)

# புதுக்குடியிருப்பு பகுதியில் மீள்குடியமர்வு நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஒக். 5

விசுவமடு கிழக்கு மற்றும் மேற்கு கிராம அலுவலர் பிரிவில் நேற்றுமுன்தினம் 282 குடும்பங்களைச் சேர்ந்த 674 அங்கத்த வர்கள் மீளக்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

விசுவமடு கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் 125 குடும் பங்களைச் சேர்ந்த 303 அங்கத்தவர்களும் விசுவமடு மேற்கு கிராம அலுவலர் பிரிவில் 157 குடும்பங்களைச் சேர்ந்த 371 அங்கத்தவர்களும் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட மாணிக்கபுரம், வள்ளுவர்புரம் ஆகிய பகுதிகளில் நாளை புதன்கிழமையும் நாளைமறுதினம் வியாழக்கிழமையும் மீள்குடியேற்றம் செய்யப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஏனைய பிரதேசங்களிலும் மீள்குடியமர்வு நடவடிக்கை அடுத்த வாரங் களில் இடம்பெறவுள்ளதாகவும் -

இதற்கான ஏற்பாடுகளை செயலக அதிகாரிகள் மேற் கொண்டு வருவதாகவும் - முல்லைத்தீவு அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்தார். (உ-14)

# இலங்கைக்கான பயணக்கட்டுப்பாட்டை தளர்த்தியது ஜேர்மன்

கொழும்பு, ஒக். 5

இலங்கைக்குப் பயணம் மேற்கொள்வது தொடர்பில் ஜேர்மன் அரசால் விதிக்கப் பட்டிருந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட் டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட் டன. அத்துடன் அமுலில் இருந்த சில கட் டுப்பாடுகளும் தளர்த்தப்பட்டுள்ளன என ஜேர்மனியத் தூதர் ஜேன்ஸ் புளொட்னர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும், தமது நாட்டுப் பயணி கள் வடக்கிற்கு விஜயம் செய்வது தொடர் பான கட்டுப்பாடு தொடர்ச்சியாக அமுலில் இருக்கும். எதிர்வரும் காலங்களில் இந்தப் பயணக் கட்டுப்பாடும் தளர்த்தப்படும் என் றும் அவர் தெரிவித்துள்ளார். (சி)

# வாயை மூடுங்கள்



வகுப்பாசிரியர் பாடம் நடத்திக்கொண்டிருந்தார். மேசையின் மீது மூன்று பொம்மைகள் இருந்தன. ஒன்று கண்ணையும் மற்றது வாயையும் இன்னொன்று காதையும் இருகைகளாலும் மூடிக் கொண்டு இருந்தன.

ஆசிரியர் மாணவர்களிடம் இவற்றுக்கு விளக்கம் கேட்டார். தீயவற்றைப் பார்க்காதே, பேசாதே, கேட்காதே என்று பதில் வந்தது. அதற்கு ஆசிரியர் கண்ணையும் காதையும் இரண்டு கைகளாலும் மூடுவது சரி வாயை ஏன் இரண்டு கைகளாலும் மூடவேண்டும் என்றார்.

இதற்கு மாணவர்கள் பதில் சொல்லவில்லை.

கண்களுக்கு பார்ப்பதும் காதுகளுக்குக் கேட்பதும் மட்டும்தான் வேலை. ஆனால் வாய் இரண்டு வேலைகளைச் செய்கிறது. பேசுவதற்கும் சாப்பிடுவதற்கும் என்றார்.

இன்னொரு கருத்தையும் சொல்கிறேன். பேசும்போதும் நாம் தவறு செய்கின்றோம். ஒன்று பேசவேண்டியதை பேசாமல் இருப்பது. இன்னொன்று பேசாமல் இருக்க வேண்டியதற்கு பேசுவது என்று ஆசிரியர் விளக்கினார். சும்மா இருக்க வேண்டிய நேரத்தில் பேசுவது தவறு. பேசவேண்டிய நேரத்தில் பேசாமல் இருப்பதும் தவறு என்றார் ஆசிரியர்.

கோ.சுவாமிநாதன்.

# யாமிருக்கப் பயமேன்

முற்காலத்தில் ஒரு நாள் முல்லா தன் மனைவியோடு கடல் பயணம் செய்தார். திடிரென கடல் கொந்தளிப்பு. ராட்சத அலைகள் எழும்பி எழும்பி ஆடின. கப்பலில் இருந்த எல்லோரும் இன்று மரணம்தான் என்ற முடிவுக்கு வந்தார்கள்.

எல்லோரும் இறைவா இறைவா என்று பயத்தில் அலறினார்கள். முல்லா மட்டும் வழக்கம் போல் மகிழ்ச்சியாக இருந்தார். அவரது மனைவிக்குக் குழப்பமாக இருந்தது. இந்த அலைகள் நம்மைக் கொன்று விடும் என்று பயப்படவில்லையா? என்று தயங்கியபடி கேட்டாள்.

அப்போது கோபமாக முல்லா இடுப்பில் இருந்த குறுவாளை எடுத்து மனைவியின் கழுத்தில் அழுத்தியபடி முறைத்தார்.

மனைவியோ மௌனமாக இருந்தாள். உடனே இந்தக் கத்தி உன்னைக் கொன்று விடும் என்று நீ பயப்பிடவில்லையா என்றார் முல்லா. கத்தி கொலை செய்யக் கூடியதுதான். ஆனால் அதைப் பிடித்திருக்கும் கை எனது கணவருடையது தானே. அதுதான் நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன் என்றாள் மனைவி.



அதே போலத்தான் அலைகள் நம்மைக் கொலை செய்யக் கூடியவை. ஆனால் அதை இயக்கும் இறைவன் கருணையுள்ளவர். அதனால்தான் நான் பயப்படாமல் மகிழ்ச்சியாக இருக்கிறேன் என்றார் முல்லா.

சுகி.சிவம்.

# உயிரி இரசாயனத்துறைக் கண்டுபிடிப்புகளின் ஊடாக உள்ளூர் வளங்களைக் கொண்டு அபிவிருத்தியை நிகழ்த்தலாம்

## பேராசிரியர் பொன்.நவரட்ணத்துடன் ஒரு நேர்காணல்

கணித - விஞ்ஞான ஆசிரியராகக் காலடி எடுத்துவைத்து யாழ்.பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானமாணி (B.Sc.) பட்டம், M.Sc., Ph.D (Bio- Chemistry) பட்டம் , பேராசிரியர் பதவி என்னும் நிலைக்கு உயர்ந்தவர் பண்டத்தரிப்பு - பிரான்பற்றைச் சேர்ந்த பேராசிரியர் பொன்னுச்சாமி நவரட்ணம்.

பேராசிரியிர் பொன்.நவரட்ணம் இலங்கையில் உயிரி - இரசாயனத்துறையில் முன்னோடி நிபுணர்களில் ஒருவர்.

யாழ். பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணியாற்றி விலகிய பின் இன்று பல மருத்துவத்துறை சார்ந்த ஆராய்ச்சிகளிலும், கண்டுபிடிப்புகளிலும் செயற்பட்டு வருபவர். யாழ். பல்கலைக் கழகம் இவரது திறமையைக் கண்டும் காணாமல் இருந்தபோதும் சர்வதேச ரீதியாகக் கவனிப்பையும் பட்டங்களையும் பெற்றவர்.

அவருடைய உயிரி - இரசாயனத்துறை சம்பந்தமாக எதிர்கால சந்ததியினரும் - இன்றைய சமுதாய மாணவர்களும் அறிய வேண்டிய பல விடயங்களை உதயன் வாசகர்களுக்கு விளக்குகிறார் பேராசிரியர் பொன். நவரட்ணம்.

விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள் - ஆராய்ச்சிகள் என்பன இடைவிட்டுச் செய்யப்படும் ஒரு நிகழ்வு அல்ல.

ஒரு முடிவினை வினைத்திறனுடன் அடையும்வரை அதற்குச் செயலுரு வடிவம் கொடுத்து செயற்படுத்தப்படும் தனித்துவமான ஒரு பொறிமுறையே உயிரி இரசாயனத்துறைத் தொழில்நுட்பம்.

கடந்த 30 ஆண்டு காலமாக போர் நடந்தபோதும் கடுமையான இடப்பெயர்வு மத்தியிலும் உயிரி இரசாயனத்துறை தொடர்பான இடையறாத ஆராய்ச்சிகள்- ஆய்வுகள் இடம்பெற்றன.

இவ்வாறான காலகட்டங்களில் தென்மராட்சி - அல்லாரையில் பனங்கள்ளில் இருந்து பியர் தயாரிப்பதிலும், கிளிநொச்சி கண்டாவளையில் பதனீரைப் போத்தலில் அடைப்பதிலும், யாழ்ப்பாணத்தில் திராட்சையில் இருந்து '' வைன்'' உற்பத்தி செய்வதிலும் வெற்றி கண்டு சமூகத்திற்கு வழங்கியுள்ளேன்.

இதன் உயிரோட்டமான செயற்பாடுகள் இன்றும் எம்மண்ணில் தொடர்ந்த வண்ணம் உள்ளன.

இக்கண்டுபிடிப்புக்களை மேற்கொண்டதற்காக ஸ்பெயின் நாட்டின் திரித்துவப் பல்கலைக்கழகத்தின் உயிரி இரசாயனத் துறை கண்டுபிடிப்பு - ஆராய்ச்சிக்காகப் பேராசிரியர் தரத்துக்கு உயர்த்தப்பட்டேன்.



யாழ்.குடாவில் அமிலேசு- நொதியத்தை ''இலைக்கன்'' எனும் கூட்டு அங்கி மூலம் பெறும் முறையைப் பெற்றுக்கொடுத்தேன்.

மேலும் மாப்பொருளை மோல்ரோசு வரை உடைக்கு இந்நொதியம் தானியங்களில் இருந்து மோல்ரோசுவை தந்து அதிலிருந்து குளுக்கோசு பெறவும் மதுவத் தாக்கத்தினால் 'வைன்','பியர்' தயாரிப்புக்கும் உதவியது.

இவ்வாறு பல்வேறு உயிரி இரசாயனவியல் ஆராய்ச்சிமூலம் வடபகுதியில் கடந்த காலங்களில் முன்னின்று செயலாற்றினேன்.

எனினும் துறைசார்ந்த நிபுணத்துவத் தேவை, இயந்திரங்கள், தொழில்நுட்பச் சாதனங்கள், தொழில்நுணுக்கச் சாதனங்களின் கிடைப்பனவு குறைவால் நீண்டு - நிலைத்த அபிவிருத்தியை உடன் பெற முடியவில்லை.

இன்று எமது இலங்கை மண்ணில் அமைதி திரும்பியுள்ளது. சகல துறைகளிலும் அபிவிருத்தி மோகம் முன்னிறுத்தப்படுகின்றது. மீண்டும் உயிரி இராசாயனத் துறை புத்துயிர்பெற வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளது.

இலங்கையின் - சிலாஸ் (Slaass) எனும் விஞ்ஞான முன்னேற்ற சங்கத்தின் சூழல் மாநாட்டில் யாழ். மண்ணில் கவனிப்பாரற்றுக் கிடக்கும் பனம் பழங்களில் உள்ள நுண்ணங்களின் நொதியச் செயற்பாட்டினால் தோன்றும் துர்நாற்றம் வளியையும், நொதிப்பு படி முறை செயற்பாட் டால் உருவாகும் பலவகை சேதன அமிலங்கள் மண்ணையும் மழை காலங் களில் நீருடன் கரைந்து நீர் நிலைகளையும் மாசடையச் செய்கின்றது எனச் சுட்டிக்காட்டப்பட்டது.

இதன்போது இந்த மாசடை தலை தடுக்க பழங்களில் உள்ள வெல்லத்தை நீர்க்கரைசலாகப் பிரிக்கும் முறையைக் கூறி - திண்மமீதியை உலரவைத்துத் தூளாக்கி வில்லைகளாகவோ, கூட்டு வில்லைகளாகவோ நோயாளிக்கு கொடுக்கும் போது அதிலுள்ள கரையும் நார்களினால் குருதியில் உள்ள கொழுப்பு (கொலஸ்திரோல்), வெல்லம் (Sugar) ஆகியன குறையும் என்று உயர் தொழில்நுட்ப முறையை விஞ்ஞான உலகிற்கு தொட்டுக்காட்டியதற்காக சிலாஸ் - தலைவர் கலாநிதி டபிள்யூ. எஸ். சுமதிபாலவின் 'தேசிய உயர் விருது' எனக்கு வழங்கப்பட்டது.

உண்மையில் யாழ். பல்கலைக்கழகத்தில் உயிரி இரசாயனத்துறைப் பேராசிரியர் க.பாலசுப்பிரமணியத்தின் முன்னெடுப்பான தன்மை யாழ். மருத்துவ பீடத்திலும் நடைபெறக் காரணமாக இருந்தது.

அன்றைய போர்க் காலங்களில் சீனி கிடைக்காத நிலையைப் போக்க ஆராய்ச்சிகள் தொடர்ந்தன. பனம் களியில் இருந்து வெல்லம் (சீனி)பெற நிர்ப்பந்திக்கப்பட்டோம்.

மில்க்வைற் சோப் நிறுவன உரிமையாளரான டாக்டர் கனகராசாவின் உந்துதலால் பனம் பழங்களை ஆராய்ச்சிக்கும் உட்படுத்தினோம்.

பனையின் மற்றைய உற்பத்திகளும் இங்கு ஆராயப்பட்டன.

அன்றைய கணிப்பின்படி இலங்கையின் ஏறத்தாழ 6000 ஏக்கரில் உள்ள 10 மில்லியன் பனை மரங்களில் வருடமொன்றிற்கு 125 மில்லியன் பழங்கள் பெறலாம்.

வருடம் ஒன்றிற்கு 50 மில்லியன் கிலோகிராம் களி பெறலாம் எனவும், களியில் 14 முதல் 16 வீதம் வரை வெல்லம் இருப்பதால் அதனைப் பிரித்தெடுத்து வெற்றி கண்டோம்.

அத்துடன் 7.5 மில்லியன் கிலோகிராம் சீனி (வெல்லம்) பெறலாம். அல்லாவிடில் 2.5 மில்லியன் கிலோ கிராம் 'ஈதைல் அல்ககோல்' பெறலாம்.

இதனூடாக 10 மில்லியன் போத்தல் சாராயம் பெறலாம் எனப் பரிசோதித்து விஞ்ஞான பூர்வமாக விளக்கி வழங்கப்பட்டது.

**நேர்கண்டவர் : செ.ரமேஷ்**
**(M.A, Econ, M.A, Development)**

இயற்கையாக எமது கைக்குக் கிடைக்கும் பழங்களே இவற்றைத் தருகின்றன. மேலும் போரில் இடம்பெற்ற இடப்பெயர்வுகளும் ஆராய்ச்சிக்கு வழிவிட்டன. பூந்துணர்சாறை நொதித்தல் அடையவிடாது சேர்ப்பின் பதநீர் ஆகும். நொதிக்க விடப்படின் அது 'கள்' ஆக மாறும். சாவகச்சேரி அல்லாரைக் கிராமத்திற்கு இடம்பெயர்ந்த போது- கள்ளைப் பொருத்தமான, சரியான நேரத்தில் இறக்கி அதன் வெண்ணிறத்தை நன்கு தெளிவாக்கி, தாவரமொன்றின் சாற்றினால் மஞ்சள் நிறத்தையும்- கயர்ப்புத்தன்மையையும் கொடுத்தபோது-

நுரையுடன் கூடிய தெளிவான 'பியர்' கிடைத்தது.

இன்று ஆராச்சிகளைப் பல்கலைக் கழகங்களில் நடத்தி அதன் பயனுள்ள முடிவுகள் நாடு முழுவதும் பிரயோகிக்கப் படவேண்டும்.

ஆனால் சில பல்கலைக்கழகங்கள் இதனைச் செய்யத் தவறுகின்றன.

கல்லூரிகள் போன்றே இயங்குகின் றன.

இதனால் மெய்யான, உயிர்நுட்பமான வெளியீடுகள் சமூகத்திற்கு உதவமாட்டாது. இதற்கு முன்பிருந்த பல்கலைப் பேராசிரியர்கள் விட்ட தவறுகளும் இதற்கு முக்கிய காரணமாகும்.

எனவே ஒவ்வொரு கண்டுபிடிப்பாளனும் தனது கண்டுபிடிப்புக்களை மறைத்து வைப்பதனை விட சமூகத்திற்கு வழங்குவதன் ஊடாக மெய்யான, நீதியான சமூக முன்னேற்றத்தைப் பெறலாம்.

# தஞ்சையிலே ஓர் ஆடல் வேள்வி

*உலகெலாம் தொழவந் தெழுகதிர்ப் பருதி*
*ஒன்று நூறாயிரம் கோடி*
*அலகெலாம் பொதிந்த திருவுடம் பச்சோ!*
*அங்கனே அழகிதோ அரணம்*
*பலகுலாம் படை செய் நெடுநிலைமாடம்*
*பருவரை ஞாங்கர் வெண்டிங்கள்*
*இலைகுலாம் பதனத் திஞ்சி சூழ் தஞ்சை*
*இராச ராசேச் சரத்திவர்க்கே.*

என்பது கருவூர்தேவரின் திரு இசைப்பா. உலகின் கலைச்செல்வமான தஞ்சை இராஜராஜேஸ்வரர் ஆலயம் இன்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் முதலாம் இராஜராஜப்பெருமானால் கட்டப்பட்டது. நுண்கலைகளின் பூர்வீகமாக இன்றும் விளங்குவது, உலகில் தமிழர்களுக்கு மட்டுமல்ல மனிதர்களாகப் பிறந்த எவருக்கும் அற்புதங்கள் நிறைந்த கட்டடக்கலை




சிறப்பு, உயர்ந்த நந்தி மிகவும் பாரமான கற்களால் ஆன கோபுரம், லிங்கம் என பல சிறப்புகளை கொண்டது.

சிற்பக்கலையின் சீர்மை, ஓவியக்கலையின் லாவண்யம், ஆடற் கலை அரசிகளின் ஆதிக்கம், இசைக்கலைஞர்களின் இன்னிசையும் நிறைந்த ஒரு பேரானந்த பூமி இது. மனிதப்பிறவியின் பேறு என்றால் அது தஞ்சைபெருவுடையான் காலடியில் ஒரு கணம் நிற்க கிடைப்பதேயாகும் இற்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தஞ்சாவூர் மண்ணை ஆண்ட தமிழ் மன்னனான இராஜ ராஜசோழ மன்னனால் கட்டப்பட்டது தஞ்சைப் பெருவுடையார் ஆலயம். இம்மன்னன் தனது ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் கலைக்காகச் சேவைகளை ஆற்றி இருந்த போதும் இவனையும் இவனது கலையாட்சி சிறப்பையும் மேன்மைப்படுத்துவது இக் கோயிலாகும். இக்கோயிலில் ஆயிரமாம் ஆண்டு நிறைவு விழா இம்மாதம் 25ஆம், 26ஆம் திகதிகளில் வெகுசிறப்பாக தஞ்சைக் கோயிலிலேயே கொண்டாடப்பட்டது. சாதாரணமாக 25ஆவது, 50ஆவது, 100ஆவது ஆண்டு விழா என்றாலே எம்மத்தியில் குதூகலம் சொல்லவே தேவையில்லை. இதில் ஆயிரமாம் ஆண்டு விழா என்றால் அப்பப்பா.......!

தமிழக அரச முதல்வர் முத்தமிழ் அறிஞர் மு.கருணாநிதியின் ஏற்பாட்டில் குறிப்பிட்ட தினங்களில் இந்திரலோகமாக் காட்சியளித்தது தஞ்சை பெருவுடையார் ஆலயம். ஓதுவார்களின் பாசுரப்பாடல்கள் எங்கும் ஒலித்தவண்ணம் உள்ளன. இராஜராஜனின் நாட்டியக்கலை ஆர்வத்தை சிறப்பிக்க பத்மபூஷன், முனைவர் பத்மா சுப்பிரமணியம் தலைமையில் உலகமெங்கும் இருந்து ஆயிரம் நடனக் கலைஞர்கள் ஒன்று சேர்க்கப்பட்டு பரதநாட்டியாஞ்சலி ஒன்று பெருவுடையானுக்கும் இராஜராஜனுக்கும் செலுத்தப்பட்டது.

கலாநிதி பத்மா சுப்பிரமணியம் பற்றிச் சொல்வதாயின் தனது நான்காவது வயதிலிருந்து 60 வருடங்களுக்கு மேலாக நாட்டியக் கலைக்குத் தன்னை அர்ப்பணித்து வருபவர். எளிமையும், நளினமும், சிற்பச் செழுமையும் உடைய நாட்டிய அசைவுகளால் நம்மைக் கவர்ந்தவர். தன்னுடன் பல நாட்டியக் கலைஞர்களை உலகம் பூராகவும் உருவாக்கி வழி நடத்தி வருபவர். நாட்டியத்தையே தன் உயிர் மூச்சாக இன்றும் வாழ்பவர்.

இவரது அழைப்பையும் வேண்டுதலையும் சிரமேற்கொண்டு இவரது மாணவிகளும் சகாக்களும் அமெரிக்கா, சிங்கப்பூர், மலேசியா மற்றும் இலங்கை போன்ற நாடுகளிலிருந்து தமது நாட்டியக் கலைஞர்களையும் அழைத்து கொண்டு தஞ்சையிலே ஒன்றுசேர்ந்தனர். ஒத்திகைகள் ஏதுமின்றி ஒரு சேர அரங்கேறிய ஓர் உன்னத நாட்டியப் படைப்பை அங்கே கண்டோம். ஒருவரது நடன அரங்கேற்றம் என்றால் ஓடோடிப் போகும் எமக்கு ஒரு மேடையில் ஓராயிரம் பேரைக் காண்பது என்பது நட்சத்திரங்களின் நடுவே நிற்பது போலத் தோன்றியது. இரவுக்கு ஒரே ஒரு சந்திரன். அதைச் சுற்றி ஓராயிரம் நட்சத் திரங்கள் போல நாட்டியத்திற்கு இன்றைய சந்திரனாய் ஒரே ஒரு பத்மாவைச் சுற்றி ஓராயிரம் நாட்டியத் தாரகைகள் மின்னிக் கொண்டிருந்தார்கள்.

ஆடுவதற்குப் போதிய இடவசதி இல்லாதபோதிலும் அது ஒரு பொருட்டாகத் தெரியவில்லை. நாட்டியத்தில் மூத்த மற்றும் வளரும் சிறு பராயக் கலைஞர்கள் வரையானவர்களின் சங்கமமாக இருந்தது. தஞ்சைப் பெருவுடையார் ஆலய முன்றில் பத்மா சுப்ரமணியம், கலைமாமணி கமலா பாரத், கலைமாமணி வினித் (நடிகர்), சுவர்ணமால்யா, கொழும்பு நாட்டியக் கலா மந்திர் வாசுகி ஜெகதீஸ்வரனின் மாணவிகள் மற்றும் பல முன்னணி கலைஞர்கள் இதில் பங்கு பற்றியதைக் காணலாம்.

இந்து ஆலயங்களில் முக்கியப்படுத்தப்படும் 'கணபதி கௌத்துவத்துடன்' ஆரம்பமாகி ராஜராஜேஸ்வரர் மீது கருவூர்த்தேவர் பாடிய திருவிசைப்பாவின் பத்துப் பாடல்களும் ஜதி அமைப்புகளுடன் ஆடப்பட்டது.

தொடர்ந்து ஆதிசங்கரர் அருளிய சிவ பஞ்சாட்சர துதி ''ந'' விலிருந்து ''ய'' வரையான 'நமசிவாய' என்ற ஐந்தெழுத்திற்குரிய ஸ்லோகத்திற்கு ஆடலமைத்து ஆடப்பட்டது. பொருத்தமான பாடற்பரப்புகளைத் தேர்ந்தெடுத்து இசை மற்றும் நாட்டியமைப்புச் செய்து வீடியோ, DVDயாக அனைவருக்கும் அனுப்பப்பட்டுப் பயிற்சி பெற்றவுடன் ஒத்திகைகள் ஏதுமின்றி இந்நாட்டியாஞ்சலி அரங்கேற்றப்பட்டது.

தமிழக அரசின் முற்று முழுதான அனுசரணையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முதல்வர் கருணாநிதி, அவரது புதல்வரும் அமைச்சருமான மு.க அழகிரி, கனிமொழி மற்றும் அன்பழகன் உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்களும் , கலையார்வலர்களும் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் இன்னொரு சிறப்பம்சம் என்னவென்றால் தமிழ்நாட்டின் தொல் பொருள் ஆராட்சியாளரும் வரலாற்றாசிரியரும், எழுத்தாளருமான முனைவர் நாகசாமி

இராஜ இராஜ சோழனின் கல்வெட்டுக்களை ஆராய்ந்து, நூல் ஒன்றினை அன்றைய தினம் பத்மா சுப்பிரமணியத்துக்காகவும் அவரது 999 நடனக் கலைஞர்களுக்காகவும் உலகிற்காகவும் வெளியிட்டார். இதில் இக்காலத்தில் பணி புரிந்த 407 நடனமணிகள் பற்றி இராஜ இராஜனால் உருவாக்கப்பட்ட கல்வெட்டில் கூறப்பட்டதை இங்கே நூலுருவில் கொண்டு வந்தார். இது உலகம் பூராகவும் உள்ள நாட்டியக் கலைஞர்களுக்கு ஓர் வரப்பிரசாதமாகும்.

ஆயிரமாண்டுகள் கடந்து நிற்கும் ஆலயத்திலே ஆயிரம் நடன வித்தகவர்கள் நடனமாடியது அவர்களுக்கு மட்டுமன்றி நாட்டிய உலகினுக்கே பெருமை சேர்ப்பதாகிறது. பெருவுடையானின் பாதங்களைப் போற்றி வாழ்க. ராஜ ராஜன் புகழ் வளர்க. அவன் வளர்த்த பரதக் கலை வளர்க.

திருமதி அ.உமாமகேஸ்வரி

# அன்பு பற்றி அறிஞர்களின் கருத்துக்கள்

★ அன்பு இரக்கமும் இரட்டைக் குழந்தைகள்.

- ட்ரைடன்

★ அன்பு கடவுளின் வடிவம்.

- லூதர்

★ நம்மீது அன்பு இல்லாதவர்கள் மீது நாம் அன்பு உள்ளவராகவே இருக்க வேண்டும்.

- நாவலர்

★ அன்பும், அறிவும், அகிம்சையும் கை கோர்த்து இன்பத்தாண்டவம் ஆடும் போது தான் நாகரிகம் நிலை பெற்றிருக்க முடியும்.

- பெர்ட்ராண்ட் ரஸ்ஸல்

★ அன்பு குறைந்த இடங்களில் குற்றங்கள் பெரிதாகத் தோன்றுகின்றது.

-வேல்ஸ்

★ தாயின் அன்பை வெளியிட உலகில் எந்த மொழியிலும் வார்த்தையில்லை.

-போமன்

★ உன்னுடைய அயலவனிடம் அன்பாயிரு.

-யேசுபிரான்

★ அன்பும், பணிவும் மேன் மக்களின் பண்பாடு, அகந்தையும் இழிவும் ஈனர்களின் குணமாகும்.

-மு.கருணாநிதி

தொகுப்பு: உ.கீர்ணிகா.

# தினமும் ஒரு அப்பிள்

அப்பிளில் இல்லாத சத்துக்களே இல்லை எனலாம்.

உடலை வளர்க்கும் விற்றமின்களும் உடலின் செயல்களை ஊக்குவிக்கும் தாதுப் பொருள்களும் உடல் உள்ளுறுப்புகளும் சுரப்பிகளும் செயற்பட உதவும். நுண்னிய சத்துகளும் ஒமோன் மற்றும் பல்வேறு அமிலங்களும் அப்பிள் பழத்தில் உள்ளன.

அப்பிளில் சக்கரைச் சத்து, நீர்ச்சத்து, மாச்சத்து நார்ச்சத்து போன்றவைகள் உள்ளன. புரதம், சுண்ணாம்பு, சோடியம், பொஸ்பரஸ் போன்ற சத்துகளும் விற்றமின் 'சி' போன்றவைகளும் அடங்கியுள்ளன.

அப்பிளானது விற்றமின் குறைவால் ஏற்படும் நோய்களைக் குணப்படுத்தும். உடல் செயல்களை ஒழுங்குபடுத்தி நோய் எதிர்ப்பு சக்தியைக் அதிகரிக்கும்.

குழந்தைகளுக்கு அப்பிளைக் கொடுத்து வர அவர்களின் எலும்பு வளர்ச்சிக்கும் பற்கள் உறுதிக்கும் சிறந்த பயன் கிடைக்கின்றது. அப்பிள் சாறு அருந்திவர தோல் சுருக்கம் மாறி உடல் பளபளப்பாகும்.

குடலுக்குப் பலத்தைத் தரும் பழம் அப்பிள். வாய் நாற்றமுள்ளவர்கள் தொடர்ந்து நான்கு நாள்கள் அப்பிள் சாப்பிட்டுவர வாய் துர்நாற்றம் உடனே நீங்கும்.

இரத்தச் சோகை உள்ளவர்கள் அப்பிள் சாப்பிட்டு வர இரத்த அணுக்கள் பெருகி இரத்தச் சோகை அடியோடு குணமாகும். அப்பிளிலுள்ள சத்து எலும்புகளை உறுதிப்படுத்தும். மூளைக்கு சுறுசுறுப்பைத் தரும். ஞாபக சக்தியை அதிகரிக்கச் செய்யும்.

உ.சிந்து.

# கரப்பான் [எக்ஸிமோ] நோய்

★கோவைக்காயை அரிந்து காயப்போட்டு உப்பிட்ட மோரைத் தெளித்து உலர்த்திப் பதப்படுத்தியவற்றை எண்ணெய் அல்லது நெய்விட்டு பொரித்து சோற்றுடன் சேர்த்துண்ண கரப்பான் நோய் குணமாகும்.

★ கோவைக் கிழங்கை கொட்டைப்பாக்களவு அரைத்து பசும்பாலில் கலக்கிக் கொடுக்கலாம்.

★சரக்கொன்றைப் பூவை அரைத்து எலுமிச்சம் பழச்சாற்றுடன் கலந்து உடலில் பூசிக் குளித்துவர சொறி, கரப்பான், தேமல் இவை இல்லாமல் போகும்.

★செருப்படை, பூவரசன் இலை இரண்டும் சமமாக வெயிலில் காய வைத்து தூள் செய்து தேங்காயெண்ணெய் கலந்து உடம்பிலும் காலிலும் கரப்பான், கிரந்தி, சொறிக்கட்டு பூசிவர குணமாகும்.

★ அவரை, அகத்தி, பூவரசம் இலைப் பழுப்புக்களையும் குப்பைமேனி இலையையும் இடித்து பிழிந்து சாற்றுடன் சம அளவு வேப்பெண்ணெய் கலந்து வெயிலில் வைத்துப் பின்பு கரப்பான் உள்ள இடங்களில் பூசி வரலாம்.

பு.தட்சி.

# விலங்குகளின் விந்தைகள்

*டொல்பின் ஒரு கன்னைத் திறந்த நிலையில் தூங்கும்.

*முதலைக்கு தண்ணீரில் கண் தெரியாது. தண்ணீருக்கு வெளியே நன்றாகத் தெரியும்.

* நத்தைக்கு 4 மூக்குகள் உண்டு.

*ஆந்தைக்கு நீலநிறம் மட்டும் தெரியும்.

* நெருப்புக் கோழியின் கண்கள் அதன் மூளையை விடப் பெரியவை.

*கரப்பான் பூச்சி தலையில்லாமல் 9 நாள்கள் உயிரோடு இருக்கும். 9 ஆவது நாள் பட்டினியால்த்தான் இறக்கும்.

* எறும்பு தன்னெடையைப் போல 50 மடங்கு எடையைத் தூக்கும்.

* ஒட்டகச் சிவிங்கிக்கு குரல்நாண் கிடையாது.

* பூனை தனது கண்ணில் உள்ள டபிட்டம் லூசிடம் என்ற படலத்தால் இரவில் மனிதனை விட 6 மடங்கு நன்றாகப் பார்க்க முடியும்.

* அவுஸ்திரேலியாவை இருப்பிடமாகக் கொண்ட கங்காருவில் 50 வேறுபட்ட வகைகள் உள்ளன.

வாணி.

# மூலிகைகளும் நோய்களும்

கடுக்காய் :
சுகமாக ஜீரணம் செய்யக் கூடியது. பசியைத் தூண்டும். ஆயுளை நீடிக் கும். சோகை, மயக்கம், மூலம், நாட்பட்ட வயிற்றுப் போக்கு ருசியின்மை, வயிற்றுப் பொருமல் ஆகியவற்றையும் கடுக்காய் தீர்க்க வல்லது.

நெல்லிக்காய் :
குளிர்ச்சியை உருவாக்கும். கண்களுக்கு இதமானது. இதயத்திற்கு நலம் செய்யக்கூடியது. தொண்டைக்கு மிகவும் நன்மை செய்யக்கூடியது.

திராட்சை:
ஆண்மைத் தன்மையை வளர்க்கும். கண்களுக்கு நன்மை தரும். மலம், சிறுநீர் என்பவற்றை வெளியேற்றும். தண்ணீர்த் தாகம் , இருமல், தொண்டைக்கம்மல் இவைகளைப் போக்கும்.

புடலங்காய்:
கபம், பித்தம் இவைகளைப் போக்கும். புண்ணை ஆற்றும், பசியைத் தூண்டும்.

பச்சைப் பயறு:
சுகமாக ஜீரணம் ஆகக் கூடிய தானியமாகும். இது கண்களுக்குத் தெளிவை உண்டாக்குகிறது.

பயற்றம் கஞ்சி:
கண் நோய், தொண்டை நோய், வேறு நோயாளிகளுக்கும் பயன்தரக்கூடிய உணவாகும்.

சக்கரை:
ஆண்மைத் தன்மையை வளர்க்கும். இரத்தத்துடன் கூடிய இருமல் , காது, மூக்கு, வாய் என்பவற்றால் இரத்தம் வடிபவர்களுக்கும் வாய்வுத் தன்மையையும் போக்கும்.

பசுவின் நெய்:
ஞாபகசக்தி, பசித்தீ என்பவற்றுக்கு நலம் செய்யும். நல்ல குரல் வளத்துக்கும் உடல் அழகு போன்றவற்றுக்கும் பயன்தரும்.

பசுப்பால்:
இரத்தத்துடன் கூடிய இருமல் உள்ளவர்களுக்கும் மலச்சிக்கல், தலைசுற்றல் இரத்தப் பித்தம் என்பவற்றுக்குப் பலன் தரக்கூடியது.

வெங்காயம்:
கபத்தை அதிகப்படுத்தும் வாயுவைக் கண்டிக்கும். உடல்வலு, ருஷியை உண்டாக்கவும் சிறந்தது.

சாம்பற்பூசணி:
ஆண்மையை வளர்க்கும். பித்தம், வாயு என்பவற்றைப் போக்கும், தோசங்களையும் நீக்கக் கூடியது.

தேங்காய்:
வயிற்றுப் பொருமல், ஜீரணத்தைப் போக்கவும் வாயு, பித்தம் சம்பந்தமான நோய்களுக்கும் சிறந்தது.

முட்டை:
இருமல், இருதயநோய், நெஞ்செரிவு, உடல் வலு போன்றவற்றுக்குச் சிறந்தது.

அவல்:
வாய்வுத் தன்மையைப் போக்கவும் மலச்சிக்கலை நீக்கவும் உடல்வலுவை ஏற்படுத்தவும் சிறந்தது.

சாம்பற்பூசணி:
ஆண்மையை வளர்க்கும். பித்தம், வாய்வு என்பவற்றைப் போக்கும்,அத்துடன் தோஷங்களையும் நீக்கக் கூடியது.

க.நிலா.

# தெரிந்து கொள்ளுங்கள்

**சிட்டு இனம்**
மஞ்சள் தொண்டைச்சிட்டு,
மஞ்சள் சிட்டு,
பச்சைச்சிட்டு,
நீலச்சிட்டு,
கருஞ்சிட்டு,
கறுப்புவெள்ளைப் புதர்ச்சிட்டு

**சில்லை இனம்**
சிவப்புச் சில்லை
வெண்தொண்டைச்சில்லை
வெண் முதுகுச் சில்லை
கருந்தொண்டைச்சில்லை
கருந்தலைச்சில்லை
புள்ளிச்சில்லை

**கீச்சான் இனம்**
பழுப்புக் கீச்சான்
கருஞ்சிவப்பு முதுகுக் கீச்சான்
செம்முதுகுக் கீச்சான்
காட்டுக் கீச்சான்
கறுப்பு வெள்ளைக் கீச்சான்
கருந்தலைக்கீச்சான்
குயில் கீச்சான்.

**சின்னான் இனம்**
சாம்பல் தலைச் சின்னான்
கருங்கொண்டைச் சின்னான்
சிவப்பு மீசைச் சின்னான்
மஞ்சள் தொண்டைச் சின்னான்
வெண்புருவச் சின்னான்
மஞ்சள் புருவச் சின்னான்
சின்னான்
கருஞ்சின்னான்

**மின்சிட்டு இனம்**
சின்ன மின் சிட்டு
மின்சிட்டு

த.நிலா.

# முதல் பெண்மணிகள்

| பெயர் | துறை | வருடம் | நாடு |
|---|---|---|---|
| ★ எலிசபேத் பிளக்வெல் | மருத்துவர் | 1849 | அமெரிக்கா |
| ★ லூஸி ஹெப்ஸ் | பல்வைத்தியர் | 1866 | அமெரிக்கா |
| ★ சுரபெல்லா மேன்ஸ் பீல்ட் | வழக்கறிஞர் | 1869 | அமெரிக்கா |
| ★ எஸ்தர் மோரிஸ் | நீதிபதி | 1876 | அமெரிக்கா |
| ★ மைலி எலிஸி | விமானி | 1909 | பிரான்ஸ் |
| ★ அலிஸ்ரெப்பின் ஸ்வெல்ஸ் பொலிஸ் | | 1910 | அமெரிக்கா |
| ★ சிறிமாவோ பண்டார நாயக்கா | பிரதமர் | 1960 | இலங்கை |
| ★ வலன்டினா டெரஸ்கோவோ | விண்வெளி வீராங்கனை | 1963 | ரஷ்யா |
| ★ மரியாஸ்டொலா பெரோன் | ஜனாதிபதி | 1973 | ஆயஜென்ரீனா |
| ★ அன்னே விண்ட | புகையிரத ஓட்டுநர் | 1983 | இங்கிலாந்து |

தாரணி.

# திருகோணமலையில் மூன்று நாள்கள் கிழக்கு மாகாண இலக்கியப் பெருவிழா

திருகோணமலை,ஒக்.5

கிழக்கு மாகாண இலக்கியப் பெருவிழா இம்முறை திருகோணமலையில் எதிர்வரும் 23,24,25 ஆம் திகதிகளில் நடைபெறும். கிழக்கு மாகாண கல்வி, விளையாட்டு, பண்பாட்டுத் துறை அமைச்சு இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

இப்பெருவிழா தொடர்பாக கடந்த சனிக்கிழமை மாலை 2 மணி யளவில் அமைச்சின் மாநாட்டு மண்டபத்தில் மிக விரிவாக ஆராயப்பட்டது. பிரதி செயலாளர் சி.தண்டாயுதபாணி இந்த ஆய்வுக் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

திணைக்கள உயர் அதிகாரிகள், மட்டக்களப்பு , அம்பாறை, திருகோணமலை ஆகிய பிரதேச கலாசார உத்தியோகத்தர்கள் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.

இதில் எடுக்கப்பட்ட முடிவுகளின் படி எதிர்வரும் 23,24, 25 ஆம் திகதிகளில் இப் பெருவிழா ஊர்வலத்துடன் ஆரம்பமாகும். இவ்விழாவில் ஆய்வரங்கு, முதமைச்சர் விருது வழங்கல் வைபவம், பெரியார்கள் கௌரவிப்பு வைபவம் ஆகியவையும் இடம் பெறும்.

முதல்நாள் ஊர்வலம் வலயக் கல்வி அலுவலகத்திலிருந்து புறப்பட்டு, மடத்தடி சந்தியூடாக விகாரை வீதிக்கு வந்து இறுதியாக விழா நடைபெறும் உவர்மலை விவேகானந்தாக் கல்லூரியை அடையும்.

கிழக்கு மாகாண பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளும்,வேடப் புனைவுகளும் முதல்நாள் விழாவில் இடம்பெறும்.

இரண்டாம் நாள் நிகழ்வில் முதலமைச்சர் விருது வழங்கல் வைபவம் இடம்பெறும். இதில் கலைஞர்களுக்கான விருது வழங்கல், 2009 இன் சிறந்த இலக்கிய நூல்களுக்கான பரிசு வழங்கல் ஆகிய அம்சங்கள் இடம்பெறும்.பிரதம விருந்தினராக கிழக்கு மாகாண முதலமைச்சர் சி.சந்திரகாந்தன் கலந்து கொள்வார்.

23,24,25ஆம் திகதிகளில் இடம்பெறும். ஆய்வரங்கில் கலந்துகொள்ள விரும்பும் கலைஞர்களை முன்கூட்டியே விண்ணப்பிக்குமாறு கிழக்கு மாகாண கல்வி அமைச்சு கோரியுள்ளது.

விண்ணப்பங்களை பிரதிச் செயலாளர், கல்வி பண்பாட்டலுவல்கள் காணி, காணி அபிவிருத்தி அமைச்சு கிழக்கு மாகாணம் திருகோணமலை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கிழக்கு மாகாண கலாசார திணைக்கள அதிகாரி எஸ். அன்பழகன் தெரிவித்துள்ளார். (ளி)

# முஸ்லிம் இளைஞர் கூட்டமைப்பின் வருடாந்த மாநாடு ஞாயிறன்று

அம்பாறை,ஒக். 5

முஸ்லிம்இளைஞர்கூட்டமைப்பின் 6 ஆவது வருடாந்த மாகாநாடும், அட்டாளைச்சேனை பிரதேச சபைத் தவிசாளர் எம்.ஏ.அன்ஸிலின் சேவை நலம் பாராட்டு வைபவமும் அட்டாளைச்சேனை பலநோக்கு கூட்டுறவுச் சங்கக் கூட்ட மண்டபத்தில் எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறும்.

முஸ்லிம்இளைஞர்கூட்டமைப்பின் தலைவரும், ஊடகவியலாளருமான எஸ்.எம்.அறூஸ் மாநாட்டுக்குத் தலைமை வகிப்பார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அல்ஹாஜ் ரவூப் ஹக்கீம் பிரதம அதிதியாகவும், ஹரிஸ், பைசால் காசிம், எம்.ரி. ஹசன் அலி ஆகியோர் கௌரவ அதிதிகளாவும் கலந்து கொள்வர்.

கிழக்கு மாகாணசபை உறுப்பினர்களான அல்ஹாஜ் எஸ்.எல். மசூர் சின்னலெப்பை, எஸ்.எஸ். பி. அப்துல் மஜித், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி பிரதித்தலைவர் முழக்கம் மஜித்,நிந்தவூர் பிரதேசசபைத் தவிசாளர் எம். ஏ.எம்.தாஹிர் ஆகியோரும் சிறப்பு அதிதிகளாகக் கலந்து கொள்வர்.

பொத்துவில் பிரதேசசபை தவிசாளர் மர்சூக், அட்டாளைச் சேனை அமைப்பாளர் சட்டத்தரணி எஸ்.எல்.ஏ.றசீட், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபக பொதுச் செயலாளர் எம்.எம். நசிர், மார்க்கப் பெரியார்கள், கல்விமான்கள் ஆகியோரும் சிறப்பு அதிதிகளாகப் பங்கு பற்றுவார். (ளி)




# உலக சிறுவர் தினவிழா

திருகோணமலை, ஒக்.5

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு கிண்ணியா அந்-நஜாத் மகா வித்தியாலய மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை சிறுவர் தின விழா நடைபெற்றது.

அதிபர் ஏ.ஆர். இப்றாகிம் இதற்குத் தலைமை வகித்தார். மாணவர்கள், கிண்ணியா வலயக் கல்வி அலுவலக அதிகாரிகள், ஆசிரியர்கள், வித்தியாலய அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் ஆகியோர் உட்பட பெருந்திரளானோர் இதில் கலந்து கொண்டனர்.மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் பரிசளிப்பு வைபவமும் இதில் இடம் பெற்றன. (ளி)

# மட்டு. செயலக மண்டபத்தில் அபிவிருத்திக் குழுக்கூட்டம்

மட்டக்களப்பு,ஒக். 5

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டம் எதிர்வரும் 11 ஆம் திகதி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் தற்போது முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி வேலைத் திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பாக இதில் மிக விரிவாக ஆராயப்படும்.

இதேவேளை,எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள துரித அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பான ஆய்வும் மேற்கொள்ளப்படும்.

பிரதியமைச்சர்களான விநாயகமூர்த்தி முரளிதரன், எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ், கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் ஆகியோரும் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதில் கலந்துகொள்வர்.

மாகாணசபை உறுப்பினர்கள், அரச அதிபர், பிரதேச செயலாளர்கள், பிரதேச சபைத் தலைவர்கள் ஆகியோரும் இக்கூட்டத்தில் பங்குபற்றுவர். மட்டக்களப்பு மாவட்ட திட்டமிடல் செயலகம் இத்தகவல்களை வெளியிட்டுள்ளது. (ளி)

# கிழக்கு மாகாணத்தில் இவ்வாண்டு 2,867 பேருக்கு டெங்குக் காய்ச்சல்

திருகோணமலை, ஒக்.5

கிழக்கு மாகாணத்தில் இவ்வாண்டு கடந்த ஒன்பது மாதங்களில் 2,867 பேர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 29.

இவ்வாறு மாகாண சுகாதார அமைச்சின் பொதுச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் இ.ஜே. ஞானகுணாளன் தாம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

வருட ஆரம்பத்திலிருந்து இதுவரை திருகோணமலை, கிண்ணியா, கந்தளாய், தம்பலகாமம் ஆகிய பிரதேசங்களில் 11 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைப் பிரிவில் கல்முனை தெற்கு, கல்முனை வடக்கு, காரைதீவு, சாய்ந்தமருது,நிந்தவூர் ஆகிய பகுதியில் 7 பேரும், மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைப் பிரிவில் 11 பேரும், அம்பாறை சுகாதாரப் பிரிவில் பதியதலாவையில் ஒருவரும் டெங்குக்கு பலியாகியுள்ளனர் என்றும் அவர் மேலும் விவரித்துள்ளார். (ளி)

வன்முறையால் பாதிக்கப்பட்ட

# குக்குலேகம தோட்ட மக்களுக்கு நட்டஈடு வழங்க நடவடிக்கை

கொழும்பு, ஒக்.5

நிவித்திகலை, குக்குலேகம தோட்டத்தில் வன்முறையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நட்டஈடு பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிககளை மேற்கொண்டு வருகிறார் என இரத்தினபுரி மாவட்ட எம்.பி. வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

அதேவேளை, வன்முறை காரணமாக இடம்பெயர்ந்த 37 குடும்பங்களும் மீண்டும் தத்தமது வீடுகளுக்குத் திரும்பியுள்ளன.

குக்குலேகம தோட்டத்தில் கடந்த மாதம் 13ஆம் திகதி பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த காவலாளி ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார். இதனையடுத்து அன்றிரவு குறித்த பிரதேசத்தில் வசிக்கும் தமிழ் மக்களின் வீடுகளையும், உடைமைகளையும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த சிலர் அடித்து, உடைத்து தீக்கிரையாக்கினர்.

இக் கொடூரச் சம்பவத்தையடுத்து, அச்சம் கொண்ட தமிழ் மக்கள் குறித்த பிரதேசத்தை விட்டு இரவோடிரவாக இடம்பெயர்ந்து

காடுகளிலும் தேயிலைத் தோட்டங்களிலும் தங்கியிருந்து மறுநாள் காலை உறவினர்களின் வீடுகளில் தஞ்சம் புகுந்தனர்.

இந்நிலையில், குக்குலேகம தோட்டங்களிலும் தங்கியிருந்து மறுநாள் காலை உறவினர்களின் வீடுகளில் தஞ்சம் புகுந்தனர்.

இந்நிலையில், குக்குலேகம தோட்டத்திலிருந்து இடம்பெயர்ந்த தமிழ் மக்களின் தற்போதைய நிலைமை, அவர்கள் தொடர்பாக அரசு மேற்கொள்ளும் அடுத்தக் கட்ட நடவடிக்கைகள் என்பவை குறித்து வாசுதேவ நாணயக்கார எம்.பியை தொடர்புகொண்டு கேட்டபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

''குக்குலேகம தோட்டத்திலிருந்து இடம்பெயர்ந்த சுமார் 37 குடும்பங்கள் மீண்டும் தத்தமது வீடுகளுக்குத் திரும்பியுள்ளன.

அவர்களின் வாழ்க்கை நிலைமை தற்போது வழமைக்குத் திரும்பியுள்ளது. இங்கு எதுவித பிரச்சினையும் இல்லை.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நட்டஈடு வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றேன்.'' - இப்படி அவர் தெரிவித்தார்.

எது எப்படியிருப்பினும், குறித்த பிரதேசத்தில் வசித்து இடம்பெயர்ந்த தமிழ் மக்கள், தாம் மீண்டும் அப் பிரதேசத்திற்குத் திரும்பினால் தமது பாதுகாப்புக்கு யார்




உறுதியளிப்பர் என்று ஏக்கத்துடன் கேள்வி எழுப்பியிருந்தனர்.

இந்நிலையில் குக்குலேகம தோட்டத்தில் வசித்து வந்த தமிழ் மக்களின் பாதுகாப்புக் குறித்து நிவித்திகலைப் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

குக்குலேகம தோட்டம் தற்போது வழமைக்குத் திரும்பியுள்ளது. அங்கே வாழும் தமிழ் மக்களுக்கு நாங்கள் 100 சதவீத பாதுகாப்பையும் வழங்குவோம். இது எமது கடமையாகும். ஆகவே மக்கள் அச்சம் கொள்ளவேண்டியதில்லை.

மதுபான விற்பனையாளர்களினால்தான் இப் பிரச்சினை தோற்றம்பெற்றது. எனவே, அதனை முற்றாக இல்லாதொழிப்பதற்கு நாம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். - இப்படி அவர் தெரிவித்தார். (சி)

# பல குறைபாடுகளுடன் இயங்கும் நுவரெலியா ஆதார வைத்தியசாலை

நுவரேலியா, ஒக்.5

சுமார் பத்துலட்சம் மக்கள் வாழும்நுவரெலியாமாவட்டத்தில் உள்ள ஆதார வைத்தியசாலை பல்வேறு குறைபாடுகளுடன்இயங்குவதாக விசனிக்கப்படுகின்றது.

இது குறித்து பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

வைத்தியசாலை விடுதிகளில் கட்டில்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. இதனால் தங்கிநின்று சிகிச்சை பெறும் நோயாளர்கள் பாரிய சிரமங்களுக்கு முகம் கொடுக்கின்றனர்.

சில சந்தர்ப்பங்களில் ஒரு கட்டிலில் இரு நோயாளர்கள் தங்கவேண்டிய நிலையும் ஏற்படுகின்றது. இதனால் குறிப்பிட்ட நோய்க்குப் பரிகாரம் பெறச் செல்லும் நோயாளி வேறு பல தொற்றுநோய்களுடன் வீடு திரும்பும் அபாயமும் உள்ளது.

அத்துடன் வைத்திய உபகரணங்களுக்கும் தட்டுப்பாடு நிலவுகின்றது. சிற்றூழியர்களுக்கும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

மத்திய அரசின் நிர்வாகத்திலுள்ள இவ் வைத்திசாலையில் இத்தகைய குறைபாடுகள் காணப்படுவது விசனிக்கத்தக்கது.

நுவரெலியா மாவட்டத்தில் 17 சிறு மருந்தகங்களும், நூற்றுக்கு மேற்பட்ட தோட்ட வைத்தியசாலைகளும் உள்ளன. அவை எல்லாவற்றும் பிரதானமாக இந்த வைத்தியசாலையே விளங்குன்றது.

எனவே, சம்பந்தப்பட்ட அமைச்சு இவ் வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகளை விரைவில் நிவர்த்தி செய்யவேண்டும் - இப்படி பொதுமக்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்படுகிறது. (ளி)

# பதுளை டிப்போவில் விரைவில் ரயர் மீள்நிரப்பும் தொழிற்சாலை

பதுளை, ஒக்.5

இலங்கை போக்குவரத்து சபையின் பதுளை டிப்போவில் டயர் மீள்நிரப்பும் தொழிற்சாலை அமைக்கும் நடவடிக்கையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பதுளையில் டயர் மீள்நிரப்பும் தொழிற்சாலை ஒன்றை நிறுவுமாறு ஊவா மாகாண சபை உறுப்பினர் அரவிந்குமார், ஆளுநர் சீ. நந்தாமெத்தீவ் மற்றும் மாகாண முதலமைச்சர் சசீந்திர ராஜபக்ஷ ஆகியோரிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

கோரிக்கையை ஏற்றுக்கொண்ட மாகாண ஆளுநர் சீ. நந்தா மெத்தீவ், இத்தொழிற்சாலையை அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கமவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அதேவேளை ஊவா மாகாணத்தின் போக்குவரத்துக்குப் பொறுப்பாக இருக்கும் முதலமைச்சர் சசீந்திர ராஜபக்ஷ இலங்கை போக்குவரத்து சபையின் ஊவா பிராந்திய சிரேஷ்ட முகாமையாளர் எம். விஜயரத்தின விடம் டயர் மீள்நிரப்பு தொழிற்சாலை ஒன்றை அமைப்பது தொடர்பான முழுமையான அறிக்கையொன்றை தமக்கு உடனடியாகச் சமர்ப்பிக்குமாறு பணிப்புரை விடுத்துள்ளார் - இப்படி மாகாண சபை உறுப்பினரும், ம. ம. மு. உப தலைவருமான அரவிந்குமாரின் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ளி)

# நாவலப்பிட்டியில் அடைமழை நகரத்தில் வெள்ளப்பெருக்கு

நுவரெலியா, ஒக்.5

மலையகப் பகுதியில் பரவலாகப் பெய்த அடைமழை காரணமாக தோட்டத் தொழிலாளர்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் வேளையில் பெய்த அடைமழையால் மலையகத்தின் பெரும்பாலான வீதிகள் வெள்ளத்தில் மூழ்கின.

மத்திய மாகாணத்தில் நுவரெலியா, கண்டி ஆகிய மாவட்டங்களில் பிற்பகல் 2.00 மணி தொடக்கம் அடைமழை பெய்தது.


நாவலப்பட்டியில் பெய்த அடைமழையால் நகரின் கண்டி வீதி சுமார் ஒரு மணி நேரம் வெள்ளக்காடாய் காட்சியளித்தது.

இதன்போது நாவலப்பட்டி நகரிலிருந்து கண்டிக்கான வாகனப் போக்குவரத்துகள் ஸ்தம்பிதமடைந்தன. நகரின் எரிபொருள் நிரப்பு நிலையம், வங்கிகள், வர்த்தக நிறுவனங்களுக்குள்ளும் வெள்ள நீர் புகுந்தது. இதனால் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

நாவலப்பட்டி நகரில் வடிகால் கட்டமைப்பு உரியவகையில் இல்லாத காரணத்தாலேயே மழைகாலங்களில் இந்நிலை ஏற்படுகின்றது எனப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, மழைகாரணமா கொத்மலை வெவண்டன் தோட்டத்தில் லயன்கள் இடிந்துவிழும் அபாயம் ஏற்பட்டதால் அங்கிருந்த எட்டுக் குடும்பங்களைச் சேர்ந்த 28 பேர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என நுவரெலியா மாவட்டச் செயலாளர் தெரிவித்தார்.

25
ஆவது வருடம்
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
வெள்ளிவிழாவை
முன்னிட்டு



# எழுத்தாக்கப் போட்டிகள்

உதயன் நாளிதழ் தனது 25 ஆண்டுகள் நிறைவுநாள் நிகழ்வைச் சிறப்புடன் கொண்டாடும் நோக்குடன் எழுத்தாக்க ஆர்வமுடைய உதயன் வாசகர்களிடையே பின்வரும் திறனறியும் போட்டிகளை நடாத்தத் தீர்மானித்துள்ளது.

1. சிறுகதை
2. புதுக் கவிதை
3. மரபுக் கவிதை
4. கட்டுரை

### பரிசுகள்

ஒவ்வொரு பிரிவிலிருந்தும் தெரிவாகும் ஆக்கங்களுக்குப் பின்வரும் வகையில் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூன்று இடங்களுக்கும் முறையே:-

முதலாம் இடம் ரூபா 25,000/-
இரண்டாம் இடம் ரூபா 15,000/-
மூன்றாம் இடம் ரூபா 10,000/-

தெரிவு செய்யப்படும் மேலும் 08 ஆக்கங்களுக்குச் சான்றிதழ் வழங்குவதுடன் தெரிவாகும் அனைத்து ஆக்கங்களும் உதயன் பத்திரிகையில் வெளியிடப்படும்.

### சிறுகதை ஆக்கம் - நிபந்தனைகள்

- சிறுகதை ஒவ்வொன்றும் சமகால சமூகப்பண்பியல் உணர்வுகளை வெளிப்படுத்துவனவாய் மானிட மேன்மையை அவாவுவனவாய் அமைதல்வேண்டும்.
- ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட எத்தனை சிறுகதைகளையும் எழுதலாம். சிறுகதை எழுதப் பட்ட தாளில் பெயர், முகவரி என்பவற்றை எழுதுவதைத் தவிர்க்கவும். தனியான தாளில் பெயர், முகவரி என்பவற்றை எழுதி இணைக்கவும்.

### கவிதை ஆக்கம் - நிபந்தனைகள்

- கவிதைகள் யாப்பமைதி பேணுபவையாகவோ, புதுக்கவிதையாகவோ அமையலாம்.
- மரபுக்கவிதை, புதுக்கவிதை இரண்டும் தனித்தனிப் பிரிவாகத் தெரிவு செய்யப்பட்டுப் பரிசுகள் வழங்கப்படும்.
- கவிதைகள் சமூகப் பிரஞ்ஞை உடையனவாய் மானிடத்தின் மேன்மையை அவாவுவனவாய் அமையவேண்டும்.
- இலக்கண வழுக்கள் சொல் / எழுத்துப் பிழைகளுக்குப் புள்ளிகள் கழிக்கப்படும்.
- கவிதைகள் 40 அடி / 60 வரிகளுக்கு மேற்படாதவனவாய் அமையவேண்டும்.

### கட்டுரை ஆக்கம் - நிபந்தனைகள்

பின்வரும் விடயப் பரப்புகளில் ஒன்றினைத் தெரிவு செய்து கட்டுரை ஆக்கப்படுதல் வேண்டும்.

1. மூன்றாம் உலகநாடுகள் எதிர்நோக்கும் பிரச்சனைகளும் தீர்வுகளும்
2. புலம் பெயர்தல் இலங்கைத் தமிழர்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வாகுமா?
3. எதிர்கால நோக்கில் தமிழர் விஞ்ஞானம்
4. ஈழத்தில் மெல்லத்தமிழ் இனி ..... !
5. தமிழ்ப் பெண்கள் உண்மையில் விடுதலை பெற்றுள்ளார்களா?

எழுதப்படும் கட்டுரைகள் A4 தாளில் அச்சிடப்பட்டதெனின் 06 பக்கங்களுக்கு மேற்படா திருத்தல் வேண்டும். கையெழுத்தெனின் A4 தாளில் 06 பக்கங்களுக்குள் உள்ளடக் கத்தக்கவாறு அச்சிட்டுப்பெறும் வகையில் எழுதப்படுதல் வேண்டும்.

### பொது நிபந்தனைகள்

- ஆக்கங்கள் தாளின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதப்படல் வேண்டும்.
- ஆக்கம் ஒவ்வொன்றும் தனது சொந்த ஆக்கம் என்பதையும் முன்னர் எப்பொழுதும் வெளியிடப்படாததும், வேறெவரது ஆக்கமும் அல்ல என்பதையும் உறுதி செய்தல் வேண்டும்.
- ஆக்கங்களை அனுப்பிவைக்கும் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் சிறுகதை / புதுக்கவிதை / மரபுக்கவிதை / கட்டுரை என்பதைக் குறிப்பிடவும். (தேவையற்றதை நீக்கிவிடவும்)
- இத்துடன் இணைத்துள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி அனுப்பும் ஆக்கங்களே பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.
- ஆக்கங்கள் யாவும் 15.10.2010ந் திகதிக்கு முன்னர் உதயன் பணிமனைக்குக் கிடைக்கக் கூடியதாக அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்பட வேண்டும். உதயன் விண்ணப்பப் படிவம் இணைக்கப்படாதவையும் குறித்த தினத்திற்குப் பின்னர் கிடைக்கும் ஆக்கங்களும் பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
- ஆக்கங்கள் கையெழுத்தாகவோ அச்சிடப்பட்டனவாகவோ அமையலாம்.
- உதயன் நிறுவனத்தினர் மற்றும் சகோதர நிறுவனங்களில் பணிபுரிவோர் இப் போட்டிகளில் பங்கு கொள்ளமுடியாது.

**உதயன் வெள்ளிவிழா – 2010**
**எழுத்தாக்கப் போட்டிகள் விண்ணப்பப்படிவம**
**சிறுகதை/ புதுக்கவிதை/ மரபுக்கவிதை/ கட்டுரை**
**(தேவையற்றதை கீறிட்டு நீக்குக)**

1. எழுத்தாளர் பெயர் : ......................................
2. புனைபெயர் இருப்பின் : ......................................
3. முகவரி : ......................................
4. ஆக்கத்தின் தலைப்பு : ......................................

இது எனது சொந்த ஆக்கம் என்பதையும் இதற்கு முன்னர் எவ்வழியிலும் இது வெளியிடப்படவில்லை என்பதையும் இது வேறு எவரது ஆக்கமும் அல்ல என்பதையும் இதன்மூலம் உறுதி செய்கிறேன்.

உறுதிப்படுத்துபவர். ................ கையொப்பம்

## கணிதபாட செயலமர்வு

தென்மராட்சி,ஒக்.5

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 6 வகுப்புகளில் கணிதபாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கணித செயற்பாட்டு முகாம் முன் ஆயத்த செயற்பாட்டு செயலமர்வு எதிர்வரும் 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 8 மணி தொடக்கம் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (ஐ-207)

## மாணிக்கவாசகர் வித்தி ஆசிரியர் தினவிழா

யாழ்ப்பாணம்,ஒக்.5

கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் ஆசிரியர் தினவிழா நாளை புதன் கிழமை காலை நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் பிரதம விருந்தினராகக் கரவெட்டிப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் கலந்துகொள்வார். (த-ற)

**THE ROYAL COLLEGE OF JAFFNA**
ஆங்கிலத்தில் சிறந்த புள்ளிகள்பெற ஆண்டு 6-10 வரை, சனி, ஞாயிறு 7.30 pm ஆண்டு 11-13 வரை திங்கள், செவ்வாய் 7.30 pm.
By.விக்னேஸ்வரன் ஆச்சாரி, பிளாக் வீதி, சங்கானை. தொ.பே:- 0776751649

### மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பம், ஜேர்மனியில் P.R உள்ள 1986இல் பிறந்த, 4 செவ்வாய், அவிட்ட நட்சத்திரம், 160 cm உயரமுள்ள மணமகளுக்கு A/L சித்தி அல்லது A/L படித்த மணமகனை பெற்றோர் தேடுகின்றனர்.
தொடர்பு:- 0774003410

### தவறிவிட்டது

அளவெட்டி பத்துப்பனையடி, அளவெட்டி மேற்கைச் சேர்ந்த சிவலிங்கம் சிவராசா (கண்ணன்) என்பவருடைய மோட்டார் சைக்கிள் இலக்கத்தகடு (NPVR 9260) யாழ்.மானிப்பாய் வீதியில் இருந்து அளவெட்டிக்குச் செல்லும் வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் தொலைபேசியில் தொடர்புகொண்டு ஒப்படைத்துதவவும். தொ.பே:- 0776280841

### முகவரி மாற்றம்



அம்மா அம்மா என் தாயே, நல்லூரிலே நின்றாடும் வடிவேலனே முருகா, நயினை யிலே கோயில் கொண்டாள் நாகபூஷணி ஆகிய பாடல்களைத் தந்த சொல்லிசைச் செல்வர், சக்தி உபாஷகர், கவிமணி க.ஆனந்தராசா (அன்னை தாஸன், முன்னாள் அதிபர்) அவர்களின் பஜனை, இசைச் சொற்பொழிவுகளை நவராத்திரி விழாக்கள், திருவிழாக்கள் என்பவற்றிற்கு அமைக்க அவரது பின்வரும் புதிய முகவரியில் தொடர்பு கொள்ளவும்.
ஸ்ரீரங்கம்,
ஊரெழு கிழக்கு.
தொ.பே: 0213215033, 0770333396
(104169)

உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான விசேடபிரிவு
மற்றும் பள்ளிச்சிறார்களுக்கான
Diploma in ICT
Fundamentals of IT
Basic Applications
Multimedia
Computer Hardware and Networking
Web Design and Development
Programming Concepts
Object Oriented Programming
Personnel Skills Development




Computers 4 kids



ஆரம்பம்
06.10.2010 புதன்கிழமை பி.ப 03.30 மணி,
09.10.2010 சனிக்கிழமை 09.30 மணி
GATEWAY CfICT GATEWAY CENTRE FOR INFORMATION TECHNOLOGY
347, Kasthuriyar Road, Jaffna - Phone 021 567 5555 / 021 222 7967

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ



## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 05.12.1932
உதிர்வு: 08.10.2007

விஸ்வப் பிரம்ம குலதிலகர்

### சபாபதி பஞ்சாட்சரம்

அன்புள்ள அப்பா!
காலத்தை உணர்த்த காவியமானீரோ!
கண்களின் முன் உருவம் மறைந்தாலும்
என்றென்றும் உமது நீங்கா நினைவுகளுடன் வாழும்

601/2, கே.கே.எஸ்.வீதி,
நாச்சிமார் கோயிலடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 00914424954090

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# அயோத்தி விவகாரத்தில் தீர்வுகாண புதுமுயற்சி இந்து - முஸ்லிம் பிரதிநிதிகள் சந்தித்துப் பேச்சு

அயோத்தி,ஒக்.5

அயோத்தி இராமஜென்ம பூமி வழக்கில் அலாகாபாத் உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ள நிலையில், பிரச்சினைக்குச் சமரசத் தீர்வுகாண இந்து, முஸ்லிம் அமைப்புகள் திடீர் முயற்சிகளை மேற்கொண்டுள்ளன.

உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்படும் என்று இரு தரப்பிலும் தெரிவிக்கப்பட்டாலும் மற்றொருபுறம் சமரசத் தீர்வுக்கான முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

இராமஜென்ம பூமி வழக்கில் சம்பந்தப்பட்டவர்களில் ஒருவரான முகமது ஹசீம் அன்சாரி, இந்து அமைப்பைச் சேர்ந்த மகந்த் ஞானி தாஸை நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேசினார். சர்ச்சைக்குரிய இடத்தில் உள்ள ஹனுமந்த் கோயிலில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

இந்தத் திடீர் முயற்சி இராமஜென்ம பூமி பிரச்சினையில் முக்கிய திருப்பமாகக் கருதப்படுகிறது. மகந்த் ஞானிதாஸ் அகில பாரதிய அகாரா பரிஷத்தின் தலைவராக உள்ளார்.

இச்சந்திப்புக் குறித்து விவரம் எதையும் தெரிவிக்க அவர் மறுத்துவிட்டார்.

ஆனால், சன்னி மத்திய வக்ப் வாரியம் கேட்டுக் கொண்டதற்கு இணங்கவே நான் மகந்த் ஞானி தாஸை சந்தித்துப் பேசினேன். பிரச்சினைக்குச் சுமுகத் தீர்வு காண்பது குறித்து அப்போது பேசப்பட்டது என்று அன்சாரி கூறினார்.

அயோத்தியில் சர்ச்சைக்குரிய நிலம் யாருக்குச் சொந்தம் என்பது தொடர்பாக 60 ஆண்டுகாலம் நடந்து வந்த சட்டப் போராட்டத்துக்கு அண்மையில் அலாகாபாத் நீதிமன்ற தீர்ப்பு மூலம் தீர்வு கூறப்பட்டிருந்தது.

சர்ச்சைக்குரிய 2.77 ஏக்கர் நிலப் பகுதியை மூன்று சமபாகங்களாகப் பிரித்து இந்து மகாசபை, நிர்மோஹி அகாரா, சன்னி வக்பு வாரியம் ஆகியவற்றுக்கு வழங்க வேண்டும், குழந்தை வடிவில் இராமர் சிலை இருக்கும் இப்போதைய வழிபாட்டிடம் இந்துக்களுக்கு வழங்கப்பட வேண்டும்; இன்னும் 3 மாதங்களுக்கு இப்போதுள்ள நிலையிலேயே இந்த இடம் பராமரிக்கப்பட வேண்டும் என்று அலாகாபாத் உயர்நீதிமன்றம் கடந்த வியாழக்கிழமை தீர்ப்பு வழங்கியது.

இந்தத் தீர்ப்பை அரசியல் கட்சிகள், இந்து மத அமைப்புகள் வரவேற்றாலும் வழக்கில் தொடர்புடைய நிர்மோஹி அகா ராவோ அல்லது சன்னி வக்பு வாரியமோ அல்லது இந்து மகாசபையோ ஏற்றுக் கொள்ளவில்லை.

நிர்மோஹி அகாராவும், சன்னி வக்பு வாரியமும் உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப் போவதாக அறிவித்துள்ளன.

இந்த நிலையில், பிரச்சினைக்குச் சுமுகத் தீர்வு காணும் வகையில் சன்னி வக்பு வாரியமும் நிர்மோஹி அகாராவும் பேச்சைத் தொடங்கியுள்ளன எனத் தெரிகிறது.

உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்து, அதன்மீது விசாரணை நடந்து தீர்ப்பு வெளிவர இன்னும் கால தாமதம் ஆகும் என்பதால் பேச்சு மூலம் தீர்க்க இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது என இருதரப்பிலும் கூறப்பட்டது. அயோத்திப் பிரச்சினை நமக்குள்ளே பேசித் தீர்த்துக் கொள்வதற்கான தருணம் வந்துள்ளது என்று சன்னி வக்பு வாரியம் சார்பில் பேச்சு நடத்திய அன்சாரி கூறினார்.

இதற்கிடையே இந்தப் பேச்சுக் குறித்து தமக்கு ஏதும் தெரியாது என்று வக்பு வாரிய சட்டத்தரணி ஸபர்யாப் ஜிலானி கூறினார். அலாகாபாத் உயர்நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்ய வேண்டும் என்றுதான் என்னிடம் சொல்லப்பட்டது, மற்றபடி சமரசப் பேச்சுக் குறித்து எனக்கு ஏதும் தெரியாது என்று அவர் கூறினார்.

## 67 ஏக்கரையும் இராமர் கோயிலுக்கு வழங்க வேண்டும்

லக்னோ,ஒக்.5

அயோத்தியில் பிரமாண்டமான இராமர் கோயில் கட்டுவதற்கு



மத்திய அரசு வசம் உள்ள 67 ஏக்கர் நிலத்தையும் வழங்க வேண்டும் - என்று உத்தரப்பிரதேச முன்னாள் முதல்வர் கல்யாண் சிங் கோரிக்கை விடுத்துள்ளார்.

அயோத்தியில் சர்ச்சைக்குரிய நிலத்தில் இருந்த மசூதி இடிக்கப்படும்போது உத்தரப் பிரதேச முதல்வராக இருந்தவர் கல்யாண் சிங்.

நேற்றுமுன்தினம் லக்னோவில் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த அவர் மேலும் கூறியவை வருமாறு -

அயோத்தியில் சர்ச்சைக்குரிய இடத்தையொட்டி மத்திய அரசு கையகப்படுத்தி வைத்துள்ள 67 ஏக்கர் நிலத்தைப் பொறுத்தவரை எந்தச் சர்ச்சையும் இல்லை.

எனவே அந்த நிலத்தை இராமர் கோயிலை பிரம்மாண்டமான முறையில் கட்டுவதற்கு வழங்க வேண்டும். இது தொடர்பாக பிரதமர் மன்மோகன் சிங்குக்கு நான் கடிதம் எழுதியுள்ளேன்.

அலாகாபாத் உயர் நீதிமன்றம் 2.7 ஏக்கர் நிலத்தை மூன்று பங்காகப் பிரித்து அதில் ஒரு பங்கு இராமர் கோயிலுக்கு என்றால் அந்த நிலம் இராமர் கோயில் எழுப்புவதற்கு போதாது. எனவே மத்திய அரசு வசம் உள்ள நிலமும் அளிக்கப்பட வேண்டும்.

- இப்படி அவர் கூறினார்.



புதுடில்லியில் நேற்றுமுன்தினம் கொமன்வெல்த் போட்டிகள் ஆரம்பமாகின. நிகழ்வை பிரிட்டன் இளவரசர் சார்ள்ஸ் ஆரம்பித்து வைத்தார். படத்தில் சார்ள்ஸ் தம்பதி, இந்திய ஜனாதிபதி பிரதிபா பட்டீல், பிரதமர் மன்மோகன் சிங் உட்பட பலரைக் காணலாம்.

## தமிழக மீனவர்கள் மீது மீண்டும் தாக்குதல்

இராமேஸ்வரம்,ஒக்.5

நடுக்கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த இராமேஸ்வரம் மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் மீண்டும் தாக்குதல் நடத்தினர்.

கடந்த 2 தினங்களுக்கு முன்பு பாம்பன் இராமேஸ்வரம் மீனவர்கள் மீது இலங்கை மீனவர்களும் பெற்றோல் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தினர்.

இந்தநிலையில் நேற்றுமுன்தினம் தாக்குதல் சம்பவம் நடந்துள்ளது.

அதுபற்றிய விவரம் வருமாறு -

இராமேஸ்வரத்தில் இருந்து கடந்த சனியன்று சுமார் 200 இற்கும் மேற்பட்ட விசைப் படகுகள் மீன்பிடிக்க சென்றன. நடுக்கடலில் மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது அந்த வழியாக 4 ரோந்துக் கப்பல்களில் 20 இற்கும் மேற்பட்ட இலங்கைக் கடற்படையினர் ரோந்து சுற்றி வந்தனர்.

தமிழக மீனவர்கள் மீன்பிடித்து கொண்டிருப்பதை கண்ட அவர்கள் இராமேஸ்வரம் மீனவர்களை உடனடியாகத் திரும்பிச் செல்லும்படி கூறி வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டு எச்சரித்தனர்.

மேலும் அருகில் மீன்பிடித்துக் கொண்டிருந்த சில படகுகளைச் சுற்றி வளைத்தனர். பின்னர் அந்த படகுகளில் ஏறி அதில் இருந்த மீனவர்களை தாக்கியதுடன் அவர்கள் பிடித்து வைத்திருந்த இறால் உள்ளிட்ட விலை உயர்ந்த மீன் வகைகளையும் அள்ளிச்சென்றனர்.

# படப்பிடிப்பின்போது அசினுக்கு எதிராக கறுப்புக்கொடி காட்டிய நால்வர் கைது!

கோவை அருகே விஜய்யுடன் 'காவலன்' படப்பிடிப்பில் பங்கேற்ற நடிகை அசினுக்கு எதிராகக் கறுப்புக்கொடி காட்டிய 4 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

ஈழத்தமிழர் படுகொலையைக் கண்டிக்கும் வகையில் தமிழ் நட்சத்திரங்கள் யாரும் இலங்கை செல்லக்கூடாது என்று தமிழ்த் திரைப்பட நடிகர் சங்கம் உள்ளிட்ட அமைப்புகள் அறிவித்திருந்தன.

ஆனால் தடையை மீறி நடிகை அசின் இலங்கை சென்றுவந்தார். அவருக்கு நடிகர் சங்கத் தலைவர் சரத்குமார் திடீரென்று ஆதரவு தெரிவித்ததால், தடையை மீறியதற்காக அவர் இதுவரை மன்னிப்புக் கேட்கவும் இல்லை.

ஆனால் தமிழ் உணர்வாளர்கள் மத்தியில் அசினுக்குக் கடும் எதிர்ப்பு நிலவியது. இந்த எதிர்ப்பினால் அவர் இனி தமிழகம் வர முடியாது என்ற நிலை இருந்தது.

ஆனால் இதற்கெல்லாம் அசின் கவலைப்பட்டவராகத் தெரியவில்லை. தனது செயலை நியாயப்படுத்தியதுடன், விஜய்யுடன் 'காவலன்' படத்தில் நடிப்பதற்காக பலத்த பாதுகாப்புடன் சென்னை வந்தார். எந்த எதிர்ப்பும் இல்லை.

அதன் பின்னர் பத்திரிகையாளர்கள் சந்திப்பிலும் கலந்து கொண்டார். இலங்கை சென்றது குறித்த கேள்விகளுக்கு மட்டும் பதில் சொல்ல மறுத்தார்.

இந்நிலையில் காவலன் படத்தின் படப்பிடிப்பு கோவை அருகே மேட்டுப்பாளையத்தில் நடந்து வருகிறது. விஜய் - அசின் நடிக்கும் இப்படத்தில் வடிவேல் உள்ளிட்டவர்களும் நடிக்கிறார்கள்.

நேற்றுமுன்தினம் நடிகர் விஜய் - அசின் நடித்த காட்சிகள் மேட்டுப் பாளையத்தில் படமாக்கப்பட்டது. ரயில் நிலையத்தில் இந்த படப்பிடிப்பு நடந்தது.

படப்பிடிப்பில் கலந்துகொள்ள அசின் மேட்டுப்பாளையம் வந்தார். படப்பிடிப்பில் இருந்தபோது அவருக்கு எதிராக திடீரென்று கறுப்புக்கொடி காட்டி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அசின் இனி தமிழ்ப்படங்களில் நடிக்கக்கூடாது என்று ஆர்ப்பாட்டத்தில் கோஷம் எழுப்பப்பட்டது.

உடனடியாகப் பொலிஸார் வந்து கறுப்புக் கொடி காட்டியவர்களில் 4 பேரைக் கைது செய்தனர்.

# தி.மு.கவோடு காங். தொடர்ந்து கூட்டணி இருக்க வேண்டும் என்பது கட்டாயமல்ல

### எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியன் தெரிவிப்பு

திருவொற்றியூர்,ஒக்.5

தி.மு.கவோடு காங்கிரஸ் கட்சி கூட்டணி என்பது இப்போது உள்ளது. ஆனால், இது எப்போதும் இருக்க வேண்டும் என்பது கட்டாயமல்ல - என்று காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

காந்தி ஜெயந்தி மற்றும் காமராஜர் நினைவு தினத்தையொட்டி, வடசென்னை காங் கிரஸ் கட்சி சார்பில் இந்திய தேசிய காங்கிரஸ் வரலாறு விளக்க கருத்தரங்கு சென்னையில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு பேசிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியவை வருமாறு -

இப்போது தி.மு.கவோடு காங்கிரஸ் கட்சி கூட்டணி அமைத்துள்ளது. அதற்காக தி.மு.கவோடுதான் காங்கிரஸ் கட்சி எப்போதும் இருக்க வேண்டும் என்பது கட்டாயமல்ல.

தமிழகத்தில் ஆக்க பூர்வமான பல்வேறு திட்டங்களைக் கொண்டுவந்து மிகச் சிறந்த ஆட்சியை நடத்தியவர் காமராஜர் மட்டுமே. காமராஜர் ஆட்சியில்தான் தமிழகம் பெரும் வளர்ச்சியைப் பெற்றது.

எனவே, அது போன்றதொரு ஆட்சியை தமிழகத்தில் மீண்டும் கொண்டுவர வேண்டும். அதற்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டும் என்பதே காங்கிரஸ் கட்சியினரின் விருப்பமாக உள்ளது.

மத்திய அரசு பல்வேறு நலத் திட்டங்களைச் செயற்படுத்தி வருகிறது. மாநில அரசு செயற்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களில் மத்திய அரசின் பங்கு என்பது நிச்சயமாக உள்ளது. தி.மு.க அரசின் சாதனை திட்டங்கள் அனைத்திலும் காங்கிரஸும் ஒரு பங்காளி என்பதை உணர வேண்டும். இதனைக் காங்கிரஸ் கட்சியினர் புரிந்து கொண்டு பொதுமக்களிடம் விளக்கிச் சொல்லவேண்டும். இதுதான் காமராஜர் ஆட்சி அமையும் இலட்சியத்துக்கு வலுசேர்க்கும்.

- இப்படி அவர் கூறினார்.

# சிறுமி கோரமாக கற்பழித்துக் கொலை சாக்கில் சுற்றி சடலம் ஆற்றுகரையில்!

திருநெல்வேலி,ஒக்.5

நெல்லையில் சிறுமியைப் பாலியல் பலாத்காரம் செய்து கொலை செய்த கொடூரச் சம்பவம் நடந்துள்ளது.

திருநெல்வேலி, கொக்கிரகுளத்தைச் சேர்ந்தவர் சுப்பிரமணியன். இவரது மகள் முருகம்மாள் (வயது - 9), அங்குள்ள பாடசாலையில் நான்காம் வகுப்புப் படித்து வந்தாள்.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் மாலை 3 மணிக்குப் பின்னர் சிறுமியைக் காணவில்லை. உறவினர்கள் வீடுகளில் தேடியும் கிடைக்காததால் சுப்பிரமணியன், பாளையங்கோட்டைப் பொலிஸில் முறைப்பாடு செய்தார்.

பொலிஸார் விசாரித்தனர். இந்நிலையில், நேற்றுமுன்தினம் காலையில் கொக்கிரகுளம், தாமிரபரணி ஆற்றுக் கரையில் பாலத்தின் அடியில் தூணுக்கு அருகே சாக் குப்பையில் சுற்றிய நிலையில் சிறுமி முருகம்மாளின் சடலம் கிடந்தது. சம்பவ இடத்தில் பொலிஸார் விசாரணை நடத்தினர்.

சாக்குப்பையின் உள்ளே வைத்து பாலத்தில் இருந்து சிறுமியின் சடலம் வீசப்பட்டதால் தலை மற்றும் உடலில் காயங்கள் இருந்தன. காதில் இருந்து இரத்தம் வழிந்தது. சிறுமி கற்பழித்துக் கொலை செய்யப்பட்டதற்கு ஆதாரமாக பல இடங்களில் காயங்கள் இருந்தன.

இன்ஸ்பெக்டர் குருநாதன் கூறுகையில், சிறுமி கோரமாக கற்பழிக்கப்பட்டுள்ளார். சடலத்தைப் பாலத்தின் மேலிருந்து வீசவில்லை.

இரவில் கொண்டுவந்து போட்டிருக்கலாம். மேலும், சம்பவ இடத்தில் கிடந்த போர்வை, லுங்கி ஆகியவற்றைக் கொண்டு விசாரணை நடத்தப்படுகிறது - என்று கூறினார்.

# கல்விச்சுடர் O/L மாவட்ட வலம் - 2010

கல்விப் பொதுத்தராதர (சா/த) மாதிரிவினாத்தாள் - 2010



ஆக்கம்:
ஏ.எல்.பாறூக்
BA (NDT-Maths, PGDE,
Dip.in.English, SLTS, LEARNIUM
மார்க்கட் வீதி, சாய்ந்தமருது 0
T.P: 071 4811396

G.C.E.(O/L)
அம்பாறை வலம்
கணிதம்

பரீட்சையில் வெற்றிபெற என்றும் இணைந்திருங்கள் உதயனுடன்...


## கணிதம் - I பகுதி - A நேரம்: 1 மணித்தியாலம்

எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடைதருக.


01.1 Kg தேயிலையின் விலை ரூ. 580 எனின், 250g தேயிலையின் விலை எவ்வளவு?

02.P=5, Q=$^1/_3$ எனின், 2P-3Q இன் பெறுமானத்தைக் காண்க.

03.உருவில் நிழற்றிய பிரதேசத்தை தொடைக் குறிப்பீட்டில் தருக.




04.உருவில் M இன் பருமனைக் காண்க.




05.8.52 லீற்றரை லீற்றர், மில்லி லீற்றரில் தருக.

06.3t=15 எனின், t இன் பெறுமானத்தைக் காண்க.

07.சுருக்குக. 7.02-3.8

08.3/5 இன் முதலாம் சமவலுப்பின்னத்தைத் தருக.

09.3, 2, 4, 5, 3, x, 6, 4 என்னும் தரவுக்கூட்டத்தின் ஆகாரம் 4 ஆகும். x இன் பெறுமானம் யாது?


10.தரப்பட்ட முக்கோண வடிவிலமைந்த புள்ளிக்கோலம் எத்தனையாம் முக்கோணி எண்ணைக் குறிக்கின்றது?



11.Y=x+$\sqrt{at}$ இல் t ஐ எழுவாயாக மாற்றுக.

01


12.தரப்பட்ட உருவில் உள்ள தரவுகளை நன்கு அவதானித்து கோடுகள் L, PQ என்பன ஒன்றுக்கொன்று சமாந்தரமாகையால் கோடு L இன்
1) படித்திறனைக் காண்க.
2) சமன்பாட்டைக் காண்க.




13. சுருக்குக. $\left[\left(\frac{216}{64}\right)^{2/3}\right]^{1/2}$

14.12% வருட வட்டிக்கு ரூ. 2,000 இற்கு இரண்டு வருடங்களின் பின்னர் செலுத்த வேண்டிய எளிய வட்டியைக் கணிக்குக.

15.உருவில் x இன் பெறுமானத்தைக் கணிக்குக.




16.lg2=0.3010, lg3=0.4771 எனின், lg 1.5 இன் பெறுமானத்தைக் காண்க.


17. பைதகரசின் மும்மையைப் பயன்படுத்தி செங்கோண முக்கோணி ஒன்றின் செங்கோணத்தை ஆக்கும் பக்கம் ஒன்றின் நீளம் 5 cm எனின், ஏனைய இரு பக்கங்களின் நீளத்தைக் காண்க.

18. $A=\begin{bmatrix} 3 & 1 & 5 \\ 2 & 0 & -04 \end{bmatrix}$ எனின்,
1) தாயம் A இன் வரிசையை எழுதுக.
2) 2 A ஐக் காண்க.

19.செங்கோண முக்கோணி ABC இல் கோணம் B=90° ஆகும். $Sin\hat{A}=\frac{5}{\sqrt{41}}$ எனின் tan கோணம் C இன் பெறுமானத்தைக் காண்க.

20.சுருக்குக. $\left[\frac{t+2}{7} - \frac{2t-3}{14}\right]$


21.




PT, TQ என்பன T என்ற புள்ளியிலிருந்து வரையப்பட்ட இரு தொடலிகள் ஆகும். XY என்பது வட்டத்தின் மற்றுமொரு தொடலியாகும். TP=15cm எனின், முக்கோணி TXY இன் சுற்றளவைக் காண்க.

02

22.உருவில் குறிக்கப்பட்டுள்ள தரவுகளைப் பயன்படுத்தி h இன் பெறுமானத்தைக் காண்க.





23.2314 என்பதில்,
எட்டு
1) 3 இன் இடப்பெறுமானம் யாது?
2) 1 இன் பெறுமானம் யாது?

24. Y=(X+2)²-3 என்ற இருபடிச் சார்பின் வரைபை X அச்சின் நேர்த்திசையில் 3 அலகுகள் நகர்த்தும்போது பெறப்படும் வரைபின் சமன்பாட்டைத் தருக.

25. X பக்க நீளமுடைய சதுரமொன்றின் மூலைவிட்டம் 5 $\sqrt{2}$cm எனின், X ஐக் காண்க.


26. சுருக்குக. $\frac{1}{3} \times \bar{2}.7304$

27. தரப்பட்ட உருவில் XY//AC ஆகும். XY=5cm, BX=8cm, BY=5.6cm எனின், YC இன் நீளத்தைக் காண்க.





28. பெட்டியொன்றினுள் 500 மின்குமிழ்கள் இருந்தன. அவற்றுள் தெரிவுசெய்யப்படும் மின்குமிழ் ஒன்று பழுதடைவதற்கான நிகழ்தகவு 0.2 ஆகும் எனின், பெட்டியினுள் உள்ள பழுதடையாத மின்குமிழ்கள் எத்தனையாகும்.

29. அருகில் தரப்பட்டுள்ள ஆரைச்சிறை OAB இல் OA=18cm, கோணம் AOB=35° எனின், அதன் சுற்றளவைக் கணிக்குக.




30. L,M என்பது ஒன்றுக்கொன்று சமாந்தரமற்ற இரு நேரிய பாதைகளாகும். N என்பதுபாதை M உடன் சேரும் மற்றுமொரு நேரிய பாதையாகும். A என்ற இடத்தில் நிற்கும் ஒருவர் அம்புக்குறி திசையில் பாதை N வழியே நடந்து செல்லும்போது எவ்விடத்தில் L,M ஆகிய இரு பாதைகளும் அவரிலிருந்து சமதூரத்தில் இருக்கும் என்பதை ஒழுக்கு பற்றிய அறிவைப் பயன்படுத்தி அமைப்பு மூலம் குறித்துக் காட்டுக.





03

## கணிதம் - I பகுதி - B நேரம்: 1 மணித்தியாலம்

01. நிதி நிறுவனமொன்றிலிருந்து ரூ. 60,000 ஐக் கடனாகப் பெற்ற ஒருவர் ரூ. 2,310 ஐ 30 சம மாதத் தவணைக் கட்டணங்களாகச் செலுத்த வேண்டும்.
1) செலுத்த வேண்டிய மொத்த வட்டியைக் காண்க.
2) மாத அலகுகளின் எண்ணிக்கை யாது?
3) மாத அலகு ஒன்றிற்கான வட்டி எவ்வளவு?
4) மாதமொன்றிற்கான கடன் தொகையின் பகுதி யாது?
5) அறவிடப்படும் ஆண்டு வட்டி வீதத்தைக் காண்க.

02. 44 cm சுற்றளவும், 20 cm உயரமுமுடைய உருளை வடிவ மரக்குற்றியில் அதன் குறுக்குவெட்டின் மையப்பகுதியில் அதன் அரைவாசி விட்டமுடைய துளை ஒன்று 8 cm நீளத்திற்கு இடப்பட்டுள்ள விதத்தை அருகிலுள்ள பரும்படிப் படம் காட்டுகின்றது.
1) உருளையின் ஆரையைக் காண்க.
2) துளையின் ஆரையைக் காண்க.
3) துளையின் மேற்றளப்பரப்பளவு யாது?
4) உருவின் மொத்த மேற்றளப் பரப்பளவு யாது?




03. பெட்டி ஒன்றில் 8 முட்டைகள் உள்ளன. அவற்றுள் 3 முட்டைகள் பழுதடைந்திருந்தன. பெட்டியிலிருந்து முட்டை ஒன்று எழுமாறாக வெளியே எடுக்கப்பட்டு, பிரதி வைப்பின்றி மீண்டும் ஒரு முட்டை வெளியே எடுக்கப்பட்டது.
1) இச்செயன்முறையின் மாதிரிவெளியை மரவரிப்படம் ஒன்றிற் குறித்துக்காட்டுக.
2) மரவரிப்படத்திலிருந்து பின்வருவனவற்றின் நிகழ்தகவுகளைக் காண்க.
   1) இரண்டு முட்டைகளும் பழுதடைந்தவையாக இருத்தல்.
   2) இரண்டு முட்டைகளும் நல்லவையாக இருத்தல்.
   3) குறைந்தபட்சம் ஒரு முட்டையாவது நல்லவையாக இருத்தல்.

04. இரு நகரங்களிற்கிடையே குறித்த ஒரு சராசரிக் கதியுடன் செல்லும் கடுகதிப் புகைவண்டி ஒன்று அதன்கதியை மணித்தியாலத்திற்கு 15 km ஆல் அதிகரிக்கச் செய்தால் பயணத்திற்கு எடுக்கும் காலம் 10 நிமிடங்களால் குறையும். 15km ஆல் குறைந்தால், காலம் 15 நிமிடங்களால் அதிகரிக்கும்.
1) இரு நகரங்களையும் A,B எனப் பெயரிட்டு அவற்றிற்கிடைப்பட்ட தூரம் S எனவும், சராசரிக் கதி U எனவும், முன்னர் எடுத்த நேரம் T எனவும் கொண்டு புகைவண்டிப் பயணத்தை விளக்கும் வரிப்படத்தை வரைக.
2) கதி= தூரம்/நேரம் எனும் தொடர்பினைப் பயன்படுத்தி S,U,T இலான மூன்று சமன்பாடுகளைப் பெறுக.
3) நீர் பெற்ற சமன்பாடுகளைத் தீர்ப்பதன் மூலம் புகைவண்டியின் சராசரிக்கதியையும், இரு நகரங்களுக்கிடையேயுள்ள தூரத்தையும் காண்க.

05. தேநீர்ச்சாலையொன்றில் நுகர்வுக்கான விற்பனை செய்யப்பட்ட பால் டின்களின் எண்ணிக்கைகள் பற்றி குறிப்பிட்ட நாட்களில் பெற்ற தகவல்கள் பின்வரும் வலையுரு வரையத்தில் காட்டப்பட்டுள்ளன. (வலையுரு வரையத்திலிருந்து பின்வருவனவற்றைக் காண்க.

(மிகுதி 19ஆம் பக்கத்தில்)

04

அன்பு மாணவர்களே: உங்களுக்கு எழும் விளக்கமின்மை, சந்தேகங்களை குறித்த ஆசிரியரின் தொலைபேசி இலக்கத்தின் ஊடாகத் தொடர்புகொண்டு இரவு 7.00 மணி முதல் இரவு 9.00 மணி வரையும் தெளிவுபடுத்திக்கொள்ள முடியும். (ஆசிரியர்: ஏ.எல்.பாறூக் தொலைபேசி இலக்கம்: 0714811396)

# வடமாகாண தமிழ் இலக்கியப் பெருவிழா; இறுதிநாள் நிகழ்வுகள் கிளிநொச்சியில் இன்று

கிளிநொச்சி, ஒக்.5

வடமாகாண தமிழ் இலக்கிய விழாவின் இறுதிநாள் நிகழ்வுகள் இன்று கிளிநொச்சியில் பிரமாண்டமாக நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

ம்ாபெரும் பண்பாட்டு பேரணியுடன் ஆரம்பமாக உள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே. என்.டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் கலந்து கொள்வர். கௌரவ விருந்தினராக வடமாகாண பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி, கிளிநொச்சி அரசாங்க அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர்.

பண்பாட்டுப் பேரணி பிற்பகல் 1.30 மணியளவில் கிளிநொச்சிப் பிள்ளையார் கோயில் முன்றிலில் ஆரம்பித்து கச்சேரி வழியாக டிப்போ சந்தி ஊடாக கிளிநொச்சி இந்துக் கல்லூரி மண்டபத்தை வந்தடையும். இதில் தமிழ் இன்னியம், வேடப் புனைவு, விருந்தினர் வரவேற்பு, தமிழ் அன்னை வரவேற்பு என்பன இடம்பெறும்.

இதன் பின்னர் கிளிநொச்சி இந்துக் கல்லூரி 'மெற்றாஸ் மெயில்' அரங்கில் நிகழ்வுகள் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் தலைமையில் நடைபெறும்.

இதில் சிறந்த நூல் தேர்வுக்கான பரிசு வழங்கல், ஆளுநர் விருது வழங்கல் மற்றும் கலைநிகழ்வுகள் என்பன இடம்பெறும்.

இதேவேளை - இறுதிநாள் நிகழ்வுகளில் வெளிமாவட்டங்களில் இருந்தும் கிளிநொச்சியில் இருந்தும் பெருந்திரளானோர் கலந்துகொள்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது. (எ-319)

## திறன் விருத்திச் செயலமர்வு

பருத்தித்துறை,ஒக.5

வடமராட்சி வலயக் கல்வி அலுவலக பிரிவிலுள்ள பாடசா லைகளில் தரம் 9 இல் கணித பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான திறன் விருத்திச் செயலமர்வு எதிர் வரும் வெள்ளிக்கிழமை எட்டாம் திகதி நடைபெறவுள்ளது.

நெல்லியடி ஆசிரியர் நிலையத்தில் நடைபெறவுள்ள இச்செயலமர்விற்கு தரம் 9 இல் கணித பாடத்தை கற்பிக்கும் சகல ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கேட்டுள்ளார்.

(த-190)

## இலங்கையில் 20 வீதமானோரின் ஒருநாள் வருமானம் 2 டொலர்கள்

கொழும்பு,ஒக்.5

இலங்கையின் ஒட்டுமொத்த சனத்தொகையில் 20 வீதமானோர் கடும் வறுமை நிலையில் வாழ்வதாகவும், அதற்கமைய அவர்களின் ஒருநாள் வருமானம் இரண்டு அமெரிக்க டொலர்களேயெனவும் சுகாதார அமைச்சின் மருத்துவ ஆய்வு நிறுவனம் வெளியிட்ட 2010 ஆம் ஆண்டின் தேசிய போஷாக்கு மற்றும் உணவுப் பாதுகாப்பு அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது.

நாளொன்றுக்கு இரண்டு டொலர்களுக்குக் குறைவான வருமானத்தைப் பெறும் இந்த மக்களின் வருடாந்த வருமானம் 720 டொலர்களுக்கும் குறைவானதாகவே உள்ளது எனவும் மேற்படி அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது. இதற்கமைய 2006 மற்றும் 2007ஆம் ஆண்டுகளில் உணவுப் பொருள்களின் விலை மட்டம் அதிகரித்ததன் காரணமாக இவர்கள் நாளொன்றில் சம்பாதிக்கும் இரண்டு டொலர் குறைவான வருமானத்தில் 60 வீதத்தையும் உணவுத் தேவைக்காகவே ஒதுக்கவேண்டியுள்ளது.

இவ்விதம் உணவுப் பொருள்களின் விலைகள் அதிகரிப்பதன் காரணமாக தாம் வாங்கும் உணவுப் பொருள்களின் அளவைக் குறைத்துக் கொள்வது மற்றும் போஷாக்குக் குறைந்த உணவுகளை உட்கொள்ளும் நிர்ப்பந்தத்துக்கு அந்த மக்கள் உள்ளாக வேண்டி ஏற்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் 2003 மற்றும் 2008ஆம் ஆண்டுகளில் இலங்கையில் அரிசி மற்றும் பால்மா வகைகளின் விலைமட்டம் 247 வீதத்தினாலும் 201 வீதத்தினாலும் அதிகரித்துள்ளதாகவும், கடந்த ஐந்தாண்டு காலத்துக்குள் சர்வதேச மட்டத்தில் உணவு வகைகள் மற்றும் எரிபொருள்களின் விலை மட்டங்கள் அதிகரித்துள்ளமையும் இந்தத் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் தேசிய போஷாக்கு மற்றும் உணவுப் பாதுகாப்பு அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-22)

## 16 குளங்களின் புனரமைப்பு நிறைவடையும் நிலையில்

### 23 மில்லியன் ரூபா செலவில் பணிகள்

யாழ்ப்பாணம், ஒக்.5

யாழ்.மாவட்டத்திலுள்ள 16 குளங்கள் 'கமநெகும' திட்டத்தின் கீழ் சுமார் 23 மில்லியன் ரூபா செலவில் இந்த வருடம் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன. இந்தப் புனரமைப்புப் பணிகள் யாவும் தற்போது நிறைவடையும் நிலையில் உள்ளதாக யாழ்.மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் எம்.பற்றிக் டிறஞ்சன் தெரிவித்தார்.

குளங்கள் புனரமைப்புத் தொடர்பாக உதவி ஆணையாளர் மேலும் தெரிவித்த விடயங்கள் வருமாறு:-


வேலணை, காரைநகர், சண்டிலிப்பாய், சங்கானை, தெல்லிப்பழை, சாவ கச்சேரி, கரவெட்டி ஆகிய பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட குளங்களே இவ்வாறு புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

இதில், வேலணைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வர்ணக்குளம், நயினாதீவு சின்னக்குளம், பெரிய மான் குளிக்குளம் ஆகியவையும் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வேதரடைப்புக்குளமும், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பாணாவெட்டிக் குளமும், புனரமைக்கப்பட்டு வருகின்றன.

அதேபோல சங்கானைப் பிரதேச செயலக பிரிவில் நெடுங்குளம், ஆச்சிவெட்டைக் குளம், நாசம்புலக்குளம் ஆகியவையும் தெல்லிப்பழைப் பிரதேச செயலக பிரிவில் பாண்டாவனைக் குளமும், சாவகச்சேரிப் பிரதேச செயலர் பிரிவில் இராமாவில் கழிவு வடிகால், நல்லைக்குளம், குமரணிக்குளம், வேவில் குளம் ஆகியவையும், கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் பரமானந்தம்குளம், தலவல்லைக்குளம், சோனப்புக்குளம் ஆகியவையும் இவ்வாறு புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன- என்றார்.

(த-14)

(18ஆம் பக்கத் தொடர்ச்சி)




1) தகவல்கள் பெறப்பட்ட நாட்களின் எண்ணிக்கை யாது?
2) ஆகார வகுப்பாயிடையைக் காண்க.
3) 16-24 எனும் வகுப்பாயிடையினாற் குறிக்கப்படும் அதே மீடிறனைக் கொண்டுள்ள மற்றொரு வகுப்பாயிடையைக் குறிப்பிடுக.
4) 40 அல்லது அதனிலும் குறைந்த பால்டின்கள் விற்பனை செய்யப்பட்ட நாட்களைக் குறிப்பிடுக.

### கணிதம் - II பகுதி - A

- பகுதி A யிலிருந்து ஐந்து வினாக்களையும், பகுதி B யிலிருந்து ஐந்து வினாக்களையும் தெரிந்தெடுத்துப் பத்து வினாக்களுக்கு விடைதருக.
- ஒவ்வொரு சரியான விடைக்கும் பத்துப் புள்ளிகள் வழங்கப்படும்.
- ஆரை r ஐ உடைய ஒரு திண்மக் கோளத்தின் கனவளவு $3/4\pi r^3$ ஆகும். குறுக்கு வெட்டுமுக ஆரை r ஐயும், உயரம் h ஐயும் உடைய ஒரு செவ்வட்ட உருளையின் கனவளவு $\pi r^2h$ ஆகும். ஆரையும் h உயரமும் உடைய செவ்வட்ட கூம்பின் கனவளவு $^1/_3\pi r^2h$ ஆகும்.

**பகுதி A யில் ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.**

01. ரமேஷ் A,B ஆகிய இரு கம்பனிகளிலும் முதலீடு செய்வதன் மூலம் கிடைக்கும் வருமானங்களின் விகிதம் 5:7 ஆகும்.
1) கிடைத்த வருமானம் ரூபா 4,800 எனின்,
   1. கம்பனி A யிலிருந்து கிடைக்கப்பெற்ற வருமானம் யாது?
   2. கம்பனி B யிலிருந்து கிடைக்கப்பெற்ற வருமானம் யாது?
2) ரமேஷ் பங்குகளை வாங்கும்போது கம்பனி Aயின் ரூபா 10 பங்கு ஒன்றுக்கு ரூ.16 உம், கம்பனி B யின் ரூ.10 பங்கு ஒன்றுக்கு ரூ.9 உம் கொடுத்தார். கம்பனி A யானது 8 வீதம் பங்கிலாபத்தையும், கம்பனி B யானது 12.5 வீதம் பங்கிலாபத்தையும் கொடுத்தன.
   1. இரு கம்பனிகளிலுமுள்ள பங்குகளினதும் பெயர் மாத்திரைப் பெறுமானங்களை கணிக்குக.
   2. ரமேஷ் இரு கம்பனிகளிலும் முதலிட்ட தொகையையும் தனித்தனியாகக் கணிக்குக.

02. 1) காரணிப்படுத்துக. $2m^2+7m-15$.
2) ஓர் எண் இரு இலக்கங்களைக் கொண்டது. அவ்விரு இலக்கங்களினதும் கூட்டுத்தொகை அவற்றின் வித்தியாசத்தைப் போல 6 மடங்காகும். அவ்விரு இலக்கங்களையும் இடமாற்றி எழுதினால் கிடைக்கும் புதிய எண்ணானது ஆரம்ப எண்ணைவிட 18 கூடியதாகும். முதலாவது எண்ணின் 10 ஆம், 1 ஆம் இடத்து இலக்கங்களை முறையே x,y எனக்கொண்டு ஒருங்காமை சமன்பாட்டைக் கட்டியெழுப்புக. அதிலிருந்து தரப்பட்ட எண்ணைக் காண்க.
3) நிறைவர்க்க மூலம் தீர்த்து விடையை 1 ஆம் தசமதானத்திற்கு திருத்தமாகத் தருக. $1/3x^2=x+½$.

03. 1) ''சதுரத்தாயம் என்பதனை உதாரணத்துடன் விளக்குக.
2)
$$\frac{1}{2}P-\begin{pmatrix}3 & 2 & 1\\2 & 0 & 5\end{pmatrix}=\begin{pmatrix}0 & -3 & 4\\1 & 2 & 7\end{pmatrix}$$
எனின், தாயம் PX ஐக் காண்க.
3) A என்பவரிடம் 3 சிவப்பு நிற மணிகளும் 2 பச்சை நிறமணிகளும் உள்ளன. B என்பவரிடம் 5 சிவப்பு நிற மணிகளும் C என்பவரிடம் 4 சிவப்புநிற மணிகளும், 1 பச்சை நிற மணியும் உள்ளன. இத்தகவலை தாயம் ஒன்றிற் குறித்துக்காட்டி அதற்கு K எனப் பெயரிடுக. K இன் வரிசை யாது?



04. $y=-x^2-x+5$ எனும் வரைபை வரைவதற்கு x,y ஆகியவற்றின் பெறுமானங்களின் அட்டவணையொன்று கீழே தரப்பட்டுள்ளது.

| x | -4 | -3 | -2 | -1 | 0 | 1 | 2 | 3 |
|---|---|---|---|---|---|---|---|---|
| y | -7 | -1 | _ | _ | 5 | _ | -1 | -7 |


1) 1. இவ்வட்டவணையிலுள்ள வெற்றிடங்களை நிரப்புக. பெற்ற விதத்தைக் காட்டுக.
   2. வரைபுத்தாளில் பொருத்தமான அளவிடையைத் தெரிவுசெய்து தரப்பட்ட சார்பின் வரைபை வரைக.
2) உமது வரைபிலிருந்து பின்வருவனவற்றிற்கு விடை எழுதுக.
   1. சார்பின் உயர்வுப் பெறுமானத்தைக் காண்க.
   2. சமச்சீர் அச்சின் சமன்பாடு யாது?
   3. x இன் எப்பெறுமான வீச்சினுள் சார்பு நேராக இருக்கும்.
3) $x^2+2x-5=0$ இன் தீர்வுகளைக் காண்க.

05. வகுப்பறையொன்றில் உள்ள 40 மாணவர்கள் தாம் விரும்பும் உணவு வகை பற்றிய தகவல்கள் வென்வரிப்படத்தில் காட்டப்பட்டு உள்ளது.




E = முட்டை சாப்பிடுவோர்.
F = மீன் சாப்பிடுவோர்.
M = இறைச்சி சாப்பிடுவோர்.
1) n(E)= 16, n(F) =31 எனின், வெற்றிடமாகவுள்ள தொடைப் பிரதேசங்களைப் பூரணப்படுத்துக.
2) மூன்று உணவுகளையும் சாப்பிடுவோர் எத்தனை பேர்?
3) மூன்று உணவுகளையும் சாப்பிடாதோர் எத்தனை பேர்?
4) மீன் மட்டும் சாப்பிடுவோர் எத்தனை பேர்?
5) இறைச்சி, மீன் ஆகியவற்றை மாத்திரம் சாப்பிடுவோர் எத்தனை பேர்?

06. அருகிலுள்ள உருவானது பளிங்கினால் செய்யப்பட்ட ஒரு கிண்ணமாகும். இதன் அடிப்பகுதி 3.5 cm ஆரையுடைய 8cm உயரமான உருளையையும், மேற்பகுதி 7 cm ஆரையுடைய திண்ம அரைக்கோளத்தையும், அதே ஆரையுடைய கூம்பு ஒன்றின் பகுதியையும் கொண்டுள்ளது. (உருளையின் தட்டையான பகுதியும், கூம்பின் தட்டையான மேற்பரப்பும் சமாந்தரமானவை)




1) கிண்ணத்தின் உயரத்தைக் காண்க.
2) இக்கிண்ணம் உருவாக்கப் பயன்படுத்தப்பட்ட ஒவ்வொரு பகுதியினதும் கனவளவினை தனித்தனியே கணிக்குக.
3) அதிலிருந்து கிண்ணத்தை ஆக்குவதற்குப் பயன்படுத்தப்பட்ட பளிங்கின் மொத்த கனவளவைக் காண்க.



### தமிழ் பகுதி - I இற்கான விடைகள்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01-3 | 02-4 | 03-2 | 04-2 | 05-3 | 06-2 | 07-4 | 08-3 | 09-3 | 10-2 |
| 11-3 | 12-2 | 13-2 | 14-3 | 15-3 | 16-2 | 17-2 | 18-1 | 19-4 | 20-3 |
| 21-4 | 22-2 | 23-1 | 24-2 | 25-3 | 26-3 | 27-4 | 28-3 | 29-4 | 30-3 |
| 31-2 | 32-2 | 33-3 | 34-1 | 35-4 | 36-4 | 37-3 | 38-1 | 39-1 | 40-1 |

*குறிப்பு:*

*இவ்வினாத்தாள்களுக்கான பகுதி - I விடைகள் புதன்கிழமை, வணிகக்கல்வி வினாத்தாளுடன்வெளிவரும். 02. சகல வினாத்தாள்களுக்குமான பகுதி II, பகுதி III இற்கான விடைகள் சனிக்கிழமையில் வெளிவரும்.*

# தேசிய மட்ட விளையாட்டுப் போட்டியில் 16 பதக்கங்களை வென்றது வடமாகாணம்

## யாழ்.மாவட்டத்துக்கு 13 பதக்கங்கள்

வலி.வடக்கு,ஒக்.5

அகில இலங்கைப் பாடசாலை அணிகளுக்கு இடையே தேசிய மட்டத்தில் இடம்பெற்ற விளையாட்டுப் போட்டிகளில் வடமாகாணம் 09 தங்கம், 03 வெள்ளி, 04 வெண்கலம் உள்ளடங்கலாக 16 பதக்கங்களை வென்றது. இதன் மூலம் மாகாண ரீதியில் ஆவது இடத்தைப் பிடித்தது.

யாழ்.மாவட்டத்துக்கு 13 பதக்கங்கள் கிடைத்தன.

நேற்று முன்தினம் கொழும்பு சுகததாஸ விளையாட்டு அரங்கில் நடைபெற்று முடிந்த தடகளப் போட்டிகளுடன் 2010ஆம் ஆண்டுக்கான தேசிய மட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகள் நிறைவடைந்தன.

பெறப்பட்ட 16 பதக்கங்களில் வவுனியா மாவட்டம் 02 வெண்கலப் பதக்கங்களையும், மன்னார் மாவட்டம் ஒரு தங்கப் பதக்கத்தையும் பெற்றுக்கொண்டன. ஏனைய அனைத்துப் பதக்கங்களையும் யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகள் கைப்பற்றின.

இதிலும் வலிகாமம் கல்வி வலயத்திற்கு உட்பட்ட தெல்லிப்பழைக் கல்விக் கோட்டம் அதிக பதக்கங்களைப் பெற்றுள்ளது. தொடர்ந்து சண்டிலிப்பாய், பருத்தித்துறை, ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம் கல்விக் கோட்டங்கள் பதக்கங்களைப் பெற்றுள்ளன.

தெல்லிப்பழைக் கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட அளவெட்டி அருணோயதாக் கல்லூரி,தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி ஆகியவை கோலூன்றிப் பாய்தலில் கூடிய தங்கப்பதக்கங்களைப் பெற்று முன்னிலையில் காணப்படுகின்றன.

இம்முறை தேசிய மட்டப் போட்டிகளில் யாழ்.பாடசாலைகளின் வீரர்கள் சிறந்த அடைவு மட்டத்தை வெளிப்படுத்திச் சாதனை புரிந்துள்ளதாக விளையாட்டு ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர். (த-23-86)

## பல்கலை அணி கொழும்புக்கு

யாழ்ப்பாணம்,ஒக்-5

இலங்கைப் பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான 10ஆவது விளையாட்டு விழாவை முன்னிட்டு மகரகம தேசிய இளைஞர் சேவை மன்றத்தில் நாளை மறுதினம் வியாழக்கிழமை முதல் 9ஆம் திகதி சனிக்கிழமை வரை கரப்பந் தாட்டப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

சென்.தோமஸ் கல்லூரியில் நாளை மறுதினம் வியாழக்கிழமை மேசைப்பந்தாட்டப் போட்டிகளும்நடைபெறவுள்ளன.

இந்த போட்டிகளில் பங்கு கொள்வதற்காக யாழ்.பல்கலைக்கழக ஆண்,பெண் மேசைப்பந்தாட்ட அணிகளும் ஆண் கரப்பந்தாட்ட அணியும் இன்று செவ்வாய்கிழமை கொழும்புக்குப் புறப்படுகின்றன. (த-23)



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவன் வ.ஜஸ்மினன் 17 வயதுப் பிரிவு நீளம் பாய்தலில் 6 மீற்றர் 60 சென்ரிமீற்றர் தூரம் பாய்ந்து தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்று தங்கப்பதக்கம் வென்றார். அத்துடன் அவர் வர்ண விருதையும் பெற்றுக்கொண்டார். அத்துடன் 21 வயது குண்டெறிதல் நிகழ்வில் ஜி.பிர காஸ் 4 ஆம் இடத்தைப் பெற்றார். இவர்களை வரவேற்கும் நிகழ்வு பாட சாலையில் நடந்தபோது எடுக்கப்பட்ட படம் இது.

வீரர்களுடன் அவர்களை நெறிப்படுத்திய ஆசிரியர் க.சுவாமிநாதன், பயிற்சியாளர் செ.றமணன் ஆகியோர் வரவேற்கப்படுவதைப் படத்தில் காணலாம். (த)

## மத்திய மாகாண அணி வெற்றி

யாழ்ப்பாணம்,ஒக்.5

தேசிய மட்ட உதைபந்தாட்டப் போட்டியில் வடமாகாண அணியுடனான ஆட்டத்தில் மத்திய மாகாண அணி வெற்றிபெற்றது.

கொழும்பு விளையாட்டு அமைச்சின் மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற உதைபந்தாட்டப் போட்டித் தொடரில் பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் மத்திய மாகாண உதைபந்தாட்ட அணியை எதிர்த்து வடமாகாண உதைபந்தாட்ட அணி மோதியது.

இதில் மத்திய மாகாண உதைபந்தாட்ட அணி தன்னை எதிர்த்து விளையாடிய வடமாகாண உதைபந்தாட்ட அணியை 8:0 என்ற கோல்கணக்கில் வென்றது. (த-23)

## இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு,ஒக்.5

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவையொட்டி யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்றுவரும் 06 பேர் பங்குபற்றும் மட்டுப்படுத்திய ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவுள்ள குழு 'பி' போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

✱ சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி எதிர் கொக்குவில் இந்துக் கல்லூரி.

✱ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் எதிர் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி.

✱ சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி எதிர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

✱ அரியாலை கனகரெத்தினம் மத்திய மகாவித்தியாலயம் எதிர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி. (ஐ-86)

## வவுனியா தமிழ் ம.விக்கு வெண்கலப் பதக்கம்

வலி.வடக்கு,ஒக்.5

அகில இலங்கைப் பாடசாலை அணிகளுக்கு இடையே தேசிய மட்டத்தில் நடைபெற்ற தடகளப் போட்டிகளில் 17 வயதுப் பிரிவு பெண்களுக்கான குண்டெறிதல் போட்டியில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய வீராங்கனை இராஜமனோகர் தர்சிகா 9.37 மீற்றர் தூரம் எறிந்து வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளார். இத்துடன் அவர் வர்ண விருதினையும் பெற்றுள்ளார்.

இவர் இவ்வாண்டு கொழும்பில் நடைபெற்ற சர்வதேச ஒலிம்பிக் தின தேசிய தடகளப் போட்டிகளில் கலந்து கொண்டு தட்டெறிதல், குண்டெறிதல் போட்டிகளில் முதலிடங்களைப் பெற்றுப் பதக்கங்களை வென்றமை குறிப்பிடத்தக்கது.

இவர் தற்போது வவுனியா மாவட்ட விளையாட்டுப் பயிற்சி நிலைய விளையாட்டு அலுவலர் க.விஜிதரனிடம் பயிற்சிகளைப் பெற்று வருகின்றார். (த-86)

## சாதனைப் பட்டியலில் யாழ்., வவுனியா அணிகள்

வலி.வடக்கு,ஒக்.5

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் மாவட்ட அணிகளுக்கு இடையே நடைபெற்ற பெண்களுக்கான 4X100 மீற்றர் அஞ்சல் ஓட்டப்போட்டியில் யாழ்ப்பாணம், வவுனியா மாவட்ட அணிகளின் பெறுபேறுகள் சாதனைப் பட்டியலில் பதிவு செய்யப்படவுள்ளன.

கடந்த மூன்று ஆண்டுகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் சாதனைப் பட்டியல் பதிவு செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுள்ளது.

2007ஆம் ஆண்டு வவுனியா மாவட்ட அஞ்சலோட்ட அணி 56:1 செக்கனிலும், 2009ஆம் ஆண்டு யாழ்.மாவட்ட அணி 54:9 செக்கனிலும், 2010 ஆம் ஆண்டு மீண்டும் வவுனியா மாவட்ட அணி 54;9 செக்கனிலும் 4X100 மீற்றரை ஓடிய பெறுபேறுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

2009ஆம், 2010ஆம் ஆண்டுகளில் யாழ்ப்பாணம், வவுனியா மாவட்ட அணிகளின் பெறுபேறான 54:9 செக்கன் வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் சாதனையாகப் பதிவு செய்யப்படவுள்ளது. (த-86)

## உடுவில் கோட்ட உதைபந்தாட்டம் இம்மாத நடுப்பகுதியில் ஆரம்பம்

வலி.வடக்கு, ஒக்.5

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான 16 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டப் போட்டிகள் இந்த மாதம் நடுப்பகுதியில் ஆரம்பமாகவுள்ளன.

உடுவில் கல்விக் கோட்டத்திற்கு உட்பட்ட ஆறு பாடசாலைகள் இப்போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளன. இப்பாடசாலை அணிகள் இரு அணிகளாகப் பிரிக்கப்பட்டுப் போட்டிகள் லீக் முறையில் நடைபெறவுள்ளன.

'ஏ' பிரிவில் சுன்னாகம் மயிலணி சைவ மகா வித்தியாலயம், இணுவில் இந்துக் கல்லூரி, சுன்னாகம் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயம் ஆகியவையும், 'பி' பிரிவில் ஏழாலை மயிலங்காடு ஸ்ரீ முருகன் வித்தியாலயம், சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, இணுவில் மத்திய கல்லூரி ஆகியவையும் இடம்பெற்றுள்ளன. (த-86)

## ஜயவர்த்தனபுர பல்கலை. அணி சம்பியன் வென்றது

யாழ்ப்பாணம்,ஒக்.5

பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் சம்பியனானது ஸ்ரீஜயவர்த்தபுர பல்கலைக் கழக அணி. போராடித் தோற்றது யாழ். பல்கலைக்கழக அணி.

இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான 10 ஆவது விளையாட்டு விழாவின் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் நேற்று திங்கட்கிழமை மாலை விளையாட்டு அமைச்சின் மைதானத்தில் இடம்பெற்றது.




இதில் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக அணியை எதிர்த்து யாழ்.பல்கலைக்கழக அணி மோதியது.

இரண்டு அணியினரும் தலா ஒவ்வொரு கோல்களைப் போட்ட நிலையில் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய யாழ். பல்கலைக்கழக அணியை 2:1 என்ற கோல் கணக்கில் வென்று நடப்பாண்டு சம்பியனானது. (த-23)

## ஜனாதிபதி தங்கக் கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டப் போட்டி அடுத்த வாரம்

யாழ்ப்பாணம், ஒக்.5

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 40 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்பட்ட ஜனாதிபதி தங்கக் கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் தேசிய மட்டப் போட்டி எதிர்வரும் 13ஆம், 14ஆம், 15 ஆம் திகதிகளில் கொழும்பு விளையாட்டு அமைச்சு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் பங்கு கொள்வதற்காக யாழ்.மாவட்டத்தின் சார்பாக ஆண்கள் பிரிவில் கோப்பாய்ப் பிரதேச செயலக பிரிவு அணியும் பெண்கள் பிரிவில் தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரிவு அணியும் கலந்து கொள்ளவுள்ளன. (த-23)






யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் துடுப்பாட்டப் பயிற்றுவிப்பாளர்களுக்கும் தேசியப் பயிற்றுனர்களுக்குமான கலந்துரையாடல் அண்மையில் சென்.ஜோன்ஸ் கல்லூரியில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

பிரிகேடியர் பிராங்கிளின் றொட்றிக்கோ, தேசியப் பயிற்றுவிப்பாளர் ஜெசி கம்கேக்கு நினைவுப் பரிசில் வழங்குவதை முதலாவது படத்திலும் கலந்துரையாடலில் கலந்துகொண்ட துடுப்பாட்டப் பயிற்சியாளர்களை அடுத்துள்ள படத்திலும் காணலாம். (தமிழினியன்)

# இரண்டாவது இன்னிங்ஸில் 192 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது ஆஸி

## இந்தியாவின் போராட்டம் தொடர்கிறது



மொகாலி, ஒக். 05

நான்காம் நாள் ஆட்டமான நேற்று, தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த ஆஸ்திரேலிய அணி 192 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. அடுத்து தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இந்திய அணி ஆட்டநேர முடிவின் போது, 4 விக்கெட்டுக்களை இழந்து 55 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்திய - ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி இந்திய, மொகாலியில் நடந்துவருகிறது.

முதல் இன்னிங்ஸில் 23 ஓட்டங்களால் முன்னிலையில் உள்ள ஆஸ்திரேலிய அணி, தனது இரண்டாவது இன்னிங்ஸை, டெஸ்ட் போட்டியின் 4ஆவது நாளான நேற்று ஆரம்பித்தது.

இதன் படி களமிறங்கிய ஆஸ்திரேலிய அணியின் ஆரம்ப வீரர்களான வாட்ஷன் (56), கட்டிச் (37) ஆகியோர் ஓரளவான ஓட்டத்துடன் ஆட்டமிழந்து வெளியேறினர். அடுத்து அடுத்துக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணித் தலைவர் பொன்டிங், கிளார்க் ஆகியோர் தலா 4 ஓட்டங்களை எடுத்து அணிக்கு ஏமாற்றம் அளித்தனர்.

அதன் பின்னர் களம்புகுந்த ஹஸி (28), நார்த் (10), பெய்னே (9), ஜோன்சன் (3), ஹாரிஸ் (9), ஹில்பெனகாஸ் (6) ஆகியோர் குறுகிய ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். பொலிஞ்சர் 5 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இரண்டாவது இன்னிங்ஸில் ஆஸ்திரேலிய அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 192 ஓட்டங்களை எடுத்தது. இந்திய அணியின் பந்துவீச்சாளர்களான சகீர் கான் (3), சர்மா (3), ஹர்பஜன் சிங் (2), ஓஜா (2) ஆகியோர் விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

அடுத்து இந்திய அணி தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்தது. அதன் படி இந்திய அணியின் ஆரம்ப வீரர்களான கம்பீர், ஷேவாக் களமிறங்கினர். கம்பீர் வந்த வேகத்திலேயே பெவிலியன் திரும்பினார். ஷேவாக் 17 ஓட்டங்களை எடுத்து ஏமாற்றம் அளித்தார். இந்திய அணியின் நம்பிக்கை வீரரான டிராவிட்டும் 13 ஓட்டங்களை மாத்திரமே எடுத்தார். ரெய்னா வந்த வேகத்தில் ஓட்டம் ஒதுவும் பெறாத நிலையில் பெவிலியன் திரும்பினார்.

நான்காம் நாள் ஆட்ட நேர முடிவின்போது இந்திய அணி 55 ஓட்டங்களை எடுத்திருந்தது. இந்திய அணி வீரர்களான சச்சின் (10), சகீர் கான் (5) ஆகியோர் களத்திலிருந்தனர். டெஸ்ட் போட்டியின் கடைசி நாள் ஆட்டம் இன்றாகும்.

## நடுவர்களின் தீர்ப்பால் டோனி ஏமாற்றம்

நேற்றுமுன்தினம் இந்திய அணித் தலைவர் டோனி 14 ஓட்டங்களை எடுத்திருந்தபோது ஜோன்சனின் பந்தை எதிர்கொண்டார். பந்து துடுப்பு மட்டையில் பட்டு பின்நோக்கிச் சென்றது. அங்கிருந்த வாட்ஷன் பந்து தரையில் பட்ட பின்னர் பிடித்தார். ஆனால் இரண்டு நடுவர்களும் கலந்துபேசி, மூன்றாவது நடுவரிடம் முறையிட அவரும் அவசரப்பட்டு, ஆட்டமிழந்திருப்பதாக அறிவித்தார். டோனி சோகத்துடன் வெளியேறினார். ஆனால் ரி.வி மறு ஒளிபரப்பில் பந்து தரையில் பட்டுச்சென்றது தெளிவாகத் தெரிந்தது.



சீன ஓப்பின் டெனிஸ் தொடரின் ஒற்றையர் பிரிவுப் போட்டியில் பல்கேரியா நாட்டு வீராங்கனை பிரன்கோவாவை முதல் சுற்றில் வெற்றி கண்டார் ரஷ்யாவின் மரியா ஷரபோவா.

## ஆஸி.அணிக்கு எதிரான ஒருநாள் தொடர் இலங்கை அணியில் முரளியும் தெரிவு

கொழும்பு, ஒக்.5

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள், 'ருவென்ரி-20' தொடரில் பங்கேற்கும் இலங்கை அணியில், சுழற்பந்துவீச்சாளர் முத்தையா முரளிதரனுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலிய சுற்றுப்பயணம் செய்ய உள்ள இலங்கை அணி, ஒரு 'ருவென்ரி-20' மற்றும் 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. 'ருவென்ரி-20' போட்டி வரும் 31ம் திகதி பெர்த்தில் நடக்கிறது. மூன்று ஒருநாள் போட்டிகள் முறையே மெல்போர்ன் சிட்னி பிரிஸ்பேன் நகரங்களில் நடக்கிறது. இதற்கு முன் இலங்கை அணி, குயின்ஸ்லாந்து, நியூ சவுத் வேல்ஸ் உள்ளிட்ட உள்ளூர் அணிகளுடன் ஒருநாள் பயிற்சி போட்டியில் விளையாடுகிறது.

இத்தொடருக்கான 16 பேர் கொண்ட வீரர்களை, இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்தது. இதில் டெஸ்ட் அரங்கில் 800 விக்கெட் வீழ்த்தி உலக சாதனை படைத்து, ஓய்வுபெற்ற சுழல் மன்னன் முத்தையா முரளிதரன் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இவர் சமீபத்தில் இந்தியா-நியூசிலாந்து-இலங்கை அணிகள் பங்கேற்ற முத்தரப்பு ஒருநாள் தொடரில் விளையாடவில்லை. அடுத்த ஆண்டு நடக்கவுள்ள உலக கோப்பை (50 ஓவர்) கிரிக்கெட் தொடரை கருத்தில் கொண்டு, இம்முறை இவர் தேர்வு செய்யப்பட்டிருக்கலாம் எனத் தெரிகிறது.

இலங்கையில் சங்கக்கரா (கேப்டன்), ஜெயவர்தன, தில்ஷன், உபுல் தரங்க, சமரசில்வா, ஜீவன் மெண்டிஸ், மாத்யூஸ், கபுகேதரா, பெரேரா, மலிங்க, குலசேகர, பெர்ணான்டோ, முரளிதரன், ரந்திவ், தமிகா பரசாத், திணேஷ் சாண்டிமல் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ஐ)

**விளையாட்டு அரங்குகளில்**

# விமர்சனங்களைத் தகர்த்தெறிந்த கொமன்வெல்த் ஆரம்ப நிகழ்வு

புதுடில்லி, ஒக். 05

உலகமே வியக்கும் அளவுக்கு, டில்லியில் கொமன்வெல்த் போட்டிகளின் ஆரம்ப விழா கோலாகலமாக நடந்தது. இதற்காக, இந்தியத் தலைநகம் டில்லியில் உச்சக்கட்ட பாதுகாப்புக்கு ஏற்பாடுகள்செய்யப்பட்டிருந்தன. இராணுவத்தினர் உட்பட சுமார் 1 இலட்சம் பேர் பாதுகாப்பு அரணாகச் செயற்பட்டு, இந்தியாவுக்குப் பெருமை சேர்த்தனர்.

டில்லியில் 19ஆவது கொமன்வெல்த் போட்டிகள் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகின. எதிர்வரும் 14ஆம் திகதி முடிவடைகின்றன. மொத்தம் 12 நாள்கள் நடக்கும் இப்போட்டிகளில், 71 நாடுகளைச் சேர்ந்த சுமார் 8,500 வீரர், வீராங்கனைகள் பங்கேற்கின்றனர். இந்தியாவின் சார்பில் விஜேந்தர், சானியா, செய்னா ஆகியோர் உள்ளிட்ட நட்சத்திரப் படை களமிறங்குகிறது.

நேற்றுமுன்தினம் இரவு 7 மணி அளவில் ஜவகர்லால் நேரு மைதானத்தில் ஆரம்ப விழா வண்ணமயமாக நடந்தது. இதில் ஜனாதிபதி பிரதிபா பாட்டீல், இளவரசர் சார்ள்ஸ், பிரதமர் மன்மோகன் சிங் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். முதலில் இந்தியத் தேசிய கீதம் இசைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து சங்கொலி மற்றும் 'மெகா' முரசு முழங்க, மேளதாளத்துடன் விழா ஆரம்பமாகியது. இதனைத் தொடர்ந்து ஒரிசாவின் டோலக், கேரளாவின் செண்டை மேளம் என நாட்டின் பாரம்பரியமிக்க இசை நிகழ்ச்சிகள் நடந்தன. ஏழு வயதான இளம் கேசவ் நிகழ்த்திய 'தபலா' இசை அனைவரையும் கவர்ந்தது. 'ஸ்வாகதம்' என்ற வணக்கப் பாடலை, டில்லி பள்ளிக் குழந்தைகளுடன் சேர்ந்து ஹரிஹரன் பாடினார்.


**பந்த்ராவுக்கு பெருமை:**

தொடர்ந்து நடந்த அணிவகுப்பில், இந்தியக் குழு சார்பில் மூவர்ணக் கொடியை 'ஒலிம்பிக் தங்க நாயகன்' அபினவ் பந்த்ரா ஏந்திவந்தார். அப்போது ஜனாதிபதி பிரதீபா பாட்டீல், இளவரசர் சார்ள்ஸ், பிரதமர் மன்மோகன் மற்றும் அரங்கில் இருந்த 60 ஆயிரம் ரசிகர்கள் எழுந்து நின்று உற்சாக கரகோஷம் எழுப்பினர்.

**பலத்த பாதுகாப்பு:**

இம்முறை பல்வேறு சர்ச்சைகளைக் கடந்து போட்டிகள் நடக்கவிருப்பதால், டில்லி முழுவதும் பலத்த பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பயங்கரவாதிகளின் அச்சுறுத்தலைச் சமாளிப்பதற்காக, சுமார் 1 இலட்சம் பேர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர். விளையாட்டுக் கிராமம் அமைந்துள்ள பகுதியில் ஹெலிக்கொப்ரர்களில் பறந்தவாறு, படையினர் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர். போட்டி நடக்கும் மைதானங்கள், சுற்றுலாத் தலங்கள் உள்ளிட்ட முக்கிய பகுதிகளில் இரகசிய கமராக்கள் பொருத்தப்பட்டு, டில்லி பொலிஸ் தலைமையகத்தில் இருந்தவாறு 24 மணி நேரமும் கண்காணிப்புப் பணிகள் நடந்தவண்ணம் இருந்தன.

ஆரம்ப விழா நடந்த ஜவர்கலால் நேரு மைதானம் பாதுகாப்புக் கோட்டையாக மாறியிருந்தது. நான்கு அடுக்கு பாதுகாப்புக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ரசிகர்கள் முழுமையான சோதனைக்குப் பின் மைதானத் திற்குள் அனுமதிக்கப்பட்டனர். எங்கு பார்த்தாலும் பாதுகாப்புப் படையினர் தான் காணப்பட்டனர்.



ஆரம்ப நிகழ்வில் இடம்பெற்ற கலைக் கண்காட்சி

மொத்தத்தில் இந்தியா தொடர்பான விமர்சனங்களை, மிகப் பிரம்மாண்டமான ஆரம்ப விழா தகர்த்தெறிந்தது. இவ்விழாவை இந்தியா சிறப்பாக நடத்தியதன் மூலம், உலக நாடுகள் மத்தியில் இந்தியாவின் கௌரவம் உயர்ந்துள்ளது.

**வீரர்களுடன் இளவரசர் சார்லஸ்**

கொமன்வெல்த் விளையாட்டு கிராமத்திற்குச் சென்ற இளவரசர் சார்ள்ஸ், வீரர்களுடன் உரையாடினார். இங்கிலாந்து, ஆஸ்திரேலியா உள்ளிட்ட பல நாடுகளின் வீரர்கள் அவரிடம் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

கொமன்வெல்த் போட்டிகளில் பங்கேற்கும் வீரர்கள் தங்குவதற்காக, விளையாட்டுக் கிராமம் நிர்மாணிக்கப்பட்டது. ஆனால் இது சுகாதாரமற்ற முறையில், தங்குவதற்கு வசதியில்லாமல் உள்ளது என, இங்கிலாந்து, நியூஸிலாந்து உட்படப் பல நாடுகள் எதிர்ப்புத் தெரி வித்திருந்தன.

பின்னர் தாமதமான பணிகள் அதிவேகமாக நிறைவு செய்யப்பட்டன. தவிரவும் கொமன்வெல்த் விளையாட்டு வரலாற்றில், முதன் முறையாக விளையாட்டுக் கிராமத்துடன் சேர்ந்து, வீரர்கள் பயிற்சி மையமும் அமைக்கப்பட்டுள்ளது. இதில் தபால் அலுவலகம், வங்கி, விடுதிகள், மதுபானக் கடைகள், ஹோட்டல்கள், ஜிம், கைவினைப் பொருள்களை விற்பனை செய்யும் கடைகள், மர வேலைப்பாடுகளால் ஆன சிற்பங்கள் விற்பனை ஆகியன உட்படப் பல வசதிகள் இங்குள்ளன. இங்கு 71 நாடுகளைச் சேர்ந்த ஆராயிரத்தும் மேற்பட்ட வீரர்கள் தங்கியுள்ளனர்.

இந்நிலையில் இளவரசர் சார்ள்ஸ், நேற்றுமுன்தினம் விளையாட்டுக் கிராமத்துக்குச் சென்றார். அங்கு வீரர்களுடன் அவர் உரையாடினார். அப்போது இங்கிலாந்து உள்ளிட்ட பல நாடுகளின் வீரர்கள், சார்ள்ஸிடம் தங்கள் மகிழ்ச்ச்சியைத் தெரிவித்தனர்.

## தங்கள் மீதான தடையை நீக்குமாறு பாகிஸ்தான் வீரர்கள் மேன்முறையீடு

லாகூர், ஒக். 05

கிரிக்கெட் சூதாட்டத்தில் ஈடுபட்டவர் என்ற குற்றச்சாட்டினால், சர்வதேசப் போட்டிகளில் விளையாட ஐ.சி.சியால் தடைவிதிக்கப்பட்டிருக்கும் வேகப்பந்து வீச்சாளர்களான முகமது அசிப், முகமது அமீர் ஆகியோர் மேன்முறையீடு செய்துள்ளனர்.

இங்கிலாந்துக்கு எதிரான கடைசி டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர்களான முகமது அசிப், முகமது அமீர் ஆகியோர் 'ஸ்பொட் பிக்சிங்' என்ற வகையான சூதாட்டத்தில் ஈடுபட்டனர் எனவும், அதற்கு அணித் தலைவர் சல்மான் பட் உடந்தையாக இருந்தார் என்றும் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதைத் தொடர்ந்து ஸ்கொட்லன்ட் யார்ட் பொலிஸார் 3 வீரர்களிடமும் விசாரணை நடத்தினார்கள். இதைத் தொடர்ந்து பாகிஸ்தான் வீரர்கள் 3 பேரையும் சர்வதேசப் போட்டிகளில் விளையாட ஐ.சி.சி. இடைக்காலத் தடை விதித்தது. இத் தடையை எதிர்த்து சல்மான் பட் முதலில் மேன்முறையீடு செய்திருந்தார்.

இந் நிலையில் முகமது அசிப், முகமது அமீர் ஆகியோரும் சர்வதேச கிரிக்கெட் சபையின் ஊழல் தடுப்புப் பிரிவினரிடம் தங்கள் மீதான தடையை விரைந்து விசாரித்து ரத்துச் செய்யும்படி மேன்முறையீட்டு மனுவைத் தாக்கல் செய்துள்ளனர். இருவரும் தனித்தனி சட்டத் தரணிகள் மூலம் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

## தவறிவிட்டது

காணி உறுதிகள் (மூலப்பிரதிகள்) மூன்று கடந்த 22 ஆம் திகதி யாழ்ப்பாணம், பலாலி வீதியில் தொலைந்துவிட்டன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் தொலைபேசிகளுடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் தரப்படும். 0112506811, 0755001211, 0716419050

## ஜனஜய லொத்தர்

உத்தியோகப்பூர்வ முடிவுகள்

வாரம் 165 | சீட்டிழுப்புத் திகதி 03.10.2010

வெற்றி இலக்கங்கள்: 31 40 41 62 | சுப்பர் இலக்கம்: 12

சுப்பர் பரிசுப்பொதி — ரூ. 5,643,650/=

| வெற்றி இல. | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏதேனும் 1 இலக்கத்துக்கும் | 86490 | ரூ. 20/= | ரூ. 1,729,800/= |
| சுப்பர் இலக்கத்துடன் ஏதேனும் 1 இலக்கத்துக்கும் | 7730 | ரூ. 40/= | ரூ. 309,200/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏதேனும் 2 இலக்கங்களுக்கும் | 6696 | ரூ. 100/= | ரூ. 669,600/= |
| சுப்பர் இலக்கத்துடன் ஏதேனும் 2 இலக்கங்களுக்கும் | 631 | ரூ. 200/= | ரூ. 126,200/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏதேனும் 3 இலக்கங்களுக்கும் | 152 | ரூ. 1,500/= | ரூ. 228,000/= |
| சுப்பர் இலக்கத்துடன் ஏதேனும் 3 இலக்கங்களுக்கும் | 8 | ரூ. 3,000/= | ரூ. 24,000/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏதேனும் 4 இலக்கங்களுக்கும் | 1 | ரூ. 1,000,000/= | ரூ. 1,000,000/= |
| சுப்பர் இலக்கத்துடன் ஏதேனும் 4 இலக்கங்களுக்கும் | | ரூ. 56,43,650/= | |
| மொத்த எண்ணிக்கை | 101708 | | ரூ. 4,086,800/= |

வியாழக்கிழமை சுப்பர் பரிசுப்பொதி ரூ. 5,906,000/= உட்பட வரிவிலக்கற்ற புதிய மோட்டார் வாகனமும் அதன் மிகுதிப்பணமும்

அபிவிருத்தி லொத்தர் சபை
356 சுவாதீந்தி கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02. தொலைபேசி: 2 333 546 - 47 தொலைநகல்: 2 333 545
Website: www.dlb.lk

Purview of JOBSNET
Ministry of Labour Relations and Productivity Promotion

20 வருட அனுபவம் | - தபால் மூலம் - தமிழ் மொழி மூலம் | ஆறு மாத கால டிப்ளோமா Course Length - Six Month Sep 2010 to Feb 2011

~ Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
~ Dip. in Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
~ Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Sales & Marketing Management
விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Health & Hospital Management
சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்
கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு, ஹட்டன், அனுராதபுரம் மற்றும் நுவரேலியா.

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர்,முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile: 0777 140 844 / 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:
Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)
ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1st Floor, Supermarket Complex, Main Street, Sainthamaruthu-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி :10.10.2010

## மஹஜன சம்பத

அலுவலக முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2300 திகதி 03.10.2010

வெற்றி எழுத்து: S | வெற்றி எண்கள்: 0 3 5 8 2 2

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| பரிசு | | | | | | | | | தொகை | | எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | S | 0 | 3 | 5 | 8 | 2 | 2 | ரூபா. | 14,617,691/= | பரிசு | - |
| 1ம் பரிசுகள் | | 0 | 3 | 5 | 8 | 2 | 2 | ரூபா. | 20,00,000/= | பரிசுகள் | 01 |
| 2ம் பரிசுகள் | | | 3 | 5 | 8 | 2 | 2 | ரூபா. | 100,000/= | பரிசுகள் | 09 |
| 3ம் பரிசுகள் | | | | 5 | 8 | 2 | 2 | ரூபா. | 10,000/= | பரிசுகள் | 66 |
| 4ம் பரிசுகள் | | | | | 8 | 2 | 2 | ரூபா. | 1,000/= | பரிசுகள் | 694 |
| 5ம் பரிசுகள் | | | | | | 2 | 2 | ரூபா. | 100/= | பரிசுகள் | 6964 |
| 6ம் பரிசுகள் | | | | | | | 2 | ரூபா. | 20/= | பரிசுகள் | 68435 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| பரிசு | | | | | | | | | தொகை | | எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7ம் பரிசுகள் | | 0 | 3 | 5 | 8 | 2 | | ரூபா. | 10,000/= | பரிசுகள் | 07 |
| 8ம் பரிசுகள் | | 0 | 3 | 5 | 8 | | | ரூபா. | 1,000/= | பரிசுகள் | 72 |
| 9ம் பரிசுகள் | | 0 | 3 | 5 | | | | ரூபா. | 100/= | பரிசுகள் | 694 |
| 10ம் பரிசுகள் | | 0 | 3 | | | | | ரூபா. | 50/= | பரிசுகள் | 6893 |
| 11ம் பரிசுகள் | S | | | | | | | ரூபா. | 20/= | பரிசுகள் | 27401 |

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. 14,672,981.00

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 7,423,170.00
ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கும் வளமான நாட்டிற்கும்
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000 Hotline:2433631
முடிவுகளை அறிய www.nlb.lk


## வெங்காயச் செய்கை மோசமாகப் பாதிப்பு

கோப்பாய், ஒக். 5

கடந்த வாரம் பெய்த தொடர் மழை காரணமாக கோப்பாய், நீர்வேலி பிரதேச விவசாயிகளின் வெங்காயச் செய்கை மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. விளை நிலங்களில் வெள்ளம் தேங்கி நிற்பதால் வெங்காயம் அழிவடையும் நிலை ஏற்பட்டுள்ளது.

விவசாயிகள் சிலர் ஓரளவு முற்றிய வெங்காயங்களை அவசர அவசரமாக அறுவடைசெய்து பெரும் பிரயத்தனத்தின் மத்தியில் அவற்றைப் பாதுகாப்பதில் ஈடுபட்டுள்ளனர். (ஒ-72)

## அரச ஊழியர்களுக்கு பருத்தித்துறையில் இருந்து ஆழியவளைக்குப் பஸ் சேவை

யாழ்ப்பாணம், ஒக்.5

வடமராட்சியிலிருந்து ஆழியவளை வரையான அரச உத்தியோகத்தர்களுக்கான இ.போ.ச. பஸ் சேவை (755 மார்க்க) நாளை புதன்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய முகாமையாளர் கே.கணேசபிள்ளை அறிவித்துள்ளார்.

அரச உத்தியோகத்தர்களுக்கான இந்த பஸ் சேவை நாளை முதல் தினமும் காலை 6.30 மணிக்கு பருத்தித்துறை பஸ் நிலையத்தில் இருந்து புறப்பட்டு நெல்லியடி, கொடிகாமம், புதுக்காட்டுச் சந்தி ஊடாக ஆழியவளை வரை சேவையில் ஈடுபடவுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஒ-16)


## வேலையாள்கள் தேவை

சுன்னாகத்தில் இயங்கும் அழகு சாதனப் பொருள்கள் விற்பனை நிலையத்திற்கு பின்வரும் தகைமையுடைய பணியாளர்கள் தேவை.
சாரதி [AD சாரதி அனுமதிப்பத்திரம் அவசியம் ]
கணக்காளர் A/L வர்த்தகப் பிரிவில் சித்தியடைந்திருக்க வேண்டும்.
பணியாளர்கள் [ O/Lசித்தி ]
வலி.வடக்கு, வலி.தெற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். தொடர்பு:-0772396810

## விற்பனைக்குண்டு

14 அடி நீளம் கொண்ட புதிய அசோக் லேடன் ஹன்டர் வாகனத்தின் (E comet 912 ) அரை பொடி விற்பனைக்குண்டு. தொடர்பு:-0773150842

## விற்பனையாளர்கள் தேவை

புடைவை வியாபாரம் பழக விரும்பும் or அனுபவமுள்ள பெண் விற்பனையாளர்கள் தேவை.
நியூ அபிராமி புடைவையகம்
155,156,மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். தொடர்பு:-0773086894 (104194)


## ஆசிரியர் தினவிழா

யாழ்ப்பாணம், ஒக். 5

யாழ்.நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் மாணவத் தலைவர் க.பிரதீப் தலைமையில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலை ‘எல்’ மண்டபத்தில் ஆசிரியர் தின விழா நடைபெறவுள்ளது.

இவ் விழாவுக்கு பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலர் சி.சத்தியசீலன் கலந்துகொள்வார்.

* * *

கோப்பாய், ஒக். 5

கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலய ஆசிரியர் தின விழா நாளை புதன்கிழமை மு.ப. 9 மணிக்கு பாடசாலை அபிவிருத்திச் செயலாளர் த.ஸ்ரீமுரளிதரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பழைய மாணவரான யாழ்.மாவட்டச்செயலகப் புள்ளிவிவர உத்தியோகத்தர் து.ஸ்ரீதரன் கலந்துகொள்வார். (ஒ-72)


## தேவை

பயிற்றப்பட்ட தாதி உத்தியோகத்தர் தேவை. நேரடியாக, சான்றிதழ்களுடன் வரவும்.
CENTRAL NURSING HOME (Pvt.) Ltd.
350, Palaly Road, Jaffna.
தொ.பே. 021 222 2263


## கண்ணீர் அஞ்சலி



முன்னாள் கிராம சபைத் தலைவரும் எமது கல்லூரியின் விளையாட்டு மைதான அபிவிருத்தி நிதிய உறுப்பினரும் பாடசாலையின் அபிவிருத்தியில் பெரும் பங்காற்றியவருமான

**ச.முத்துலிங்கம்**

அவர்கள் இறைபதம் அடைந்துள்ளார். அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அவரது குடும்ப உறுப்பினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்

இணுவில் விளையாட்டு மைதான அபிவிருத்தி நிதியம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

யா/ இணுவில் மத்திய கல்லூரி. (104188)

## கண்ணீர் அஞ்சலி



கட்டுவன், தெல்லிப்பழையை சொந்த இடமாகவும் கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட Dr. சுரேஷ்குமார் (பெண் நோயியல் மகப்பேற்று வைத்தியநிபுணர், யாழ். போதனா வைத்தியசாலை) அவர்களின் அன்புத் தந்தையார்

**கந்தையா குலசிங்கம்**

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

புதிய யாழ் வைத்தியசாலை,
பலாலி வீதி,
திருநெல்வேலி.

வைத்தியர்களும்,
நிர்வாகியும், ஊழியர்களும் (அ/571593)


MEDECINS SANS FRONTIERES

## மொழிபெயர்ப்பாளருக்கான வெற்றிடம் கிளிநொச்சி

வரையறையற்ற வைத்தியர்கள் - ஒல்லாந்து (எம்.எஸ்.எப்-கொலண்ட்) ஒரு சர்வதேச அரச சார்பற்ற நிறுவனம். இந் நிறுவனமானது மக்களுக்கு அத்தியாவசியமான வேளைகளில் மனிதனால் அல்லது இயற்கையால் ஏற்பட்ட அழிவுகளினால் துன்புறுபவர்களுக்கும் ஆயுத வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் மருத்துவ உதவியை சாதி, சமய, இன மற்றும் அரசியல் இணக்கப்பாடின்றி வழங்கி வருகின்றது. கீழே குறிப்பிட்டுள்ள பதவிக்கு தகுதியான ஒருவரை எதிர்பார்க்கின்றோம்.

மொழிபெயர்ப்பாளர் - கிளிநொச்சி

பொறுப்புகள்:

வரையறையற்ற வைத்திய ஊழியர்களுக்கு எழுத்துமூலமாகவும் வாய்மூலமான மொழிபெயர்ப்பினை வழங்கவேண்டும்.

தேவையானவைகள.

★ ஆங்கிலம் மற்றும் தமிழ்(தேவைப்படுவது) மொழிகளில் நல்ல கட்டளை; சிங்களம் (அதி விரும்பக்கூடியது).
★ ஆங்கிலம் மற்றும் தமிழ்(தேவைப்படுவது) மொழிகளில் எழுத வாசிக்ககூடியவராகவும், சிங்களம் (விரும்பக்கூடியது).
★ MS Office (word/Excel) இல் அடிப்படை அறிவு.
★ மொழி பெயர்ப்புடனான அனுபவம்.
★ நல்ல சமூக சம்பந்தமான மற்றும் நல்ல தொடர்பாடல் திறமைகள்.
★ பல கலாச்சார மற்றும் பல ஒழுக்கமுள்ள குழுவின் பகுதியாக செயல்படும் திறமை.
★ கிளிநொச்சியில் வசித்தல் அல்லது வசிப்பதற்கு விரும்புதல்.
★ உளவளத் துறையில் அனுபவம் உள்ளவராக இருக்கவேண்டும்.
★ MS office ஐ பாவித்து தமிழில் மொழிபெயர்க்க கூடியவராக இருக்கவேண்டும்.

இந்த பதவியில் ஆர்வம் இருப்பின் தயவுசெய்து உங்களுடைய சுருக்கமான சுயவிரைக்கோவையை 8/10 திகதிக்கு முன்பாக அனுப்பவும்:
வரையறையற்ற வைத்தியர்கள் - ஒல்லாந்து
49/44A கோயில் வீதி, குருமன்காடு,
வவுனியா.
தொலை நகல்: (94) 024 222 0381
அல்லது இணைய அஞ்சலுக்கு:
msfh-kilinochchi-pc@field.amsterdam.msf.org.

தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் நேர்முகத்தேர்விற்கு தொடர்புகொள்ளப்படுவர் முடிவு திகதியில் இருந்து ஒரு வார காலப்பகுதிக்குள் தொடர்புகொள்ளவில்லையெனின் இந்த நிலைக்கான விண்ணப்பதாரி தெரிவுசெய்யப்பட்டுள்ளார் என பொருட்படும்.




from Rs. 8900/=
•Smarter •faster •thinner
ecity
338A, Kasthuriar Road, Jaffna.
Authorised Dealer for DELL
intel Core i5
for inquiries
0777286003 / 0212228147
NISA Graphics

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/ தேவரையாளி இந்துக் கல்லூரியின் மாணவியும் எமது அன்புக்கும் மதிப்புக்குமுரியவர்களான

திரு.திருமதி யோ.சிவகரன் - மேகலா தம்பதியரின் ஏக புதல்வியுமான

**சிவகரன் திரன்ஜா**

148 புள்ளிகள் பெற்று புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தமையையிட்டு நாம் உளமார வாழ்த்துகின்றோம். அவர் மேன்மேலும் கல்வியில் மேம்பட்டு உயர எமது ஆசிகள்.

க.இராஜசேகர், மு.நவநேசன், ம.தெய்வீகன், சு.மகேஸ்வரன், க.கந்தசாமி, ம.செல்வேஸ்வரன்

அல்வாய் வடமேற்கு, அல்வாய். (101790)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### செல்வி சிறிரங்கன் கீர்த்திகா

(யா/ வதிரி வடக்கு மெ.மி.த.க. பாடசாலை மாணவி அல்வாய்)



ஊறணி வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சிறிரங்கன்-புவனேஸ்வரி தம்பதியரின் செல்வப்புதல்வி S.கீர்த்திகா 2010 தரம் 5புலமைப் பரீட்சையில் உயர்புள்ளி 166 பெற்று பாடசாலையில் முதலாம் இடத்தினையும் யாழ். மாவட்டநிலை 119ஆவது இடத்தினையும் பெற்றமையினையிட்டு பெருமை அடைகின்றோம். கீர்த்திக்குட்டி இன்னும் பல பெறுபேறுகளைப்பெற்று சிறப்படைய வேண்டுமென்று மனதார வாழ்த்துகின்றோம்.

பாராட்டி வாழ்த்துவோர்:

கனடாவிலுள்ள பெரியப்பா சிறிதரன், பெரியம்மா யோகரஞ்சினி, அண்ணாமார் நிஷாந்தன், சாருஜன், கரன் சித்தப்பா, அம்மம்மா, கமலாவதி குடும்பம், மாமாமார் குடும்பம், திருமதி சின்னத்தம்பி அம்மம்மா குடும்பம், மாமாமார், மற்றும் அப்பப்பா சின்னவன், அப்பம்மா கனகம்மா, சித்தப்பாமார், அத்தைமார், அம்மம்மா, வரன் மாமா.

மொன்றியல், கனடா. (101988)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2010 தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் 172 புள்ளிகளைப் பெற்று திரு. திருமதி சிவநேசன் -பிறேமாதேவி தம்பதியரின் செல்வப் புதல்வன்

**சிவநேசன் யதுர்சன்**

(யா/நெல்லியடி, மெ.மி.த.க. பாடாசலை)

அவர்கள் சித்தியடைந்ததையிட்டு அவரை வழிநடத்திய அதிபர் மற்றும் ஆசிரியர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு அவர் கல்வியுலகில் மேன்மேலும் சாதனையீட்ட எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர் :

அப்பம்மா, மாமா, அத்தை, மச்சான் மார், முடக்காடு, நெல்லியடி, கரவெட்டி. (வ/5715598)

## காரைநகர் மக்களுக்கு நாளை விதைநெல்

காரைநகர்,ஒக்.5

காரைநகர் பிரதேச உயர்பாதுகாப்பு வலயத்தில் உள்ள விவசாயக் காணிகளில் நெல் பியிரிடும் விவசாயிகளுக்கான விதை நெல் விநியோகம் நாளை புதன்கிழமை இடம்பெறவுள்ளது.

விவசாயத் திணைக்களத்தின் அனுசரணையுடன் காரைநகர் தெற்கு, காரைநகர் தென்கிழக்கு, காரைநகர் வடகிழக்கு ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த பயனாளிகளுக்கு காரைநகர் தங்கோடை கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் வைத்து இந்த விதைநெல் விநியோகம் இடம்பெறவுள்ளது. (ஒ-250)

**SHAM ROCK**
ஈச்சமோட்டை - யாழ்.
* A/L கலை, வர்த்தக, கணித, விஞ்ஞானப் பிரிவுகளுடன் ஆங்கிலம், GIT.
A/L-2011 Parer Class
* கிறிஸ்தவம்
ஆரம்பம் : Wed 6.10.2010 - 4.30 P.m
யூட் B.A (Hons)
* Gr.1 முதல் O/L வரை
* English medium 6-11
* Eng.Lit - 10,11
* I.C.T, சிங்களம்

## கண்ணீர் அஞ்சலி

பெண் நோயியல் மகப்பேற்று வைத்திய நிபுணர் Dr. K. சுரேஸ்குமார் அவர்களின் அன்புத் தந்தை



**கந்தையா குலசிங்கம்**

அவர்களின் மறைவால் துயர் உற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

உரிமையாளரும், ஊழியர்களும்,
அம்பிகா டிஸ்பென்சறி,
சாவகச்சேரி. (104193)

**Sales girls தேவை**

பிரபல புடைவை நிறுவனம் ஒன்றுக்கு Sales girls தேவை. பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம். மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. தொடர்பு :0772850753

**விற்பனைக்கு**

தரமான புத்தம் புதிய ரக்டர் பெட்டி, 31 h.p, பிளக்சோன், 6 h.p லிஸ்டர் எஞ்சின்கள், வாழைக் குட்டிகள், நல்லின தென்னை நாற்றுகள் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு:-0774047912

**Great Way & Great Achievement**

சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட எமது World Wide நிறுவனத்தில் O/L, A/L சித்திபெற்ற துடிப்புள்ள இளைஞர், யுவதிகளுக்குச் சர்வதேசத்திலும், உள்நாட்டிலும் தொழிற்பயிற்சியைப் பெற்று உயர் தொழில் வாய்ப்பைப் பெற ஓர் அரிய வாய்ப்பு. சம்பளம் தகைமை அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

*Contact :-* Udayarajan,
0717494735, 0214915550

## பாராட்டி வாழ்த்துகிறோம்







எமது பாடசாலையின் அதிபர் மதிப்புக்குரிய திருவாளர் **சிவசிதம்பரம் நற்குணலிங்கம்** ஆசிரியரான திருவாளர் **சிவஞானம் சிவகாந்தன்** ஆகியோர் நாளை யாழ்.பல்கலைக் கழகத்தில் இடம்பெற இருக்கும் பட்டமளிப்பு விழாவில் குடித்தொகை அபிவிருத்தி கல்விசார் முதுகலைமாணி (M.A. -merit pass) பட்டத்தினையும், ஆசிரியர் திருவாளர் **கணேஸ் உதயரூபன்** முதுகல்விமாணி (M.Ed - merit pass) பட்டத்தினையும் பெறுவதனை இட்டும் மகிழ்வடைவதோடு மேலும் பல பட்டங்களைப் பெற்று பலஉயர் பதவிகளை வகிக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகிறோம்.

கல்லூரிச் சமூகம்,
யா/ சிதம்பராக்கல்லூரி, வல்வெட்டித்துறை.

(101792)

## மரண அறிவித்தல்கள்

### நாகலிங்கம் தனபாலன்



வயாவிளானைப் பிறப்பிடமாகவும் சுவிட்சர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் தனபாலன் நேற்று (04.10.210) திங்கட்கிழமை சுவிஸில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற நாகலிங்கம் - மற்றும் சின்னம்மாவின் இளைய மகனும் புஸ்பசீதாலட்சுமியின் அன்புக் கணவரும் விபிஷன், ஆதவன் ஆகியோரின் அன்புத் தந்தையும் தர்மபாலன், குணபாலன், நளாயினி, நந்தினி, நளினி, மாலினி, குமுதினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் செல்லத்துரை, சரஸ்வதி ஆகியோரின் மருமகனும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"வயவை இல்லம்",
கோண்டாவில் கிழக்கு,
பலாலி வீதி,
கோண்டாவில்.
தொ.பே.இல : 0214591180

தகவல் :
சிவலிங்கம் (மைத்துனர்),
நந்தினி (சகோதரி).

(104198)

### திருமதி பராசக்தி செல்வரத்தினம் (சொக்காமாமி)



சுதுமலையைப் பிறப்பிடமாகவும் ஈவினையை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட திருமதி பராசக்தி செல்வரத்தினம் நேற்று முன்தினம் (03.10.2010) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் செல்வரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - பொன்னம்மா தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் தெய்வநாயகி, காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் பாஸ்கரன், காலஞ்சென்ற பாலகிருஷ்ணன் மற்றும் விமலாதேவி, பாலேந்திரன், காலஞ்சென்ற பாலச்சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் திருமதி இரத்தினம் சத்தியதாஸன் (அவுஸ்திரேலியா) காலஞ்சென்ற இரத்தினகோபால் மற்றும் தனலக்சுமி, தனேஸ்வரி, சிவனேஸ்வரி, குமாரகுலசிங்கம், றஞ்சனாதேவி, இந்திராணி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் சத்தியவான் (அவுஸ்திரேலியா), சத்தியேந்திரா (அவுஸ்திரேலியா), சத்தியவாணி (அவுஸ்திரேலியா), சத்தியநிதி (அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற தனுசா மற்றும் Dr.றமணன், கார்த்திகா (4ஆம் வருட மருத்துவபீட மாணவி, யாழ்.பல்கலைக் கழகம்), ஜனகன் (3ஆம் வருட பொறியியல் பீட மாணவன் - மொறட்டுவ பல்கலைக்கழகம்), யாழினி (தேசிய கல்வியியற் கல்லூரி, மட்டக்களப்பு), பாழினி, விசாகன் ஆகியோரின் பாசமிகு மாமியும் உதயகுமார், சிவகுமார், ஜெயக்குமார் ஆகியோரின் அன்புச் சிறிய தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (06.10.2010) புதன் கிழமை ஈவினையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நண்பகல் 12 மணியளவில் ஈவினை விலங்கன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

"தாயகம்"
ஈவினை மத்தி,
ஈவினை.

தகவல்:
கணவர் -
சி.செல்வரத்தினம்.

(104179)

### கந்தையா குலசிங்கம்



கட்டுவன், தெல்லிப்பழையைச் சொந்த இடமாகவும் கொக்குவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா குலசிங்கம் (ஓய்வுபெற்ற பிரதம எழுதுவினைஞர், பிரதேச செயலகம், உடுவில்) நேற்றுமுன்தினம் (03.10.2010) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் கந்தையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கதிரித்தம்பி சுப்பிரமணியம் - சிவஞானவதி தம்பதியரின் அன்பு மருமகனும் குணஞானவதியின் (ஓய்வுபெற்ற பிரதம மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்) அன்புக் கணவரும் காலஞ் சென்ற சிவபாதசுந்தரம் மற்றும் தவமணி நாகலிங்கம், காலஞ்சென்ற பொன்மலர் நல்லையா மற்றும் தர்மபூபதி சிவராஜா, பாலசிங்கம், இரட்ணசிங்கம், இராஜசிங்கம், அன்னலக்ஷ்மி சண்முகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற ராஜ்குமார் மற்றும் ஷகிலா, Dr.சுரேஷ்குமார் (பெண் நோயியல் மகப்பேற்று வைத்திய நிபுணர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் நகுலேந்திரன், வாசுகி (ஆசிரியை, யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் நிகாஷ், ராகவி, துவாரகி, மயூரகி ஆகியோரின் பாசமிகு பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.10.2010) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லமான 15, சம்பியன் ஒழுங்கை, கொக்குவிலில் நடைபெற்று, பூதவுடல் மு.ப.11 மணிக்கு தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

15, சம்பியன் ஒழுங்கை,
கொக்குவில்.

தகவல் :
கு.சுரேஷ்குமார் (மகன்).

(104199)

## ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சை:

# இம்முறை கணிதம் பகுதி-II வினாத்தாளுக்கு விடையளிக்க அரை மணிநேரம் அதிகம்

யாழ்ப்பாணம், ஒக். 5

ஜி.சீ.ஈ (சா/த) பரீட்சையின் கணிதபாட பகுதி-II வினாத்தாளுக்கு மாணவர்கள் விடை எழுதுவதற்கான நேரம் 30 நிமிடங்களால் அதிகரிக்கப்பட்டுள்ளதாகக் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதுதொடர்பாக மேலும்தெரியவருவதாவது:

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்படுகின்ற ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையின் கணிதபாட வினாத்தாளுக்கு மாணவர்கள் விடை அளிப்பதற்கான நேரம் போதாதுள்ளதாகவும்-

இதனால் மாணவர்கள் பெரும் மன அழுத்தங்களுக்கு உள்ளாவதாகவும் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக இப் பரீட்சை வினாத்தாளின் பகுதி-II வினாத்தாள்களுக்கு விடைஅளிப்பதற்கான நேரம் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வினாத்தாளின் அமைப்பு, கேள்விகளின் தன்மையில் எவ்விதமாற்றமும் செய்யப்படமாட்டாது என்ற போதிலும் அதற்குரிய நேரம் அதிகரிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி விடயம் தொடர்பான சுற்று நிருபங்களும் மாதிரி வினாத்தாள்களும் ஒவ்வொரு வலயக்கல்வி அலுவலகங்களுக்கும் கல்வித்திணைக்களத்தால் அனுப்பப்பட்டுள்ளன.

இதுவரைகாலமும் பகுதி-II வினாத்தாள்களுக்கு விடையளித்த இரு மணித்தியாலங்கள் வழங்கப்பட்டு வந்தது. இந்த ஆண்டு முதல் (2010ஆம்) 2½ மணித்தியாலங்களாக நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை மேற்படி விடயம் தொடர்பாக அனைத்துப் பாடசாலை அதிபர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் பாடசாலை அதிபர்கள் தமதுபாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு உரிய அறிவித்தல்களை வழங்கி அதன்பின் சம்பவத்திரட்டுப் புத்தகத்தில் பதியுமாறு யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி.வேதநாயகம் கேட்டுள்ளார். (ஒ-16)

---

## சிறைக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெள்ளைக்கொடி தொடர்பான வழக்கு விசாரணைகள் நேற்று மேல் நீதிமன்றத்தில் இடம்பெற்றன.

இதன்போது சரத் பொன்சேகா சார்பில் ஆஜரான சட்டத்தரணி நளின் லதுவஹெட்டி சரத் பொன்சேகா அடைத்து வைக்கப்பட்டிருக்கும் சிறைச்சாலையில் தமிழீழ விடுதலைப் புலிச் சந்தேக நபர்களும் - பொன் சேகாவுக்கு எதிரானவர்களும் உள்ளனர். இவர்களால் அவரின் உயிரிக்கு ஆபத்து ஏற்படலாம். எனவே அவருக்கு விசேட பாது காப்பு வழங்கப்பட வேண்டும் என நீதிமன்றிடம் கோரிக்கை விடுத்தார்.

சட்டத்தரணி விடுத்த கோரிக்கை நீதிமன்றத்தால் பரிசீலனை செய் யப்பட்ட நிலையிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதேவேளை, சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியரான பிரெட்ரிகா ஜேன்ஸ் சாட்சியமளித்தார். அப்போது அவர் தெரிவித்தவை வருமாறு:-

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர்அத் தேர்தலில் வேட்பாளரான சரத் பொன்சேகாவின் வாழ்க்கைக் குறிப்பை தொகுப்பதற்காக அவரை செவ்வி காணத்திட்டமிட்டேன்.

அச்செவ்வியின் இறுதியில் போரின் கடைசிக் கட்டத்தில் என்ன நடந்தது என கேள்வியொன்றைக் கேட்டேன்.

அப்போது, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர்கள் குழுவொன்று சரணடைய வருவதாகவும் அவர்களை சரணடையவிடாமல் சுட்டுக்கொல்லுமாறு பிரிகேடியர் சவீந்திர சில்வாவுக்கு பாதுகாப்புச் செயலாளர் தொலைபேசி மூலம் உத்தரவிட்டார் எனத் தனக்கு தகவல் கிடைத்தது எனப் பொன்சேகா என்னிடம் கூறினார்.

அது பரபரப்பான தகவல் என்பதால் அதை அவ்வாறே சண்டே லீடர் பத்திரிகையின் தலைப்புச் செய்தியாக்குவதற்குத் தீர்மானித்தேன். அச்செய்தியை வெளியிடுவதற்கு முதல்நாள் சரத் பொன்சேகாவுடன் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு இது குறித்து தெரிவித்தேன்; அவர் பிரச்சினை இல்லை என்றார்.

இவ்விடயம் குறித்து பிரிகேடியர் சவீந்திர சில்வா மற்றும் அப்போதைய இராணுவப் பேச்சாளர் உதய நாணயக்கார ஆகியோரிடம் கேட்டபோது அவர்கள் இம் சம்பவத்தை நிராகரித்தனர்.

- இப்படி அவர் நேற்று மன்றில் தெரிவித்தார். இவ்வழக்கு மீண்டும் நாளை விசாரிக்கப்படவுள்ளது.

---

## பொன்சேகாவை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாலை 2.00 மணி முதல் 4 மணி வரை லண்டன் நகரிலுள்ள பிரிட்டிஷ் பிரதமரின் இல்லத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

சரத் பொன்சேகாவை விடு தலை செய்யக் கோரி கடந்த 26 ஆம் திகதி முதல் உலகின் முக்கிய நகரங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வருகின்றன. 26ஆம் திகதி இத்தாலி மிலானோ நகரில் ஆர்ப்பாட்டம் நடைபெற் றது. 2ஆம் திகதி பாரிஸிலும், 3ஆம் திகதி ரோம் நகரிலும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

இந்த ஆர்ப்பாட்டங்களில் நாடா ளுமன்ற உறுப்பினர்களான அநுரகுமார திசாநாயக்க, அர்ஜுன ரண துங்க, டாக்டர் ஜயலத் ஜயவர் தன, அகில விராஜ் காரிய வசம் ஆகியோர் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (சி)

---

## கூடங்குளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாகவும், எனவேதான் இது தொடர்பாக இந்தியாவுடன் பேசவுள்ளார் எனவும் அவர் கூறியுள்ளார்.

இந்த அணுமின் நிலையத்தின் பாதுகாப்பு வலையமைப்பு தொடர்பாக இந்தியாவுடன் பேசப்படவுள்ளதுடன் இந்த வலைய மைப்புக்குள் இலங்கைக்குக் கொண்டு வருவது தொடர்பாகவும் பேசப்படவுள்ளது.

இதனிடையே இலங்கை அரசாங்கமும் இதுபோன்றதொரு அணுமின் நிலையத்தை அடுத்த இருபது வருடங்களில் அமைப் பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது.

இதற்கான சாத்திய ஆய்வை மேற்கொள்வதற்கான நிபுணர் குழுவை பயிற்சிக்காக ரஷ்யாவுக்கு அனுப்பவும் இலங்கை முடிவு செய்துள்ளது.

அணுமின் நிலையத்துக்கான மூலப் பொருளை விநியோகிப்பதற்கும் அதன் கழிவுகளை மீள எடுத்துக்கொள்வதற்கும் ரஷ்யா சம்மதம் தெரிவித்துள்ளது.

ஆயினும் அரசு இந்த அணு மின் நிலையத்தைஅமைப்பதற்கான அனுமதியை அனைத்துலக அணுசக்தி அமைப்பிடம் இருந்து அரசு இன்னும் பெற வில்லை. (உ)

---

## முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாக பணிப்புரை வழங்கினார் என்றும் முன்னாள் மேயர் உவைஸ் மொஹமட் இம்தியாஸ் தெரிவிக்கின்றார்.

---

## ஜனாதிபதிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தான் என்று இந்த அரசுதான் கூறியது. அதே அரசுதான் அவருக்கு சிறைத் தண்டனையையும் வழங் கியுள்ளது.

பொன்சேகாவுக்கு வழங்கப்பட்ட இச் சிறைத்தண்டனையை இன, மத, கட்சி, அரசியல் பேதமின்றி அனைவரும் எதிர்க்கின்றனர். பொன்சேகாவை விடுதலை செய்யக்கோரி சுவரொட்டிகள் ஒட்டுவதைக் கூட அரசு சட்டவிரோதமாகப் பார்க்கின்றது.

பல குற்றவாளிகளுக்கு மன்னிப்பு வழங்கப்படுகிறது. ஆனால், நாட்டில் பயங்கரவாதத்தை ஒழித்தவருக்கு சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. அவரை மீட்க ஐக்கிய தேசியக் கட்சி அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும்.

பொன்சேகாவை விடுதலை செய்யுமாறு எமது தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியிடம் நாளை (இன்று) எழுத்து மூலம் கோரிக்கை ஒன்றை முன்வைக்கவுள்ளார்.

இம்மாதம் மூன்றாம் திகதியில் இருந்து பொன்சேகாவை மீட்கும் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இம்மாதம் எட்டாம் திகதி கொழும்பு புறக்கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக துண்டுப்பிரசுர விநியோக நடவடிக்கை ஒன்று முன்னெடுக்கப்படும். - என்றார். (சி)

---

## அனைத்துலக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தில் அமரும் காலம் இது.

பொலன்னறுவை மாவட்டத்தில் ஐ.தே.க.வின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த ஏர்ல் குண சேகரவும் இப்போது எம்முடன் உள்ளார். முப்பதுவருடங்களுக்குப் பின்னர் நாட்டின் சகல பிரதேசங்களும் தற்போது எமது வசம் வந்துள்ளன.

மக்கள் நிம்மதியாகவும் ஐக்கியமாகவும் வாழக் கூடிய சூழலை எம்மால் உருவாக்க முடியும்'' - என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

---

## கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உட்பட முக்கிய அரச அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

கிழக்கு மாகாணத்தில் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இக் கூட்டத்துக்கு அழைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்களில் உள்ள குறைபாடுகள், சட்டவிரோத செயற்பாடுகள் குறித்து ஜனாதிபதிக்கு மக்களால் அனுப்பிவைக்கப்பட்ட கடிதங்களை அடிப்படையாகக்கொண்டு விடயங்கள் ஆராயப்பட்டன. அதிலேயே அரச காணிகளில் அத்துமீறிய குடியேற்றங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

இதுதொடர்பாக ஜனாதிபதி கூறுகையில், அரச காணிகளில் தமிழ் - முஸ்லிம் - சிங்களவர்கள் - எவராக இருந்தாலும் அத்துமீறிக் குடியேறுவதை தடுத்து நிறுத்த வேண்டும். குறிப்பாக பிரதேச செயலர்கள் கவனம்செலுத்தவேண்டும். நான் இது குறித்து அவதானமாக இருப்பேன் என்று கூறினார்.

குறித்த காணிகள் அரச தேவைகளுக்குப் பயன்படுத்தப்படும் என்றும் ஜனாதிபதி கூறினார். அத்துடன் இவற்றை பொதுத் தேவை கட்டடங்கள் மற்றும் விளையாட்டு மைதானம் ஆகியவற்றுக்கும் பயன்படுத்தலாம் என்றும் அவர் கூறினார்.

அத்துடன், இக்கூட்டத்தில் கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டு - தாமதமடைந்துவரும் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தும் ஆராயப்பட்டது.

ஜனாதிபதியின் இந்தப் பயணத்தை முன்னிட்டு திருகோணமலை நகரில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப் பட்டிருந்தன.

பொலிஸார் திருகோணமலையின் சில இடங்களில் வீடு வீடாகச் சென்று காலையில் குடியிருப்பாளர்களின் குடும்ப அட்டைகளைப் பரிசோதித்தனர். நகரின் முக்கிய வீதிகள், சந்திகளில் பொலிஸார், படையினர் நிறுத்தப்பட்டு வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள் மறிக்கப்பட்டு சோதனை நடத்தப்பட்டது. (உ-சி)


**காணி தேவை**

★ யாழ்.நகரிற்கும் கைதடிக் குறிடையில் ஏ-9 வீதியில் காணி தேவை.

★ கிளிநொச்சியில் ஏ-9 வீதியில் காணி தேவை.

தொடர்பு: விக்ரம் - 0775566823

**SUBRA (14)**

வட்டுக்கோட்டை - சித்தன்கேணி
2011 - புலமைப்பரிசில்
பிரிவு II ஆரம்பம்: 5.10.2010 செவ். 4.00
ஆசிரியர் - கைலைநாதன்.
* வாராந்தம் வெற்றித்தேர்வு பரீட்சை நடத்தப்படும்.

**THE COLLEGE OF CHEMISTRY**
The Specific Centre for Chemistry
A/L - 2011 DAY CLASSES
Sat, sun 7.30 - 9.30 Tu, Th 3.00 - 4.30
★ அலகு ரீதியான தூரிநீட்டல்
★ அச்சடிக்கப்பட்ட பாடக்குறிப்புகள்
★ மாதிரி வினாக்கள்
★ கடந்தகால தேர்வு வினாக்கள்
★ தொடர் பயிற்சிப் பரீட்சைகள்
DIAS B.sc (Hons) Spl in Chem
32, பழம் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

**THE SCIENCE CORNER**
CLOCK TOWER LANE, JAFFNA
CHEMISTRY 2012
இரசாயனக் கணித்தல்கள்
பிரிவு I THU - (5.30 - 6.30) Pm MON - (4.30-5.30)Pm
ஆரம்பம்: 07.10.2010 (THU)
பிரிவு II SAT, SUN - (1 - 2) P.M
ஆரம்பம்: 09.10.2010 (SAT)
By:- அன்பு

**வேலைஆள்கள் தேவை**

எமது நிறுவனத்திற்கு விற்பனையாளர்கள் ஆண், பெண் இருபாலாரும் உடனடியாகத் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
ஸ்ரீ லங்கா புத்தகசாலை,
இல. 234, கே.கே.எஸ். ரோட், யாழ்ப்பாணம்.0779606330

**வீடு வாடகைக்குத் தேவை**

கோண்டாவில், திருநெல்வேலி, கொக்குவில், நல்லூர், கல்வியங்காடு, நாச்சிமார் கோயிலடி போன்ற இடங்களில் வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு:0777771782.

**DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING**

உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைப் பெற, சுயதொழில் ஆரம்பிப்பதற்கு
உங்கள் கணினிகளை நீங்களே அமைத்துக் கொள்வதற்கான 100% பயிற்சி நெறி
♦Chip & Card level Trouble shooting ♦Assembling ♦Variours Mother Board Handling ♦Upgrading ♦Fault Finding ♦Repairing ♦Servicing ♦Printer, Scanner & Com device management ♦Software Installation ♦Configuring Internet Interfacing & Trouble shooting ♦Networking & Etc...
பயிற்சிநெறி முடிவில் கம்பியூட்டர்-ஹார்ட் வெயார் சம்பந்தமான பூரண அறிவைப் பெற்றுக் கொள்வதற்கான உத்தரவாதம்
ஒவ்வொரு மாணவர்களுக்கும் தனிப்பட்ட முறையில் கவனம் செலுத்தப்படும்.
விபரங்களுக்கு நேரில் பயிற்சி ஆரம்பம் 06,09.10.2010
Softview Computer College
43, Arasady Road, Thaddatheru Junction, Jaffna. T.P: 021 2225170

உயர் கல்வி? தொழில்? கவலையை. விடுங்கள்.
Skill migration,Career guidance BIT, CIMA, WEB Develo..
Free : BCS-UK, IELTS / TOEFL, CISCO-CCNA, Hardware, ICDL
Network Software Engineering
ICTA Schol. (Government) Salary Scale more than 50,000$ www.payscale.com
இலங்கை அரசின் ICTA புலமைப்பரிசில் பெறும் எமது நிறுவன மாணவர்களில் சிலர்



Computer Engineer-USA : Y.GAMSHAN. S.SARUPALAN, K.SOORIYA, S.SHYAMALAN,
MCTS-USA : V.LAKSHA, T.SARANYA, K.SHANMUGAPIRIYA, N.JANARTHAN, N.MARYUTHISTA,
CCNA-Cisco : S.SATHES,T.SIVATHASAN, SUN JAVA: S.RANJITH, J.RAJEEVAN. V.SUTHARSAN
MCS Supported By UNDP/JRRP
புலமைப் பரிசிலுக்கும் மேலதிக விபரங்களுக்கும் 324, Palaly Road,Jaffna. Parameswara Junction,
SMS your name & course to 0772 395 895 & get Schol.
Don't miss Closing Date 07.10.2010


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.10.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.